Not for sale

மே - ஜூன் 2018

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom




## சிறிய தீர்க்கதரிசிகள் - பகுதி - 2

கவிஞனான தீர்க்கதரிசி • நம்முடைய நாளுக்கான நாகூமின் தீர்க்கதரிசனம்

ஆபகூக், அறியப்படாத தீர்க்கதரிசி • செப்பனியாவும் ஒரு சுத்தமான பாஷையும்

நான் இந்த வீட்டை மகிமையால் நிரப்புவேன் • சகரியாவின் எட்டு இரவு தரிசனங்கள்

நான் உன்னை நேசித்தேன் ! நீ மறந்துவிட்டாயா ?

**சிறிய தீர்க்கதரிசிகள் - பகுதி -2**

# ஆதியிலே



அவர்களின் செய்திகள் பொதுவாக குறுகியதாக இருந்ததால், பழைய ஏற்பாட்டின் கடைசி 12 தீர்க்கதரிசிகள் சிறிய தீர்க்கதரிசிகள் என்று அழைக்கப்பட்டனர். யூதா மற்றும் அதை சுற்றியிருந்த தேசங்களின் விக்கிரகாராதனையினாலும், அநீதியினாலும் பெற்ற தண்டனைகளைப் பற்றி இவர்களின் தீர்க்கதரிசனம் பேசுகிறது. இவைகள் தற்போதைய தீய உலகத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு, தேவன் பயன்படுத்தும் மிக பெரிய உபத்திரவம் அல்லது பாதிப்புகளின் அம்சங்களை விவரிக்கிறது. சுவிசேஷ யுகத்தின் போது, தேவன் ஆவிக்குரிய ஆலயத்தை (கிறிஸ்து மற்றும் சபை) கட்டியமைப்பதைப் பற்றியும், மேசியாவின் வருகையைப் பற்றியும் மற்றும் உபத்திரவத்திற்குபின் மனுக்குலத்திற்கும், யூதாவுக்கும், மேசியாவினாலும், அந்த ஆலயத்தினாலும் கொண்டுவரப்படும் ஆசீர்வாதங்களைப் பற்றி தீர்க்கதரிசனம் உரைக்கப்படுகிறது.

இங்கு, நாம் மீகா, நாகூம், ஆபகூக், செப்பனியா, ஆகாய், சகரியா மற்றும் மல்கியா தீர்க்கதரிசிகளின் செய்திகளை கவனிக்கிறோம். மீகா தீர்க்கதரிசனத்தின் கடைசி பகுதியையும், அந்த கவிதை முழு மனுக்குலத்திற்கும், இஸ்ரயேலுக்கும் வரக்கூடிய தேவனுடைய ஆசீர்வாதங்களை, எவ்வாறு விளக்குகிறது என்பதையும் "கவிஞனான தீர்க்கதரிசி" என்ற முதல் கட்டுரை காண்கிறது. நினிவேக்கு தேவனுடைய எதிர்காலத் தண்டனையைப் பற்றியும், மகா உபத்திரவக் காலத்திற்கும் அர்மெகதோனுக்கும் அவருடைய ஆயத்தங்களைப் பற்றியும், நாகூமின் தீர்க்கதரிசனம் எவ்வாறு விவரிக்கிறது என்று "நம்முடைய நாளுக்கான நாகூமின் தீர்க்கதரிசனம்" என்ற கட்டுரை ஆராய்கிறது." ஆபகூக், அறியாத தீர்க்கதரிசி", என்ற மூன்றாம் கட்டுரை,தேவனிடம் அவர் கேட்ட இரண்டு கேள்விகளையும், அதற்கு தேவனுடைய பதிலையும் நம் கவனத்திற்கு கொண்டுவருகிறது. (1)யூதாவிலுள்ள தீமை ஏன் தண்டிக்கப்படாமல் விடப்பட்டது ? (2) பாபிலோனியர்களை காட்டிலும் நீதியுள்ள ஜனங்களாகிய யூதாவை தண்டிக்க, நீதியுள்ள தேவன் துன்மார்க்கமான பாபிலோனை எப்படி பயன்படுத்தலாம்? தேவனுடைய பதில் நம்மை திருப்திப்படுத்தவேண்டும். யூதா, பெலிஸ்தியா, எத்தியோப்பியா, அசீரியா ஆகியவற்றைப் பற்றி செப்பனியாவின் எச்சரிக்கைகள்,மற்றும் யூதாவை சீர்திருத்தும்படிக்கு இராஜாவாகிய யோசியாவை இந்த எச்சரிப்புக்கள் எவ்வாறு ஊக்கப்படுத்தியது என்றும் "செப்பனியா மற்றும் ஒரு சுத்தமான பாஷை"என்ற கட்டுரை காண்கிறது.

எருசலேமில் தேவனுடைய வீட்டை மீண்டும் கட்டி முடிக்கும்படி, ஆகாய் யூதர்களை ஊக்குவித்ததையும், இக்காரியம், சுவிசேஷ யுகத்தில் கிறிஸ்துவும் சபையும், தேவனுடைய ஆவிக்குரிய ஆலயமாக கட்டப்படுவதை எவ்வாறு சித்திரிக்கிறதென்றும் "நான் இந்த ஆலயத்தை மகிமையால் நிரப்புவேன்" என்ற அடுத்த கட்டுரை மதிப்பாய்வு செய்கிறது. இந்த தரிசனங்கள் எவ்வாறு தேவனுடைய யுகங்களைப் பற்றிய தெய்வீக திட்டத்தின் பல்வேறு அம்சங்களையும் அதன் இறுதி இலக்கையும், நீதியுள்ள சமாதானமான இராஜ்யத்தையும் பற்றி "சகரியாவின் எட்டு இரவு தரிசனங்கள்" என்ற தலைப்பு மறுஆய்வு செய்கிறது.

இஸ்ரயேலின் தெய்வ வழிபாட்டின் முறையைக் குறித்து, தேவன் அவர்களுடன் உரையாடியதை "நான் உன்னை நேசித் தேன், நீ மறந்துவிட்டாயா? "என்ற இறுதி கட்டுரை காண்கிறது. இவர் லேவி புத்திரர்களை (சுவிசேஷ யுகத்தில் இயேசுவின் சீஷர்கள்) சுத்திகரித்து, மேசியாவின் பூமிக்குரிய இராஜ்யத்தில் , தேசங்களை குணப்படுத்துவார் என்று வரக்கூடிய மேசியாவைப் பற்றி மல்கியா தீர்க்கதரிசியும் தீர்க்கதரிசனம் உரைத்தார். தேவனுடைய இந்த தீர்க்கதரிசிகளின் வாழ்க்கை மற்றும் செய்திகளில் , நம் ஒவ்வொருவருக்கும் சிறந்த புரிந்துக் கொள்ளுதலைப் பெறுவதற்கு இந்த வெளியீட்டில் உள்ள கட்டுரைகள் நமக்கு உதவியாக இருக்கட்டும்.

**மே - ஜுன் 2018 தொகுப்பு 100, எண் 3**

**கவிஞனான தீர்க்கதரிசி** 2
மீகா – பகுதி –2 மறுசீரமைப்பு
**நம்முடைய நாளுக்கான நாகூமின் தீர்க்கதரிசனம்** 4
நாகூம்
**ஆபகூக், அறியப்படாத தீர்க்கதரிசி** 9
ஆபகூக்
**செப்பனியா மற்றும் ஒரு சுத்தமான பாஷையும்** 14
செப்பனியா
**நான் இந்த வீட்டை மகிமையால் நிரப்புவேன்** 19
ஆகாய்
**சகரியாவின் எட்டு இரவு தரிசனங்கள்** 23
சகரியா
**நான் உன்னை நேசித்தேன், நீங்கள் மறந்துவிட்டீர்களா?** 29
மல்கியா
**இன்றைய தீர்க்கதரிசனம்** 34
மனித கடத்தல்

மீகா - பகுதி 2 : மறுசீரமைப்பு

# கவிஞனான தீர்க்கதரிசி



Jeff Mezera

"நானோவென்றால் கர்த்தரை நோக்கிக்கொண்டு, என் இரட்சிப்பின் தேவனுக்குக் காத்திருப்பேன்; என் தேவன் என்னைக் கேட்டருளுவார்." (மீகா 7:7) (இந்த கட்டுரையின் பகுதி -1, "சிறிய தீர்க்கதரிசிகள் - பகுதி 1" என்ற தலைப்பின் கீழ் 2017மே / ஜூன் மாதத்தில் வெளியிடப்பட்டது. )

## மறுசீரமைப்பு:

மறுசீரமைப்பின் அதிகாரங்களான மீகாவின் நான்கு மற்றும் ஐந்து அதிகாரங்கள், இஸ்ரயேல் மற்றும் மற்ற தேசங்கள் மீது இனி வரபோகும் சில ஆசீர்வாதங்களை விவரிக்கிறது. "எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது." (மீகா 5:2)

இயேசு மற்றும் அவருடைய வம்சம் பெத்லகேமிலிருந்து எழும்பும் என்று உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனம், மத்தேயு மற்றும் யோவான் சுவிசேஷங்களில் மேற்கோள் காட்டப்படுகிறது. "இவரே சமாதான காரணர்; அசீரியன் நம்முடைய தேசத்திலே வரும் போதும், நம்முடைய அரண்மனைகளை மிதிக்கும் போதும், ஏழு மேய்ப்பரையும் மனுஷரில் எட்டு அதிபதிகளையும் அவனுக்கு விரோதமாக நிறுத்துவேன். இவர்கள் அசீரியா தேசத்தையும், நிம்ரோதின் தேசத்தையும், அதினுடைய வாசல்களுக்கு உட்புறமாகப் பட்டயத்திற்கு இரையாக்குவார்கள்; அசீரியன் நம்முடைய தேசத்தில் வரும்போதும், நம்முடைய எல்லைகளை மிதிக்கும்போதும் அவனுக்கு நம்மைத் தப்புவிப்பார்."(மீகா 5:5,6)

யூதாவின் மேல் சனகரீபின் படையெடுப்பு, லாகீஸ் மற்றும் எருசலேமின் முற்றுகை, அசீரிய இராஜாவுக்கு எசேக்கியாவின் காணிக்கை, சனகரிப் தனது தலைநகரமான நினிவேக்கு திரும்புதல், அவருடைய சொந்த குமாரர்களின் கைகளில் அவர் மரித்த காரியம் அனைத்தும், வேதாகமம் மற்றும் அசீரியரின் தொல்லியலில் காணப்படுகிறது.

அசீரிய இராஜா எருசலேமுக்கு எதிராக வந்தபோது, தேவன் அந்த நகரத்தை பாதுகாப்பார் என்று ஏசாயா தீர்க்கதரிசனம் உரைத்தார். "ஆகையால் கர்த்தர் அசீரியா ராஜாவைக்குறித்து: அவன் இந்த நகரத்துக்குள் பிரவேசிப்பதில்லை; இதின்மேல் அம்பு எய்வதுமில்லை; இதற்கு முன்பாகக் கேடகத்தோடே வருவதுமில்லை; இதற்கு எதிராகக் கொத்தளம் போடுவதுமில்லை.", "என்னிமித்தமும் என் தாசனாகிய தாவீதினிமித்தமும், நான் இந்த நகரத்தை இரட்சிக்கும்படிக்கு இதற்கு ஆதரவாயிருப்பேன் என்பதைக் கர்த்தர் உரைக்கிறார் என்று சொல்லியனுப்பினான்." (ஏசாயா 37:33,35)

சனகரிபுடனான இந்த யுத்தத்தில் தேவன் அதிசயமாய் இஸ்ரயேலைத் தப்பிப்போகச் செய்தார். "அன்று இராத்திரியில் சம்பவித்தது என்னவென்றால்: கர்த்தருடைய தூதன் புறப்பட்டு, அசீரியரின் பாளயத்தில் லட்சத்தெண்பத்தையாயிரம்பேரைச் சங்கரித்தான்; அதிகாலமே எழுந்திருக்கும்போது, இதோ, அவர்கள் எல்லாரும் செத்த பிரேதங்களாய்க் கிடந்தார்கள்." (11இராஜாக்கள் 19:35) சிகாகோவின் ஓரியண்டல் இன்ஸ்டியூட் பல்கலைக்கழகத்தில், சனகரிபால் எழுதப்பட்ட முப்பட்டியின்(prism) நகல்வேதாகமபதிவுகளை உறுதிப்படுத்துகிறது." அசீரிய பதிவுகள் எருசலேமிலிருந்து திடீரென்று பின்வாங்குவதைப் பற்றிக் கூறுகின்றன, ஏனென்றால் அவற்றின் வீழ்ச்சி நிரந்தரமானதாக இருந்ததால் பாராட்டக்குரியது" (1997, Chaim Herzog and Mordechai Gichon, *Battles of the Bible*, page 254)

எருசலேமில் எந்த வெற்றியைப் பற்றியும், அல்லது தாக்குதல் ஏன் முறிந்து போனதோ என்றும் அசீரிய குறிப்பில் சொல்லப்படவில்லை. இராஜா உண்மையில் எருசலேமை கைப்பற்றியிருந்தால், அவர் தனது மற்ற வெற்றிகளைக் குறித்து பெருமைப் பாராட்டியிருப்பார். அதற்கு பதிலாக, அவர் முடிந்தவரை துவக்கத்தில் அரசியல் சுழற்சியின் நல்ல ஒரு மாதிரியை ஏற்படுத்த முயன்றார். மீகா 5:5ல் குறிப்பிடப்பட்ட எதிர்கால யுத்தத்தில், இஸ்ரயேலின் விடுதலை இன்னும் அற்புதமாக இருக்கும். "இவரே சமாதான காரணர்; அசீரியன் நம்முடைய தேசத்திலே வரும் போதும், நம்முடைய அரண்மனைகளை மிதிக்கும் போதும், ஏழு மேய்ப்பரையும் மனுஷரில் எட்டு அதிபதிகளையும் அவனுக்கு விரோதமாக நிறுத்துவேன்."

மீகாவின் நாளில் அசீரியா மிகவும் அஞ்சப்படத்தக்கதாக இருந்தது. மீகா 5:5ல் சொல்லப்படும் அசீரியர்கள் , எப்பொழுதும் இஸ்ரயேலின் எதிரிகளையும், சபையின் எதிரிகளையும் அல்லது இராஜ்யத்தில் பாவத்தையும் அடையாளப்படுத்துகிறது.

ஏசாயாவில், அசீரியர்கள் அந்தி கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் நிழலாக இருக்கிறது. (ஏசாயா 10 மற்றும் 14 அதிகாரத்தில் உள்ள பாபிலோனையும் உள்ளடக்கும்) ஆயிரவருட யுகத்தின் துவக்கத்தி ஏழு மேய்ப்பர்கள் குறிப்பிடுகின்றார்கள். அந்த எட்டு பிரபுக்கள், பூமியின் மேல் ஆட்சி செய்யும் முற்பிதாக்கள். தேவனுடைய எதிராளிகளுக்கு விரோதமாக இயேசு இந்த இருவகுப்பாரையும் நடத்துவார். இது ஏசாயா 1:26,"உன் நியாயாதிபதிகளை முன்னிருந்தது போலவும், உன் ஆலோசனைக்காரரை ஆதியில் இருந்தது போலவும் திரும்பக் கட்டளையிடுவேன்; " என்பதற்கு ஒத்து போகிறது.

"இவர்கள் அசீரியா தேசத்தையும், நிம்ரோதின் தேசத்தையும், அதினுடைய வாசல்களுக்கு உட்புறமாகப் பட்டயத்திற்கு இரையாக்குவார்கள்; அசீரியன் நம்முடைய தேசத்தில் வரும்போதும், நம்முடைய எல்லைகளை மிதிக்கும்போதும் அவனுக்கு நம்மைத் தப்புவிப்பார்." (மீகா 5:6) சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின், முற்பிதாக்கள் உடனடியாக காட்சிக்கு வருவார்கள். அவர்கள் தேசத்தில் வெளிப்படையாக காணக்கூடிய பிரதிநிதிகளாகவும், தலைவர்களாகவும் பூமியில் இருப்பார்கள். ஆடுகளைத் துன்புறுத்தவதற்கென்று அல்ல, அவைகளை பின் தொடரும் எதிரிகளிடமிருந்து பாதுகாக்கும்படிக்கு அவர்கள் ஒரு பட்டயத்தோடு மேய்ப்பார்கள்.

"யாக்கோபிலே மீதியானவர்கள் கர்த்தராலே வருகிற பனியைப் போலவும், மனுஷனுக்குக் காத்திராமலும், மனுபுத்திரருக்குத் தாமதியாமலும், பூண்டுகள்மேல் வருகிற மழைகளைப்போலவும், அநேக ஜனங்களின் நடுவிலே இருப்பார்கள்." (மீகா 5:7) தேசங்களுக்கு பனியும் மழையும் தேவனிடமிருந்து வருகிறது. தண்ணீர் புத்துயிர் அளித்து, புத்துணர்வு தருகிறது. புல்லின் மேல் பனிப் படந்திருப்பது போல, ஜாதிகளுக்கு (புறஜாதியை) புத்துணர்வு அளிக்கவும், புத்துயிர் கொடுப்பதுமே இராஜ்யத்தில், இஸ்ரயேல் மற்றும் சபையின் வேலையாக இருக்கும். புறஜாதியாரை இஸ்ரயேலராக மாற்றும்படியாக, இஸ்ரயேல் தேசம் பனி அல்லது மழையைப் போல உலகம் முழுவதும் பரவியிருக்கும்.

"யாக்கோபிலே மீதியானவர்கள், சிங்கம் காட்டுமிருகங்களுக்குள்ளே இருக்கிறதற்குச் சமானமாகவும், கடந்துபோய் மிதித்துத் தப்புவிப்பார் இல்லாமல் பீறிப்போடுகிற பாலசிங்கம் ஆட்டுமந்தைகளுக்குள்ளே இருக்கிறதற்குச் சமானமாகவும் ஜாதிகளுக்குள் அநேக ஜனங்களின் நடுவிலே இருப்பார்கள்."(மீகா 5:8) தேவனுடைய வலிமை எதிர்க்க முடியாதது. இஸ்ரயேல் மூலம் செயல்படக்கூடிய அவருடைய பலத்தை ஒருவராலும், எதிர்த்து நிற்க முடியாது.

"ஆனாலும் கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்பட்டிருக்கும், எல்லா ஜாதிகளும் அதனிடத்திற்கு ஓடிவருவார்கள்.திரளான ஜாதிகள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும். திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்." (மீகா 4:1-2, ஏசாயா 2:1-4) இப்பொழுது விசுவாசியாத ஜனங்களுக்கு நம்பிக்கை கொடுக்கும்படிக்கு, அவர்கள் கர்த்தருடைய வழிகளைக் கற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுவார்கள். (ஏசாயா 26:9) ஜனங்கள் இனி யுத்தங்களை கற்பதில்லை. (மீகா 4:3-4, ஏசாயா 2:4) வெகு சீக்கிரத்தில், தேவனுடைய ஆட்சி பூமியெங்கும் மிக உயர்ந்த அரசாங்கமாக பூமியின் மேல் ஸ்தாபிக்கப்படுவதை நாம் காண்போம்.

மீகாவின் காலத்தில் தேவன் இஸ்ரயேலருக்கு அற்புதமாக உதவிச் செய்தார். வரலாறு முழுவதிலும், அவர்கள் மேல் அவருடைய பாதுக்காப்பான கரத்தை வைத்திருந்தார். மற்றும் எதிர்காலத்திலும் இந்த தெய்வீக பாதுக்காப்பு தொடரும். நம்மீது எந்த அளவுக்கு அதிகமாகஅவருடைய கரத்தை வைத்திருக்கிறார் மேலும்,அவர் இஸ்ரயேலை காட்டிலும் நமக்கு உதவி செய்வார். நாம் அவரிடம் உண்மையுள்ளவர்களாக இருந்தால் மட்டுமே இதை நமக்கு செய்வார்.

# நம்முடைய நாளுக்கான நாகூமின் தீர்க்கதரிசனம்



"கர்த்தர் நல்லவர், இக்கட்டுநாளிலே அரணான கோட்டை; தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார்." (நாகூம் 1:7)

Robert Goodman

சிறிய தீர்க்கதரிசிகளில் நாகூம் ஏழாவதானவர். அசீரியா சாம்ராஜ்யத்தின் நியாயத்தீர்ப்பையும் அழிவையும் அவருடைய எழுத்துக்கள் மையப்படுத்துகின்றன. நாகூம் என்ற பெயருக்கு "தேற்றுபவர்" அல்லது "தவறுகளுக்காக மனம் வருந்துபவர்" என்று பொருள். அவருடைய தீர்க்கதரிசன எழுத்துக்கள் யூதாவின் கோத்திரத்திற்கு நம்பிக்கையும் தூண்டுதலும் அளித்தன. அவருடைய வாழ் நாட்களில்,அசீரிய சாம்ராஜ்யத்தின் அடக்கு முறையின் கீழ் யூதா உபத்திரவப்பட்டது. இந்த காலம், பாபிலோனிய சாம்ராஜ்யத்திற்கு சற்று முந்தய காலமாகும்.

ஏறக்குறைய நூறு ஆண்டுகளாக யூதா அசீரியர்களுடன் போராடிக்கொண்டிருந்தனர். நினிவே தனது முன்னாள் குடிமக்கள் தாக்கப்பட்டு ( மேதியர்கள், பாபிலோனியர்கள் மற்றும் பெர்சியர்கள்) எரித்து போடும் வரையில் அதாவது 612கி.மு வரையில் அவர்களின் கொடுங்கோன்மை தொடர்ந்தது. நாகூம் தீர்க்கதரிசனத்தில் தேவன் வாக்களித்தபடியே, சில வருடங்களுக்குள், அசீரிய சாம்ராஜ்யம் நித்தியமாக முடிவடைந்தது.

நாகூமின் எழுத்துக்களின் வழியாக தேவன் அதிகமாக வெளிப்படுத்தினாலும், அவருடைய தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றி மிகக் குறைவாகவே அறியப்பட்டுள்ளது. அவர் எங்கு பிறந்தார் மற்றும் எங்கு வாழ்ந்தார் என்பதைப் பற்றி விவிலிய அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் உண்டு. நாகூம் 1:1ம் வசனம் அவரை எல்கோசான் என்று விவரிக்கிறது. "எல்கோசின்" சரியான இடம் காலப்போக்கில் காணாமல் போனது. ஆனால், அது கலிலேயாக் கடலின் வடமேற்கு கரையோரத்தில் அமைந்திருப்பதாக அநேகர் நம்புகிறார்கள். வட ஈராக்கின் பேஹித்ரா மலைகளின் அடிவாரத்தில் உள்ள "அல்கோஷ்" அல்லது "அல்குஷ்" என்ற ஒரு அசீரிய நகரத்தில், நாகூம் வசித்து வந்தார் என்று மற்ற அறிஞர்கள் வாதாடுகிறார்கள், ஆனால் நாகூம் யூதாவுக்கு ஒரே தீர்க்கதரிசியாக இருந்ததினால் இது சாத்தியம் இல்லை.

யூதாவுக்கு தீர்க்கதரிசனம் உரைத்த நாகூம், எரேமியா, செப்பனியா ஆகியோர் சமகாலத்தவர்கள். நாகூமின் செய்திகள், அசீரியர்கள் மேல் வரும் தேவனுடைய நியாயத்தீர்ப்புகளையும், அழிவையும் பற்றியிருந்தது. பாபிலோனின் அதிகாரத்திற்குக் கீழ்ப்படியும்படி யூதாவை எரேமியா எச்சரித்தார். மற்றும் மனந்திரும்புதலுக்கும், நியாயத்தீர்ப்பிற்கும், மறுசீரமைப்புக்குரிய வாக்குத்தத்தத்திற்கும் செப்பனியாவின் தீர்க்கதரிசனம் கவனம் செலுத்தியது. அவர்கள் அசீரியாவின் வீழ்ச்சியோடு சம்பந்தப்பட்ட செய்திகளைக் கொண்டிருந்தார்கள்.

## மூன்று அதிகாரங்கள்:

நாகூம் புத்தகம் கவிதை நடையில் எழுதப்பட்டுள்ளது, அது தன்னுடைய தீர்க்கதரிசன செய்திக்கு வல்லமை மற்றும் நேர்த்தியையும் சேர்க்கிறது. புத்தகத்தின் மூன்று அதிகாரங்கள், இரண்டு முக்கிய கருப்பொருளாக பிரிக்கப்பட்டுள்ளது. முதலாம் அதிகாரம் அசீரியாவின் வீழ்ச்சியை விவரிக்கிறது. இரண்டாம் மற்றும் மூன்றாம் அதிகாரங்கள் அசீரியா மற்றும் அதன் தலைநகரமான நினிவே மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பை விவரிக்கிறது.

தேவன் தம்முடைய ஜனங்களை பாதுகாத்து, மீட்கும்போது, அவரது எதிரிகளை பழிவாங்குவார் என்று நாகூம் முதல் அதிகாரம் வெளிப்படுத்துகிறது. ".அவர் சமுத்திரத்தை அதட்டி, அதை வற்றிப்போகப்பண்ணி, சகல ஆறுகளையும் வறட்சியாக்குகிறார்; பாசானும் கர்மேலும் சோர்ந்து, லீபனோனின் செழிப்பு வாடிப்போகும்.அவர் சமுகத்தில் பர்வதங்கள் அதிர்ந்து மலைகள் கரைந்துபோகும்; அவர் பிரசன்னத்தினால் பூமியும் பூச்சக்கரமும் அதில் குடியிருக்கிற அனைவரோடும் எடுபட்டுப்போம்." என்று நாகூம் 1:4,5 வசனங்கள் கூறுகிறது. தேவனுடைய

நியாயத்தீர்ப்பை எதுவும் நிறுத்த முடியாது. தேவன் தம்முடைய ஜனங்கள் அவரை வணங்கும்படிக்கு அவர் ஒரு அரணாக இருக்கிறார் என்பதையும் இந்த அதிகாரம் உறுதிப்படுத்துகிறது. தேவன் அவருடைய எதிரிகளை அழிப்பது, பயத்தினால் பூமி நடுங்குவது, மலைகள் மெழுகு போல உருகுவது போன்ற அதே காட்சியை, 97ம் சங்கீதத்திலும் காணலாம்.

நாகூமின் இரண்டாவது மற்றும் மூன்றாவது அதிகாரங்கள், நினிவே மீதான தீர்ப்பை அறிவிக்கிறது. இரண்டாம் அதிகாரத்தில், அசீரியாவின் வல்லமை ஆக்கிரமிப்பாளர்களின் கரத்தில் சுள்ளிக்கட்டை போல் கருகிப்போனது, நகரம் அதன் அனைத்து செல்வங்களையும் இழந்தது, அவைகள் வீணாக வீசப்பட்டது. தடுக்க முடியாத தேவனுடைய நியாயத்தீர்ப்புகளே, நினிவே அழிவதற்கான காரணம் என்று மூன்றாம் அதிகாரம் காட்டுகிறது. எந்த மனிதனும் இதை நிறுத்த முடியாது. ஏசாயா 10:24,25 ம் வசனத்தில் "ஆகையால் சீயோனில் வாசமாயிருக்கிற என் ஜனமே, அசீரியனுக்குப் பயப்படாதே; அவன் உன்னைக் கோலால் அடித்து, எகிப்தியரைப்போல் தன் தண்டாயுதத்தை உன்மேல் ஓங்குவான். ஆனாலும் இன்னும் கொஞ்சக் காலத்துக்குள்ளே என் உக்கிரமும், அவர்களைச் சங்கரிக்கப்போகிறதினால் என் கோபமும் தீர்ந்துபோம் என்று சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்." என்று தேவன் அவர்களுக்கு சொல்லுகிற போது, இந்த நியாயத்தீர்ப்பு விவரிக்கப்பட்டுள்ளது.

பெரிய நகரமாகிய நினிவே (இன்றைய மோசூல் அருகே) முன்னர் அதன் குடிமக்களாக இருந்த நாடுகளிடம் அடிமைகளாக வீழ்ந்தது. அவர்கள் கொள்ளையடித்து, நகரத்தை வீழ்த்தி, அதனை தரையிலே சுட்டெரித்தார்கள். 20ம் நூற்றாண்டில் தொல்பொருள் அகழ்வாரய்ச்சி நடத்தப்படும் வரை அதன் அளவீடும், அதன் கம்பீரியமும் வெளிப்படவில்லை. தற்போது டைக்ரிஸ் ஆற்றின் கிழக்குப் பகுதியில், இன்றைய நகரமான மோசூலுக்கு எதிரே நினிவே இருந்தது.

நினிவே அசீரியாவின் தலைநகரமாக இருந்தது. மற்றும் அந்த பட்டணம், நாகரீக உலகத்திற்கான வர்த்தக மையத்தின் சிகரமாக இருந்தது. நினைவுச்சின்ன அளவு மற்றும் அதன் கட்டிடங்களின் நேர்த்தியான அழகுகளாலும் அதனுடைய வல்லமை நிரூபிக்கப்பட்டது. இது உண்மையில் "மகா நகரமாக" யோனாவினால் (யோனா 3:3) விவரிக்கப்பட்டுள்ளது. கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையே உள்ள பட்டு வழிசாலையில் நகரம் அமைந்திருந்தது. பட்டு, நறுமணப்பொருட்கள் மற்றும் பிற பொருட்களின் வணிகர்கள் அதன் வாயிலாக போக்குவரத்துமாக இருந்தார்கள். டைக்ரிஸ் நதி மற்றும் ஆற்றுப் பகுதியிலிருந்து பல மைல்கள் கிழக்கு நோக்கி இந்த பெரிய நகரம் விரிவடைந்திருந்தது. அக்லோஷ் மற்றும் நினிவேக்கும் இடையே இருந்த வளமான சமவெளி, ஏராளமான உணவு வழங்கக்கூடிய ஒரு விவசாய பகுதியாக இருந்தது.

அசீரியர்கள் போர்க்குணமுள்ளவர்களும், மிருகத்தனமானவர்களும், தங்களுடைய இரும்பு பிடியின் கீழ் தேசங்களை அச்சுறுத்தி தங்கள் இராஜ்யத்தை விரிவுப்படுத்தினர். மிரட்டலினாலும், அச்சுறுத்தலினாலும் வெளிநிலங்களை தங்களுடையவைகள் என்று உரிமை கோரினார்கள். நாகூம் 3:1ல், நினிவே பட்டணத்தை இரத்தம் சிந்தும் நகரம் என்று விவரிக்கப்படுகிறது. "இரத்தப்பழிகளின் நகரத்திற்கு ஐயோ! அது வஞ்சகத்தினாலும் கொடுமையினாலும் நிறைந்திருக்கிறது; கொள்ளை ஓயாமல் நடக்கிறது."

## அசீரியாவின் அழிவு:

இது அசீரிய சாம்ராஜ்யத்தின் முடிவைப் பற்றிய தீர்க்கதரிசன புத்தகமாகும். ஆயினும், பல தீர்க்கதரிசனங்களை போல, இது நம்முடைய நாளுக்கும் பொருந்தக்கூடியதாக உள்ளது.

"கர்த்தர் எரிச்சலுள்ளவரும் நீதியைச் சரிக்கட்டுகிறவருமான தேவன்; கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவர், உக்கிரகோபமுள்ளவர்; கர்த்தர் தம்முடைய சத்துருக்களுக்குப் பிரதிபலன் அளிக்கிறவர், அவர் தம்முடைய பகைஞருக்காகக் கோபத்தை வைத்து வைக்கிறவர்." என்று நாகூம் 1:2ம் வசனம் கூறுகிறது. புதிய மொழிபெயர்ப்பு, இந்த வார்த்தையின் அர்த்தத்தை துல்லியமாக மொழிபெயர்ப்பு செய்துள்ளது. "ஆண்டவர் அநீதியைப் பொறுக்காத இறைவன், பழிவாங்குபவர், ஆண்டவர் பழிவாங்குபவர், வெகுண்டெழுபவர் தம் எதிரிகளைப் பழிவாங்குபவர், தம் பகைவர் மீது சினம் கொள்பவர்." "பழிவாங்குதல்", மற்றும் "நீதியைச் சரிக்கட்டுதல்" என்று சொற்கள்(avenge & revenge) ஒரே எபிரெய வார்த்தையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. (ஸ்டிராங்ஸ் H5358, -முற்காலத்திய வார்த்தை, இதற்கு பழிவாங்குதல் அல்லது தண்டித்தல் என்று பொருள்)

தண்டித்தல் என்பதை விட பழிவாங்குதல் என்ற வார்த்தையின் பொருளே, இங்கு துல்லியமாக அடையாளப்படுத்தப்படுகிறது. நீதியை சரிக்கட்டும் நோக்கத்துடன், தவறு செய்தவர்களை தண்டிப்பதே, நீதியை சரிக்கட்டுதலுக்கான பொருளாகும். அதே நேரத்தில் பழிவாங்குதல் என்ற வார்த்தை, தாக்குதல் மற்றும் பழிக்கு பழி வாங்கும் நோக்கத்துடன் கூடிய கெட்டதும்பழிவாங்குதலுடன் சம்மந்தப்பட்டதும், தவறாக நடத்துதல் போன்றவைகளையும் உள்ளடக்கும். நாகூம் 1:3 ம் வசனம் கூறுகிறபடி, "கர்த்தர் நீடிய சாந்தமும், மிகுந்த வல்லமையுமுள்ளவர்; அவர்களை ஆக்கினையில்லாமல் தப்புவிக்க மாட்டார்; கர்த்தருடைய வழி சுழல் காற்றிலும் பெருங்காற்றிலும் இருக்கிறது; மேகங்கள் அவருடைய பாதத்தூளாயிருக்கிறது."

ஒரு தவறுக்காக நீதியை சரிக்கட்டுவதே தேவனுடைய பழிவாங்குதலாகும். இந்த நீதியான கொள்கைகள், தனிப்பட்ட நபர்களுக்கு மட்டும் அல்ல, முழு சமுதாயத்திற்குப் பொருந்தும். கர்த்தர் துன்மார்க்கரின் புயத்தை முறித்து போடுகிறார் என்றும், உடைந்த கையை அவர் குணமாக்குவார் என்றும் சங்கீதம் 37:17ம் வசனம் கூறுகிறது. நீதியை சரிக்கட்டுதல் என்பதற்கு, சரிக்கு சரி செய்யாமல், நிலைமையை சரி செய்வதாகும். உபத்திரவப்படுத்துவதோ, சித்தரவதை செய்வதோ, துன்புறுத்தலோ, தேவனுடைய குணாம்சத்தில் இல்லை.

"கர்த்தர் நல்லவர், இக்கட்டு நாளிலே அரணான கோட்டை; தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார்." என்று நாகூம் 1:7ல் தீர்க்கதரிசி அறிவிக்கிறார். அசீரியா முற்றிலும் அழிக்கப்பட்டு, என்றென்றும் மறைந்துவிடும் என்று யூதாவிற்கு ஒரு அற்புதமான உறுதி அளிக்கப்பட்டது. நம்முடைய நாட்களில், "உபத்திரவ நாள்" அல்லது "உபத்திரவ காலத்தில்" அவரை நம்புகிறவர்களை கர்த்தர் பாதுகாப்பார் என்று உறுதியாக நம்பலாம். நம்மைச் சுற்றியுள்ள உலகின் சிதைவுகளை நாம் சாட்சியாகக் காண்கையில், இது நமக்கு ஆறுதலளிக்கிறது. ஏனெனில், தேவன் அவருடைய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் மந்தமானவர் அல்ல என்பதை நாம் அறிந்திருக்கிறோம். எது வந்தாலும், அந்த விசுவாசத்தில் அவரை நாம் உறுதியாக நம்பலாம்.

வேதவாக்கியங்களை நாம் திருப்பும் போது, நாகூம் இரண்டு மற்றும் மூன்று அதிகாரங்களில் காணப்படும் விவரங்களோடு இணைந்த பல வேத பகுதிகள் உண்டு. உபத்திரவத்தின் காலத்தை குறித்து தானியேல் 12:4ல் வாசிக்கிறோம். "..அப்பொழுது அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகிப்போம் என்றான்." உலக மயமான போக்குவரத்தும் ஆண்டவரின் கண்ணுக்கு புலப்படாத திரும்புதலுக்கும் -அறிவிலும், உலக போக்குவரத்திலும் காணப்படும் பெரிதளவான பெருக்கத்தை ஒரு ஆதாரமாக இந்த வசனம் இணைக்கிறது. அதேபோல, "அவனுடைய பராக்கிரமசாலிகளின் கேடகம் இரத்தமயமாகும், அவனுடைய யுத்த வீரர் இரத்தாம் பரந்தரித்துக் கொண்டிருக்கிறார்கள். அவன் தன்னை ஆயத்தம்பண்ணும் நாளிலே இரதங்கள் ஜூவாலிக்கிற கட்கங்களை உடையதாயிருக்கம், ஈட்டிகள் குலுங்கும்." என்று நாகூம் 2:3ல் கூறுகிறார். பூமியின் நெடுஞ்சாலைகளில், (அகல பாதைகள்) இரவில் பயணிக்கும் லட்சக்கணக்கான வாகனங்களால் பிரகாசிக்கும் காட்சிகளை, விண்வெளியிலிருந்து காண்பதை நமக்கு நினைவுபடுத்தப்படுகிறது.

## நம் காலத்திலும் தேவனுடைய நியாயத் தீர்ப்புகள் உண்டு:

"அவருடைய ஆயத்த நாள்" என்ற சொற்றொடரை நாம் நாகூம் 2:3ல் காணலாம். முதலாவதாக, நாகூமின் காலத்தில், அசீரிய சாம்ராஜ்யத்தை அழிப்பதற்காக தேவன் ஏற்பாடு செய்த ஆயத்தத்திற்கு பயன்படுத்தப்பட்டது. இந்த தீர்க்கதரிசனம் நம்முடைய காலத்திற்கும் பொருந்தும். உபத்திரவ காலத்தின் போது, யாக்கோபின் இக்கட்டு காலத்தில் கொந்தளிப்பான சம்பவங்களுக்கான கூறுகளையும் நிலைமைகளையும் தேவன் ஆயத்தப்படுத்துகிறார். இந்த உலகத்தின் பழைய அமைப்புகள் அழிக்கப்பட்ட பின்னரே ஒரு புதிய யுகத்திற்குள் தேவன் வழிநடத்தமுடியும். நினிவே பட்டணத்தைபோல, தற்போதைய தீமையான உலகம் கொள்ளை அடிக்கப்பட்டு, பின்னர் தேவனுடைய கோபத்தின் அக்கினியினால் சுட்டெரிக்கப்படும்.

• அவருடைய ஆயத்த நாளில் பல மகா முக்கிய வேலைகளை தேவன் அரங்கேற்றி வருகிறார். பழைய ஒழுங்குகளை அழித்து, புதிய ஒழுங்குகளை நியமிக்க இந்த சம்பவங்கள் அவசியம். இந்த அமைப்புகள் அழியாமல், தேவனுடைய பெருந்திட்டம், ஒரு உறுதியான அஸ்திபாரத்தின் மேல் கட்டமைக்கப்பட முடியாது.

இந்த காலத்தில் , இஸ்ரயேல் தேசம் மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டதே, ஒரு முக்கிய வேலையாகும். கிட்டதிட்ட 2000 ஆண்டுகளாக யூதர்களக்கென்ற ஒரு தேசம் இல்லாததினால் மீண்டுமாக உருவாக்கப்படட இஸ்ரயேல் தேசம் ஒரு அதிசய வேலையாக உள்ளது. 1870ல் மீண்டும் கூட்டி சேர்க்கப்படுதல் துவங்கப்பட்டு, நம் நாளிலும் அது தொடர்கிறது. இஸ்ரயேல் இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை வழங்குவதற்கு ஒரு திறவு கோலானதால், புதிய ஒழுங்கமைப்பு துவங்கப்படுவதற்கு முன் அவர்கள் புத்துயிர் பெற வேண்டியது மிக அவசியம். அவர்கள் கூட்டி சேர்க்கப்படாவிட்டால், இஸ்ரயேலிலிருந்து ஆசீர்வாதங்கள் எப்படி வரும்?

"உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்" என்று தேவன் யாக்கோபிடம் வாக்களித்தார். (ஆதியாகமம் 28:14) பூமியின் மீதெங்கும் உள்ள யூதர்கள் மீண்டும் கூட்டி சேர்க்கப்படவேண்டும். வேறு எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு, இன்று இஸ்ரயேலில் அதிகமான யூதர்கள் இருக்கிறார்கள். ஆனால் அமெரிக்காவில், யூதர்களில் பெரும்பாலோர் இன்னும் வசிக்கிறார்கள். எனவே வருங்காலத்தில் யூதர்கள் அமெரிக்காவிலிருந்து, வெளியேறி இஸ்ரயேலுக்கு திரும்புவார்கள் என்று எதிர்நோக்கிகொண்டிருக்கிறோம். இந்த விஷயங்கள் நிறைவேறினபின்னரே, அதை தொடர்ந்து வரும் தேவனுடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்கப்படுவதற்கு முன் யாக்கோபின் இக்கட்டு காலத்தின் கடைசி கட்டத்திற்கான சூழல், அமைக்கப்படும்.

சபையின் இறுதி தேர்வுக்கான இறுதி காலமும், அவருடைய ஆயத்த நாளாகும். இக்காலத்தின் போது, கோதுமை மணியும், களைகளும் பிரிக்கப்பட்டு, தேவ சபையின் சுத்திகரிப்பின் வேலைகள் நிறைவடையும். "அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார்" என்று நாம் மத்தேயு 25:31ல் வாசிக்கிறோம். ஆட்டுக் குட்டியானவரின் திருமணத்திற்கு பின், பழைய அமைப்புகளின் மேல் தீர்ப்பு வழங்கவும், ஒரு புதிய உலக 'ஒழுங்கை ஏற்படுத்தவும், கிறிஸ்து தம்முடைய பரிசுத்த தூதர்களுடன்(சபை) கிறிஸ்து திரும்பி வருவார் என்பதை இது குறிப்பிடுகிறது.

ஆயத்த நாளின் போது, கிறிஸ்து பழைய ஒழுங்குகளையும், முறைகளையும் இடித்து போடுவதற்கு அவைகளை கூட்டி சேர்க்கிறார். அறிவின் பெருக்கம் இந்த வேலைக்கு ஒருங்கிணைந்திருக்கும். மதம், சமூதாயம், அரசியல், மற்றும் பொருளாதாரம், இவைகள் அனைத்தும் துல்லியமாக முடுக்கிவிடப்பட்டுள்ளது. நம்முடைய நாளில் உடனடி தொழில் நுட்பம் இருந்தாலும், இந்த பலவீனமான அமைப்புகள், சரிவின் விளிம்பில் உள்ளது. ஒரு நாட்டில் மேல் ஒரு பயங்கரமான தாக்குதல் உலக, அளவிலான பொருளாதார வீழ்ச்சியைத் தூண்டலாம் என்று செப்டம்பர் 11ம் தேதி அன்று நாம் கற்றுக்கொண்டோம். உலக நிதி சந்தைகளில் ஒன்றோடொன்று தொடர்புடையவைகளாக இருப்பதினால், அவற்றில் இடையூறு ஏற்பட்டால் உலகெங்கிலும் தோல்விகளைக் கொண்டுவரலாம். கிரேக்கத்தின் கடன்களை செலுத்த முடியாததால் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் உலகப் பொருளாதாரம் ஆகியவற்றின் ஸ்திரப்பாட்டை அது அச்சுறுத்திய போது, இக்காரியத்திற்கு விளக்கம் அளிக்கப்பட்டது. ஸ்திரமாக நிற்கும்படிக்கு பெயர் சபை அமைப்புகளும் வியாபாரத்தில் ஈடுபட துணிந்துள்ளது. சபைகளில் வருபவரின் எண்ணிக்கை குறைவதால், பிற வருமான ஆதாரங்களை அவர்கள் பெற வேண்டியிருக்கிறது. இப்போது சபைகள் சுகாதாரம், ஆலோசனை மையங்கள், கல்வி, முதியவர் பராமரிப்பு, வெளியீடுகள், ஊடகம் மற்றும் தங்கள் நிதிகளை உயர்த்தும் மற்ற காரியங்களில் ஈடுபட்டுள்ளன.

அரசியல் ரீதியாக, “பிரச்சனைகளை சரி செய்வதற்கு” இந்த உலகம் ஏதோ ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ஆரவாரமாக கூக்குரலிடுகிறது. ஆயினும், தோல்வி அடையும் அரசியல் வாக்குறுதிகளால், ஜனங்கள் தொடர்ந்து போஷிக்கப்படுகிறார்கள். அதிகாரத்தில் இருப்பவர்கள், அனைவருக்கும் செலவழிக்கும் அந்த அதிகாரத்தை தங்களுக்கே நன்மை உண்டாக பயன்படுத்திக் கொள்கிறார்கள். மனுக்குலத்திற்கு நன்மை பயக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட சமூக ஊடகம் உலகெங்கிலும் உள்ள உறுதியற்ற தன்மைக்கு வழிவகுத்துள்ளது. இது அரேபியர்களின் எழுச்சி (Arab Spring) தேசத்தில் ஒரு முக்கிய காரணியாக இருந்ததினால், முழு மத்திய கிழக்கையும் உறுதியற்றதாக மாற்றியது. உண்மையில் இந்த உலகம் அழிவின் விளிம்பில் உள்ளது. ஆனால் அவருடைய ஆயத்தவேலைகள் முடிவடையும் வரையில், ஆண்டவர் அந்த நான்கு காற்றையும் பிடித்து வைத்திருக்கிறார்.

ஆண்டவருடைய மகா சேனையைக் கூட்டி சேர்ப்பதே, அவருடைய ஆயத்த நாளின் இறுதி

வேலையாகும். நாகூம் 1:3ல் கூறுவது போல, "கர்த்தர் நீடிய சாந்தமும், மிகுந்த வல்லமையுமுள்ளவர் அவர்களை ஆக்கினையில்லாமல் தப்புவிக்கமாட்டார் ;" உலகின் இராணுவம், அரசியல், மதம் மற்றும் சமூக சக்திகள், அறியாமலேயே இந்த உலகத்தின் ஊழல் நிறைந்த அமைப்புகளை அழிப்பதற்கு தேவனால் நியமிக்கப்பட்டு வருகின்றன.

அறிவு அதிகரித்ததினால் வந்த தொழில்நுட்பம் மறைக்கப்பட்ட விஷயங்களை வெளிச்சத்திற்கு கொண்டு வருவதற்கு, பயன்படுகிறது. வரலாற்றில் வேறு எந்த நேரத்திலும், உண்மையில், மனுஷரை பற்றிய காரியங்கள், இவ்வளவு வழிகளில் வெளிப்படுத்தப்படவில்லை. செல்வந்தர்களும், சக்திவாய்ந்தவர்களும் தங்கள் இரகசியங்களை இனி மறைக்க முடியாது. இந்த அறிவு, ஆண்டவருடைய மகா சேனையை அணிதிரட்ட உதவுகிறது. வாடிக்கையாளர்களை சமரசம் படுத்தவும், அவர்களின் இரகசியங்களை வெளிப்படுத்தவும் வணிகங்கள் தங்களது ஒப்பந்தங்களை மீறுகின்றன.

## சிறந்த ஒன்றுக்கான ஆயத்தம்:

நினிவே அழிக்கப்பட்டதைப்போலவே, அவருடைய ஆயத்தநாளின் போது கட்டவிழ்த்து விடப்படும் வல்லமைகள், இவ்வுலகின் சமுகம், அரசியல் பொருளாதாரம் மற்றும் மத அமைப்புகளை அழிக்கும். இந்த எல்லா விஷயங்களும், உலக ஒழுங்கை அழிப்பதோடு, இன்றைய ஊழல் நிறைந்த அமைப்புகளை அழித்து ஒரு நினைவு சின்னமான ஓர் துடிப்பிற்கு வழிவகுக்கும். இந்த தகர்க்கப்படுதல் ஒரு புதிய யுகத்திற்கு வழி வகுக்கும்.

தேவனுடைய நோக்கங்களை நிறை வேற்றுவதற்கு தேவையானதைவிட பெரிய அழிவையும் சரிவுகளையும் அவர் அனுமதிப்பதில்லை. மேலும் இவைகள் கொண்டுவரும் தனிப்பட்ட துன்பத்தை தேவன் அறிந்திருக்கிறார். "மனுஷனுடைய கோபம் உமது மகிமையை விளங்கப்பண்ணும்; மிஞ்சுங்கோபத்தை நீர் அடக்குவீர்." (சங்கீதம் 76:10) பூமியிலுள்ள சாந்தமானவர்களை காப்பாற்றவும், இது வரையில் வாழ்ந்த ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவருக்கும் ஒரு சமாதானமும், நீதியுமான ஒரு புதிய சகாப்தத்தை துவங்கவும், இந்த நியாயத்தீர்ப்பைக் தேவன் கொண்டு வருகிறார். "இதோ, சமாதானத்தைக் கூறுகிற சுவிசேஷகனுடைய கால்கள் மலைகளின்மேல் வருகிறது; யூதாவே, உன் பண்டிகைகளை ஆசரி; உன் பொருத்தனைகளைச் செலுத்து; துஷ்டன் இனி உன் வழியாய்க் கடந்துவருவதில்லை, அவன் முழுவதும் சங்கரிக்கப்பட்டான்." என்று நாகூம் 1:15ல் வாசிக்கிறோம்.

தேவனுடைய இராஜ்யமும், வருகிற யுகங்களிலும், தேவன் அடையாளமாக பூமியின் மலைகளின் மேல் நின்று சமாதானமாக ஆட்சி செய்வார் என்று இது உறுதிப்படுத்துகிறது. இந்த புதிய யுகம் அனைவரும் தேவனை வழிபடுவதற்கும், அவருடைய அன்பான தன்மையை கற்றுக்கொள்வதற்கும் அனுமதிக்கும். துன்மார்க்கர் என்றென்றும் அழிக்கப்படுவார்கள். விடுவிப்பதற்கான அவருடைய வாக்குத்தத்தத்திற்காக தேவனுக்கு மகிமை உண்டாவதாக.

இன்று, ஆண்டவரின் அடிச்சுவடுகளை பின்பற்று பவர்களுக்கு நாகூம் தீர்க்கதரிசனம் ஒரு சிறப்பு செய்தியாகும். பலியினால் உடன்படிக்கை செய்துக் கொண்டவர்களுக்கே, இந்த ஏழாவது சிறிய தீர்க்கதரிசியின் செய்தி மிக பொருத்தமானதாகும். (சங்கீதம் 50:5) ஊழல் அமைப்புகள் நியாயம் தீர்க்கப்பட்டு, முற்றிலும் அழிக்கப்படும் என்று தேவன் நமக்கு நாகூம் மூலம் உறுதியளிக்கிறார். இந்த வன்முறை, போர், பேராசை மற்றும் ஊழல் ஆகியவற்றின் போது தேவன், தம்முடைய செய்தியின் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்துகிறார். மேலும் இந்த சோதனை காலத்தில் அவர் மட்டுமே ஒரே ஆறுதல் என்றும் பாதுகாவலர் என்றும் அவர் உறுதியளிக்கிறார். இவை எல்லாவற்றிலும், உலகின் மீட்பு நெருங்கி வருவதைக் காண்கையில், நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

நாகூம் தீர்க்கதரிசனம் நமக்கு எவ்வளவு அருமையான ஆறுதல் அளிக்கிறது. தேவனுடைய நம்பிக்கைக்கு தகுதியுள்ளவர்களாக இருப்பதற்கு நாம் எடுக்கும் முயற்சிகளை இரட்டிப்பாக்கலாம். மனுக்குலத்தின் ஒப்புரவாகுதலுக்கு, அவருடைய சிறப்பான திட்டத்தின் ஒரு பகுதியாக, இந்த சம்பவங்களை வழி நடத்தும் தேவனுக்கே நன்றி.!

# ஆபகூக் அறியப்படாத தீர்க்கதரிசி



Len Griehs

“அப்பொழுது கர்த்தர் எனக்குப் பிரதியுத்தரமாக: நீ தரிசனத்தை எழுதி, அதைக் கடந்தோடுகிறவன் வாசிக்கும்படிப் பலகைகளிலே தீர்க்கமாக வரை. குறித்தகாலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது: முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு: அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை.(ஆபவுக் 2:2,3)

பாபிலோனை பற்றிய தீர்க்கதரிசியின் கேள்விக்கான யெகோவா தேவனின் பதிலை, இந்த வேதப்பகுதி, குறிப்பிட்டாலும் வேத மாணவர்கள் இந்த வேத பகுதியை யுகங்களுக்கான வரை படத்தோடு தொடர்புப் படுத்துகிறார்கள். தேவனுக்கு ஒரு திட்டமுண்டு என்பதையும், தேவனுடைய பரிசுத்த ஆவியின் உதவியால் வேதவாக்கியங்களைத் தேடுவதன் மூலம் அந்தத் திட்டத்தை புரிந்துகொள்ளுவது சாத்தியமானது என்றும் அது உறுதிப்படுத்துகிறது. இந்த திட்டத்தை புரிந்துக்கொள்வதன் விளைவு, வசனம் கூறுகிறபடி, ஒருவர் ஓடலாம் என்பதாகும். இந்த வசனத்தில் "ஓடு " என்ற வார்த்தைக்கு ஸ்டிராங்க்ஸ் 7323ல் "ஓடுதல்" (எந்த காரணத்திற்காகவும், விசேஷமாக விரைந்து செல்லுதல்) என்ற பொருள்படும். "பராக்கிரமசாலியைப் போல் தன் பாதையில் "ஓடுகிற என்று தன் மணவறையிலிருந்து புறப்படுகிற மணவாளனுக்கு ஒப்பாக விவரிக்கப் படுகிறதை சங்கீதம் 19:5ல் காணலாம். நம்முடைய அழைப்புக்கு செவிகொடுத்து, நம்முடைய வாழ்க்கையை அர்ப்பணித்து, கிறிஸ்து இயேசுவுக்குள் பரம அழைப்புக்கான பந்தய பொருளை பெற்றுக்கொள்ள ஓடுபவர்களுக்கு ஆபகூக்கின் தரிசனம், தேவனுடைய திட்டத்தின் இறுதியான விளைவைக் காண கட்டமைப்பை தருகிறது. (1கொரிந்தியர் 9:24, பிலிப்பியர் 3:14)

## ஆபகூக், அந்த தீர்க்கதரிசி

அவருடைய பெயரை கொண்ட புத்தகத்தை தவிர, வேறு எங்கும் ஆபகூக் என்ற பெயர் வெளியில் காணப்படுவதில்லை. ஏனெனில், அவரைப் பற்றி மிகவும் குறைவாகவே அறியப்பட்டதால், அவருடைய தீர்க்க தரிசனங்களுக்கு தேதி குறிப்பிடுவது கடினமாக உள்ளது. சிறிய தீர்க்கதரிசிகளின் மத்தியில் அவருடைய வேலை, பாபிலோனில் வரவிருக்கும் படையெடுப்பை பற்றிய அவருடைய கணிப்பு (1-6), யோசியாவின் அரசாட்சியின் இறுதிக்காலங்களில் அல்லது யோயாக்கீமின் ஆட்சியின் துவக்கத்தில் யூதாவில் ஆபகூக் வாழ்ந்திருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது. நினிவே வீழ்ச்சியடைந்த பின், பாபிலோன் மத்திய கிழக்கில் அதன் ஆதிக்கத்தைத் தொடங்கியது. இது கிமு 605ல் மெக் க்ளிண்டாக் மற்றும் ஸ்டரொங் (Mc Clintock and Strong,) இடையில் நடந்த கர்க்கீஷ் போராக இருந்தது. அதில் பாபிலோனிய இராஜா, நபோபோலசாரின் மகன் நெபுகாத்நேச்சார், எகிப்திய படைகைத் தோற்கடித்து, சிரியாவில் உள்ள ஹமாத்தின் படைகளை அழித்துபோட்டார். (II நாளாகமம் 35:20, எரேமியா 46:12)

"ஆபகூக்" என்ற பெயருக்கு "தழுவிக் கொள்கிறவன்" என்று பொருள். நம்மை சுற்றி நடக்கக்கூடிய எதையும் பொருள்படுத்தாமல், யேகொவா தேவனை தழுவிக்கொள்ள வேண்டும் என்பதே அவருடைய புத்தகத்தின் மிக முக்கியமான கருப்பொருள் என்று கருதுகிறது. இக்காலத்து தீமைகள், நம்முடைய நாகரீகத்தை அழிக்க அச்சுறுத்துவதால், நம்முடைய நாளில், தேவனைத் தழுவும்படிக்கு சபை ஊக்குவிக்கப்படுகிறது. எந்தத் தீமையும் அவருடைய அன்பிலிருந்து நம்மை பிரிக்க முடியாதபடிக்கு, சரியான வேகத்தில் முன்னோக்கி நகர்ந்துவரும் தேவனுடைய திட்டத்தின் பார்வையோடு நாம் ஒட்டிக் கொள்ளவேண்டும். (ரோமர் 8:37-39) புத்தகத்தின் மூன்று அதிகாரங்களில், ஆபகூக் இரண்டு கேள்விகளைக் கேட்கிறார், யெகோவா தேவன் இவ்விரண்டு கேள்விகளுக்கும் பதிலளிக்கிறார். தேவனுடைய ஊக்குவித்தலினால் திருப்தி அடைந்த ஆபகூக் தீர்க்கதரிசி, யேகொவா தேவனுக்கு நன்றியுள்ள ஜெபத்தை செலுத்துகிறார்.

❋ **ஆபகூக்கின் முதல் கேள்வி** - யூதாவிலுள்ள தீமை ஏன் தண்டிக்கப்படவில்லை? (1:2-4) **தேவனுடைய பதில்** இது வெகு காலம் நீடிக்காது - பாபிலோனியர்கள் யூதாவை தண்டிப்பார்கள். (1:5-11) மனாசேயின் ஆட்சியில், தேவனுக்கு எதிராக யூதாவின் கலகம் முடுக்கிவிடப்பட்டது. ஒரு நல்ல இராஜாவான யோசியாவினாலும் சேதத்தை சீர் திருத்தமுடியாத அளவுக்கு, ஜனங்களுக்குள் விக்கிரகாரதனை

வேரூன்றியிருந்தது. (IIஇராஜாக்கள் 23:26)

யோசியா இராஜா தம்முடைய எட்டாம் வயதில் (II நாளாகமம் 34), துவங்கப்பட்ட 31 வருட ஆட்சியின் போது விக்கரகங்களை அகற்றி, தேசத்தை சுத்திகரித்தார். சாமுயேலின் நாட்கள் முதல் நடைபெறாத ஒரு பஸ்காவைப் பற்றி IIநாளாகமம் 35ம் அதிகாரம் கூறுகிறது. துரதிருஷ்டவசமாக, மனாசேயின் கீழ் யூதாவின் அக்கிரமங்கள் (II இராஜாக்கள் 21:11-15) மிகுதியாக இருந்ததினால், யோசியாவின் முயற்சிகள், யூதாவின் மேல் வரும் தண்டனையை கொஞ்சம் தாமதித்தது. (II இராஜாக்கள் 23:26)

இந்த மிக பெரிய பஸ்காவுக்கு சில நாட்களுக்குப் பின், எகிப்தின் இராஜாவாகிய பார்வோன் நேகோ, அசீரியா இராஜாவுக்கு விரோதமாய் போகிறபோது இராஜாவாகிய யோசியா அவனக்கு எதிராகப் புறப்பட்டான். (II இராஜாக்கள் 23:29) "அவன் இவனிடத்துக்கு ஸ்தானாபதிகளை அனுப்பி: யூதாவின் ராஜாவே, எனக்கும் உமக்கும் என்ன? நான் இப்போது உமக்கு விரோதமாய் அல்ல, என்னோடே யுத்தம்பண்ணுகிற ஒருவனுக்கு விரோதமாய்ப் போகிறேன்; நான் தீவிரிக்க வேண்டுமென்று தேவன் சொன்னார்; தேவன் என்னோடிருக்கிறார்; அவர் உம்மை அழிக்காதபடிக்கு அவருக்கு எதிரிடை செய்வதை விட்டுவிடும் என்று சொல்லச் சொன்னான்." (II நாளாகமம் 35:21) என்று தூதுவர்கள் மூலம் நேகோ யோசியாவிடம் கூறினார். தேவன் அவரை அனுப்பினார் என்ற நேகோவின் அறிக்கை உண்மையாக இருக்கவில்லை. இருப்பினும் போரில் கொல்லப்படும வரை நேகோவுக்கு எதிராக யோசியா தொடர்ந்து போரிட்டார். (IIநாளாகமம் 35:24) [யோசியா சமாதானத்தோடு மரிப்பார் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தாலும், அவர் யுத்தத்தில் கொல்லப்பட்டார் என்ற காரியத்தை கலந்தாய்வுக்காக எடுத்துக்கொள்வதற்கு What Pastor Russell Said, page 765 பார்க்கவும்.] இது கிமு 609 ல் நடைப்பெற்றதாக வரலாற்று ஆதாரங்கள் குறிப்பிடுகிறது. மற்றும் இறுதியில் யோயாக்கீம்(aka Eliakim) யூதாவின் சிங்காசனத்தில் அமர்த்தப்பட்டார் என்றும் குறிப்பிடுகிறது. (II இராஜாக்கள் 23:29,30,34) ஆனால், யோயாக்கீம் அமருவதற்கு முன் பல சம்பவங்கள் யூதாவை திசைத்திருப்பியது.

முதலில், யோசியாவின் குமாரனாகிய யோவாகாசை இராஜாவாக ஜனங்கள் அழைத்தார்கள். மூன்று மாதங்களுக்கு பின், பார்வோன் நேகோ அவரை அகற்றி, பொக்கிஷ சாலையில் 100 தாலந்து வெள்ளியையும், ஒரு தாலந்து பொன்னையும் கொள்ளையடித்து, யோவாகாசுக்கு பதிலாக, யோசியாவின் 25 வயது குமாரனாகிய எலியாக்கீமை இராஜாவாக்கி, அவனுடைய பெயரை யோயாக்கீம் என்று மாற்றினான். (IIநாளாகமம் 36:2-5). சில ஆண்டுகள் யோயாக்கீம் யூதாவுக்கு கணிசமான வரி விதித்து, எல்லா பணத்தையும் நேகோவுக்கு கொடுத்தார். (II இராஜாக்கள் 23:35) நேபுகாத்நேச்சார் தன் தந்தையின் கட்டளையின்படி, எருசலேமை முற்றுகையிட்டு யோயாக்கீமைக் கைப்பற்றி, தானியேலையும், மற்ற இஸ்ரயேலரையும் பாபிலோனுக்கு அழைத்துச் சென்றார். (தானியேல் 1:1, IIநாளாகமம் 36:6, II இராஜாக்கள் 24:1) யூதாவின் சுதந்திரம் முடிவுக்கு வந்தது.

பாபிலோனுக்கு நாடுகடத்தப்படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன் யோயாக்கீன் தன்னுடைய தந்தையாகிய யோயாக்கீமின் மரணத்திற்கு பின் சிங்காசனத்தை எடுத்துக்கொண்டார். எருசலேமை இரண்டாவது முறையாக நேபுகாத்நேச்சார் கைப்பற்றினார். ஏழைகளையும், இயலாதவர்கயைும் விட்டுவிட்டு, எசேக்கியேல் தீர்க்கதரிசியோடு சேர்த்து, 10,000 திறமையுள்ள யூத தொழிலாளர்கள் மற்றும் வேறு கைவினைஞர்களையும், பலசாலிகளையும் அவன் அழைத்துச் சென்றான்.(II இராஜாக்கள் 24:14-16, II இராஜாக்கள் 25:1ம் வசனத்தை ஒப்பிட்டு பார்க்கவும்)

இந்த கீழ்ப்படிதல் நாட்டிற்கு ஒரு தண்டனையாக இருந்தபோதிலும், பாபிலோனிய சிறையிருப்பில் அவருடைய விசுவாசிகளை பாதுகாப்பதற்கான தேவனுடைய வழியாக இருந்தது. (எரேமியா 24:5) அவர்கள் நல்ல அத்திப்பழங்களுக்கு ஒப்பிடப்பட்டார்கள். (எரேமியா 24:3), தேவன் அவர்களை மீண்டும் தங்களுடைய சொந்த தேசத்திற்கு கொண்டு வருவார் என்றும் அவர்கள் மீண்டும் அகற்றப்பட மாட்டார்கள் என்றும் வாக்களித்தார். ஆனால் யூதாவின் கடைசி இராஜாவாகிய சிதேக்கியா, யூதாவிலுள்ள பொல்லாத அத்திப்பழங்களுள் ஒருவனாக - ஒரு சாபமாகவும், இகழ்ச்சியாகவும் இருந்ததினால் அவன் அகற்றப்பட்டான். (எரேமியா 24:9) பின்னர், "பட்டயக்கருக்கினாலே விழுவார்கள், சகல புறஜாதிகளுக்குள்ளும் சிறைப்பட்டுப்போவார்கள்; புறஜாதியாரின் காலம் நிறைவேறும்வரைக்கும் எருசலேம் புற ஜாதியாரால் மிதிக்கப்படும்" (லூக்கா 21:24) என்று இயேசு கூறினார். இது அந்த தீர்க்கதரிசன நிறைவேற்றத்தின்

தொடக்கமும், ஆபகூக்கின் முதல் கேள்விக்கு தேவனுடைய பதிலுமாக இருந்தது.

**❋ ஆபகூக்கின் இரண்டாவது கேள்வி** - நீதியுள்ள தேவன், பாபிலோனைக் காட்டிலும் அதிக நீதியுள்ள ஜனங்களை தண்டிப்பதற்கு, துன்மார்க்கமான பாபிலோனை எப்படி பயன்படுத்த முடியும்? (1:12-2:1) **தேவனுடைய பதில்** - பாபிலோனும் தண்டிக்கப்படும், யூதாவின் விசுவாசமுள்ள மீதியானோருக்கு வெகுமதி அளிக்கப்படும். (2:2-20)

நேபுகாத்நேச்சாரின் தகப்பனாகிய நபோபொலசர் நோயால் பாதிக்கப்பட்ட பின், அவர் அரியணையை உரிமைக்கோரினார். யூதாவின் கடைசி இராஜா சிதேக்கியா, தன்னுடைய கண்கள் குருடாக்கப்படுவதற்கு முன் தன்னுடைய இரண்டு குமாரர்கள் கொல்லப்படுவதை கண்டார். அதற்குபின் அவர் பாபிலோனுக்கு சிறையாக கொண்டுச் செல்லப்பட்டார். எருசலேம் கொள்ளையடிக்கப்பட்டது, அதன் மதில் சுவர்கள் இடிக்கப்பட்டது, ஆலயமும் அரண்மனையும் தரைமட்டமாக சுட்டெரிக்கப்பட்டது. (II இராஜாக்கள் 25:6-10) மீதமுள்ள எதிர்க்கக்கூடிய முன்னணித் தலைவர்கள் கொல்லப்பட்டனர். எஞ்சியிருந்த இஸ்ரயேலின் தெற்கு இராஜ்யத்தை, நெபுகாத்நேச்சார் வெகு சீக்கிரத்தில் நிர்மூலமாக்க போகிறார். இந்த தண்டனையைப் பற்றி ஆபகூக் வருந்துவதில் ஆச்சரியமல்ல.

தானியேல் புத்தகத்தில், இராஜாவாகிய நேபுதாக்நேச்சார் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறார். உலக வரலாற்றைப் பற்றிய அவருடைய தரிசனம் (தானியேல் 2), மற்றும் அவரது அகந்தைக்கு தண்டனை பெற்றபின், ஒரு உண்மையான தேவனிடம் அவர் அடைந்த மாற்றம் (தானியேல் 4:37), புத்தகத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியை எடுத்துக்கொண்டது. நேபுகாத்நேச்சாரின் ஆட்சியில் பாபிலோனின் ஆறு சதுர மைல் நகரம் ஐசுவரியமுள்ளதாக தோற்றம் அளிக்கவில்லை. இரட்டை சுவருகள் முழு நகரத்தையும் சூழ்ந்தன. ஐப்பிராத்து நதி நகரத்தின் மத்தியில் நேராக ஓடி, தொங்கும் தோட்டங்களுக்கு ஊட்டமளித்தது.

சாம்ராஜ்யத்தின் கடைசி இராஜாவாகிய, நபோனிடஸின் ஆட்சியின் மூன்றாம் வருடத்தில் அவருடைய குமாரன் பெல்ஷாத்சார், பாபிலோனை ஆட்சி செய்தார் என்று நபோனிடஸின் ஆட்சி பதிவுகள் கூறுகின்றனர். இதுவே பாபிலோனை ஆட்சி செய்வதற்கு முக்கிய அம்சமாக இருந்தது. {பெல்ஷாத்சார் (தானியேல் 5:1) (பெல் என்பதற்கு "இராஜாவை பாதுக்காத்தல்" என்பது பொருள். இந்த பெல்ஷாத்சார், நபோனிபானின் குமாரனும், அரச பிரதிநிதியாகவும் இருந்தார். தானியேல் 5:22ம் வசனத்தில் அவர் நேபுகாத்நேச்சாரின் "குமாரன்" என்று அழைக்கப்படுகிறார். ஆனால் இந்த பகுதியில் பயன்படுத்தப்பட்ட அராமை மொழியில், இதற்கு "பேரன்" அல்லது "வழி தோன்றல்" அல்லது "வாரிசு" என்றும் அர்த்தம் கொள்ளலாம். "தந்தை" என்பதற்கு நாம் "மூதாதையர்" அல்லது "முன்னோடி" என்று பொருள்கொள்வதுபோல இதுவும் பொருள்படும். (தானியேல் 5:2, 11,13 வசனங்களை காண்க) பெல்ஷாத்சார் ஏற்படுத்தின விருந்தின்போது, அங்கு வந்த "ராணியைப்" பற்றி தானியேல் 5:10 ம் வசனம் பேசுகிறது. இவள் நேபுகாத்நேச்சாரின் மனைவியாகவோ அல்லது மகளாகவோ இருந்திருக்கவேண்டும் அல்லது நொபொனிடஸின் மனைவியாக இருந்திருக்கலாம், நேபுகாத்நேச்சாரின் குமாரத்தியாக இல்லை }. பின்னர், நபோனிடஸ் சிரியா மற்றும் லெபனான் வழியாகவும், வடமேற்கு அரேபியாவில் உள்ள டைமா நகரிலுமுள்ள ஒரு சோலைவனம் வரையில் ஒரு இராணுவத்தை வழிநடத்திச் சென்றார், அங்கு அவர் ஓய்வெடுத்து, அடுத்த பத்து ஆண்டுகள் அங்கு தங்கினார்.

### சுவற்றின் மேல் கையெழுத்து

கிமு 539 ஆம் ஆண்டில் விருந்து நடந்துக்கொண்டிருக்கையில், ஒரு மர்மமான கை தோன்றி, "மெனே, மெனே, தெக்கேல் உப்பார்சீன்" என்று சுவற்றின் மேல் எழுதியது. இது பாபிலோனின் வீழ்ச்சியை அறிவித்தது. "அப்பொழுது அந்தக் கையுறுப்பு அவரால் அனுப்பப்பட்டு, இந்த எழுத்து எழுதப்பட்டது.எழுதப்பட்ட எழுத்து என்னவென்றால்: மெனே, மெனே, தெக்கேல், உப்பார்சின் என்பதே. இந்த வசனத்தின் அர்த்தமாவது: மெனே என்பதற்கு, தேவன் உன் ராஜ்யத்தை மட்டிட்டு, அதற்கு முடிவுண்டாக்கினார் என்றும், தெக்கேல் என்பதற்கு, நீ தராசிலே நிறுக்கப்பட்டு, குறையக் காணப்பட்டாய் என்றும்," (தானியேல் 5:24-28) அந்த இராத்திரியிலே, மேதியனாகிய தரியு பெல்ஷாத்சாரைக் கொன்றுபோட்டார்.

தானியேல் புத்தகத்தில் கொடுக்கப்பட்ட பாபிலோனின் தண்டனையைப் பற்றி காரியங்களை (தானியேல் 5:23) பெர்சிய பதிவுகள் சரிபார்க்கிறது. {வரலாற்று ரீதியாக தானியேல் புத்தகம் சரியானது என நினைக்கிறவர்கள் மத்தியில், தரியு மற்றும் சைரஸ்

ஆகியோர் ஒருவரே என்ற பார்வை நிலையாக உள்ளது. இது பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தின் டொனால்ட் வைஸ்மன் என்பவரால் சில காலத்திற்கு முன் தெளிவுபடுத்தப்பட்டதுடன் இன்று பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. 1நாளாகமம்5:26ம்வசனம்பின் பற்றிய அதே சூத்திரத்தை தானியேல் 6:28ம் வசனமும் பின்பற்றியது. இங்கு புல் மற்றும் தில்கத்பில்லெனேசரும் சமப்படுத்தப்படுகிறார்கள்.(இந்த இரண்டு பெயர்களும் ஒரே நபரைக் குறிக்கும் என்று வரலாற்று அறிஞர்கள் மத்தியில் பொதுவாக அறியப்பட்டுள்ளது. ) கூடுதலாக, கோரேஸ், தன்னுடைய தாய்வழி தாத்தாவின் இராஜ்யத்தை ஆட்சி செய்ததால், அவர் "மேதியர்" என்று அழைக்கப்பட்டார். }

நபோனிடஸ் தன்னையே தற்காத்துக் கொள்ளும்படி பாபிலோனின் விக்கிரகங்களின் தொகுப்பை சேர்க்கும்படி உத்தரவிட்டார். ஆனால் டிஷ்ரி மாதத்தின் போது ஏற்பட்ட பெரும் எதிர்ப்பானது, டைக்ரிஸ் மற்றும் சிபார்சில் கோரேஸின் தாக்குதலை விளைவித்தது. நபோனிடஸ் ஓடிவிட்டார். இரண்டு நாட்களுக்குபின், கோரூரின் ஆளுநராகிய உக்பரு மற்றும் கோரேஸின் படை போரின்றி பாபிலோனுக்குள் நுழைந்தது. தானியேல் 2:36-38 ன் உலகளாவிய முதல் சாம்ராஜ்யம் இப்பொது இல்லை. சிறைப்பட்டிருந்த இஸ்ரயேலர் எருசலேமுக்குத் திரும்பி, ஆலயத்தை மறுபடியும் கட்டும்படிக்கு கோரேஸ் கட்டளையிட்டார். (எஸ்ரா 1:1-4) ஆபகூக்கின் இரண்டாவது கேள்விக்கு தேவனுடைய பதில் நிறைவடைந்தது. யூதாவில் விசுவாசமுள்ளவர்கள் வீடு திரும்ப கூடும்.

திருப்தி அடைந்த மீதியுள்ளவர்களுக்குமுன் ஆபகூக் கேள்வி வைக்கிறார். "கர்த்தரோவென்றால், தமது பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார்; பூமியெல்லாம் அவருக்கு முன்பாக மௌனமாயிருக்கக்கடவது." (2:20)

### ❋ஒரு நம்பிக்கையின் ஒப்புதல் வாக்கு மூலமும், தேவனுக்குள்ளான மகிழ்ச்சியுடனும் ஆபகூக் மூன்றாம் அதிகாரத்தை நிறைவுச் செய்கிறார்

ஆபகூக் தன்னுடைய கேள்விகளுக்கான பதிலைப் பெற்றுக்கொள்ள, ஒரு அரணிலே தன்னை நிலைநிறுத்திக் கொண்டிருந்தார். (2:1) தேவன் தமது திட்டத்தை செயல்படுத்துகிறார் என்று இப்போது அவர் புரிந்துக்கொண்டார். தேவன் தம் ஜனங்களுக்காக ஏற்படுத்தின எல்லா வழிகளையும், குறிப்பாக யாத்திரையில் அவருடைய நடத்துதல்களை ஆபகூக் 2 மற்றும் 17ம் வசனங்களுக்கு இடையில் விவரிக்கிறார். நம்முடைய மொழியில் சொல்லப்போனால், "இவை அனைத்தையும் நான் மறந்துவிட்டேன். நீர் எப்படி வேலை செய்தீர் என்று பாரும். அந்த நேரத்தில் நாம் புரிந்துக்கொள்ளக்கூடிய ஒன்றைப் போல் தோன்றவில்லை என்றாலும், தேவன் திட்டமிட்டிருந்தபடியே, இந்த கிரியைகள் அனைத்தையும் அவர் செய்தார். அவைகள் நம்மை வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு அழைத்து வந்தது. நம்மை ஒரு ஜாதியாக்கியது. நாம் புரிந்துக்கொள்ள முடியாமல் போனாலும், தேவன் அற்புதமானவர்."

எனவே, இப்போது அவர்,"தேவனே, உமது வல்லமையைப் பாரும், நான் அதை மறந்துவிட்டேன், என்னை மன்னிக்கவும், என் அச்சத்தை இவ்வழியில் விட்டேன்" என்று தேவனிடம் அவர் கூறுகிறார். (உபாகமம் 33:2, யாத்திராகமம் 12:29, யோசுவா 14:5, யாத்திராகமம் 14:21, யோசுவா 4:23, யோசுவா 21:43)

சிறையிருப்பின் காலத்தில், நீதியுள்ளவர்களிடம் காணப்படும் அச்சத்தை தடுத்து, அவர்களுக்கு உற்சாகத்தை அளிப்பதற்கு தேவனிடம் அவர் ஜெபித்தார். "கர்த்தாவே, வருஷங்களின் நடுவிலே உம்முடைய கிரியையை உயிர்ப்பியும், வருஷங்களின் நடுவிலே அதை விளங்கப்பண்ணும்; கோபித்தாலும் இரக்கத்தை நினைத்தருளும்." (வசனம் 2) "கர்த்தர் இஸ்ரவேல் குடும்பத்தாருக்குச் சொல்லியிருந்த நல் வார்த்தைகளிலெல்லாம் ஒரு வார்த்தையும் தவறிப போகவில்லை; எல்லாம் நிறைவேறிற்று." (யோசுவா 21:45). ஆபகூக் பிரமிப்படைந்து உறுதிப்பட்டார். இப்போது, அந்த புத்தகத்தில் உள்ள கடைசி மூன்று வசனங்களின் பதிவு செய்யப்பட்டிருக்கும், விசுவாசத்தின் பாடலை பாடுகிறார். "அத்திமரம் துளிர்விடாமற்போனாலும், திராட்சச்செடிகளில் பழம் உண்டாகாமற்போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற்போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப்போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமற்போனாலும்,நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்." (3:17,18)

நமக்கான பாடம் - நம்மை சுற்றியுள்ள உலகத்தை பார்த்து நாம் புலம்புகையில்," ஆண்டவரே, இந்த பயங்கரமான உலகத்தை பொருத்தவரையில் நீர் ஏன் தாமதிக்கிறீர் ? தேவனுடைய மகத்தான படை, சுயநலமுள்ள மற்றும் அநீதியுள்ள ஒரு வகுப்பாரை

கொண்டு, அவர் இந்த உலகத்தை கையாளுவேன், என்று யெகோவா தேவன் பதில் அளிக்கிறார். (யோயேல் 2:2-11, ஆபகூக் 3:16) அந்த தரிசனத்தை எழுதும்படி, தேவன் ஆபகூக்கிடம் கூறினார். அதற்குபின் தேவனுடைய வேலைகளை அவர் புரிந்துக்கொள்வார் என்றும் கூறினார். அவ்வாறே, முடிவு காலத்தில், சபையின் இறுதி அங்கத்தினர், தேவனுடைய ஞானத்தை சந்தேகிக்காமல், பாவத்தையும், தீமையையும் கையாளும் அவருடைய திட்டத்தை புரிந்துக் கொள்ளும்படிக்கு அவைகளை சகிப்பதற்கு,தேவன் பலருடைய எழுத்துக்களை கொடுத்தார். (தானியேல் 12:4)

தேவன் தம்முடைய ஜனங்களை பல தடவைகள் பாதுகாத்து, இரட்சித்ததை ஆபகூக் மறுபடியும் நினைவுபடுத்தினார். இந்த யுகத்தின் முடிவில் இருக்கும், தேவ ஜனங்களாக நாமும், புறஜாதியாரின் ஆட்சியில், தேவனுடைய வார்த்தையின் நிறைவேற்றம் (2,520 வருடங்கள், லூக்கா 21: 24),மேசியாவின் தோற்றம் மற்றும் அவருடைய மரணம் , மற்றும் புறஜாதியாரின் அழைப்பு (70 வாரங்கள், தானியேல் 9:24-27), முடிவு காலம் (1260 வருடங்கள், தானியேல் 12:7), நம்முடைய ஆண்டவரின் கண்ணுக்கு புலப்படாத வருகை (1335 வருடங்கள், தானியேல் 12:12) மற்றும் இஸ்ரயேலின் மறுசீரமைப்பு (எசேக்கியேல் 37) இவ்வனைத்தையும் அடையாளம் கண்டுக்கொள்ளலாம். தேவனுடைய நீதியை தேடுகிற நாம், விசுவாசத்தில் வாழவேண்டும். தொடர்ந்து தீமைகளை பார்க்கும்போது, "ஆண்டவரே, இது எவ்வளவு காலத்திற்கு ?" என்று அழுகாமலும், தடுமாறாமலும் இருக்க வேண்டும். தேவனுடைய திட்டத்தின் நிறைவேற்றம் நம்முடைய கணக்கின் படி அல்ல, அது தேவனுடைய கணக்கின்படி நிறைவேறும் என்று நாம் விசுவாசிக்கிறோம். தற்போதைய தீமையான உலகை நிறைவுக்கு கொண்டுவருவதற்காக பயன்படுத்தப்படும் வழிமுறைகள் இப்போது நம்மை சோர்வடைய செய்தாலும், தேவனுடைய முழுமையான ஆட்சி தலைமையிலும், நீதியிலும், இரக்கத்திலும் நாம் சமாதானத்தை காணலாம். ஒரு புது சிருஷ்டியை செய்வதில் அவருடைய கிரியைகள், நம்முடைய தனிப்பட்ட காரியங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுவதை நாம் நினைவில் கொண்டு, தேவனுடைய சித்தம் செய்யப்படுவதற்கு நாம் விண்ணப்பிக்க வேண்டும். கடினமான காலங்களில், வலுவான விசுவாசம் மாம்ச பலவீனத்துடன் ஒத்துப்போகக்கூடாது என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுலைப் பொறுத்தவரை, ஆபகூக்கின் வார்த்தைகள் மிகவும் அர்த்தமுள்ளதாக இருந்தது. விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுவதை பற்றி விவரிக்கும்போது, அவர் ரோமர் 1:17 மற்றும் கலாத்தியர் 3:11 ஆகிய இரண்டு வசனங்களிலும் அவருடைய எடுத்துக்காட்டுகளை குறிப்பிடுகிறார். பிற்பாடு, எபிரெயர் 10:37-38ல் உள்ள தரிசனத்தை, இயேசுவின் இரண்டாம் பிரசன்னத்தோடு சம்பந்தப்படுத்தி எழுதினார். மேலும், மிக மோசமான காலத்தில், யெகோவா தேவன் அவருடைய கால அட்டவணையின்படி, தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களை மெய்ப்பித்து, நித்தியமான கனம் மகிமை மற்றும் அழியாமைக்குள் விடுவிப்பார் என்ற விசுவாசத்துடன் தொடர்ந்து நீடிய சகிப்புத்தன்மையோடு நாம் இருக்கும்படி நம்மை எச்சரிக்கிறார். (ரோமர் 2:7)

"இஸ்ரவேல் பூத்துக்காய்த்து உலகத்தைப் பலனால் நிரப்பும் நாட்கள் வரும்." (ஏசாயா 27: 6)

# செப்பனியா மற்றும் ஒரு சுத்தமான பாஷையும்



Richard Doctor

"அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன்." (செப்பனியா 3:9)

செப்பனியாவின் துவக்க வரிகள், நான்கு தலைமுறைகளுக்கு மேலாக தீர்க்கதரிசியினுடைய தந்தையின் வழிநடத்துதலைக் காட்டுகிறது. மற்ற எந்த தீர்க்கதரிசியும் இவருக்கு சமமானவராக காணப்படுவதில்லை. செப்பனியா, இராஜாவாகிய எசேக்கியாவின் நேரடியான வம்சாவளி என்ற முடிவுக்கு வருவது நியாயமானதாகும். இந்த தீர்க்கதரிசன புத்தகமானது, நல்ல இராஜாவாகிய யோசியாவின் நாட்களில் கிடைக்கப்பெற்றதாகும். மற்றும் இந்த செப்பனியாவின் எச்சரிப்புகள் யோசியாவுக்குள் விசேஷித்த வைராக்கியத்தை தூண்டியிருக்க வேண்டும்.

## இராஜாவாகிய யோசியாவின் சீர்த்திருத்தங்கள்

யோசியா எட்டு வயதாயிருந்தபோது இராஜாவாகி, எருசலேமை 31 ஆண்டுகள் அரசாண்டார். (2நாளாகமம் 34:1-3) இராஜாவாகிய யோசியா தன் தகப்பனாகிய தாவீதின் வழியில் நடந்து கர்த்தருடைய பார்வைக்கு செம்மையானதை செய்தார். யூதாவின் வரலாற்றில் யோசியாவின் சீர்திருத்தங்கள், பிரகாசமான காலங்களில் ஒன்றாகும்.

அவருடைய ஆட்சியின் எட்டாம் வருடத்தில் (16 வயதில்) யோசியா இராஜா தன் தகப்பனாகிய தாவீதின் தேவனைத் தேட ஆரம்பித்தார். ஒரு குழந்தை போகவேண்டிய வழியையும், அதன் அருமையான பலன்களைப் பற்றி அறிவித்து பயிற்றுவிப்பதற்கான முக்கியத்துவத்தை அதிகமாக நாம் வலியுறுத்த முடியாது. (நீதிமொழிகள் 22-6) யூதா, பென்யமீன் ஆகிய இரண்டு கோத்திரமும், இப்பொழுது எருசலேமிலும், பொய்யான தெய்வங்களை வழிப்பட்டு வந்ததே, யோசியா எதிர்நோக்கின பிரச்சனையாகும்.

அவருடைய ஆட்சியின் 12ம் வருடத்தில் (20 வயதில்) யோசியா யூதாவையும், எருசலேமையும், உயர்ந்த மேடுகளையும், தோப்பு விக்கிரகங்களையும், வார்ப்பிக்கப்பட்ட சொரூபங்களையும் அகற்றி சுத்திகரித்தார். இந்த சுத்திகரிப்பை யோசியா தனிப்பட்ட முறையில் மேற்பார்வையிட்டார். வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகங்கள் நொறுக்கப்பட்டன, யோசியாவும் அவருடைய சேனையும் அவைகளைத் தூளாக்கி, விக்கிரகங்களக்குப் பலியிட்டவர்களின் கல்லறைகளில் இந்த சாம்பலைத் தூவினார்கள். (2நாளாகமம் 34:4)

பாகாலின் எந்த தீர்க்கதரிசிகளையும் அவர்கள் கொன்று, அவர்களின் எலும்புகளை பலிபீடங்களின் மீது சுட்டெரித்ததை போல தோன்றுகிறது. (வசனம் 5) இந்த ஆசாரியர்கள் கொலைக்காரர்களும், குழந்தைகளை பலி செலுத்தக்கூடிய அருவருப்பான பழக்கமுடையவர்களாக இருப்பதினாலும், இவர்கள் மேல் நாம் எந்த விதமான அனுதாபத்தையும் காட்டவேண்டாம்.

யோசியாவின் சீர்திருத்தம் வரை, பாகாலின் பலிபீடங்கள் எருசலேமின் மதில்களுக்கு வெளியே கிடந்தது. "தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் அக்கினியிலே தகனிக்கிறதற்காக, அவர்கள் இன்னோடும் குமாரனின் பள்ளத்தாக்கிலுள்ள தோப்பேத்தின் மேடைகளைக் கட்டினார்கள்; அதை நான் கட்டளையிடவுமில்லை, அது என் மனதில் தோன்றவுமில்லை." (எரேமியா 7:31)

பத்து கோத்திரங்களின் பழைய எல்லைகளிலும், யோசியா இராஜாவின் சுத்திகரிப்பு நிறுத்தப்படவில்லை. தற்போது அங்கு சமாரியர்கள் குடியிருந்தார்கள். (2இராஜாக்கள் 17:24) மனாசே, எபிராயீம் பட்டணங்கள் முழுவதிலும், இன்னும் முற்காலத்தில் நப்தலி வசித்து வந்த வடக்கேயுள்ள எல்லையிலும் கூட யோசியா தொடர்ந்து சுத்திகரிப்பின் வேலைகளை செய்தார்.

எவ்வளவு அருமையான இராஜா!

ஆனாலும், அதே சமயத்தில் செப்பனியாவின் கடுமையான தீர்க்கதரிசனங்கள் எச்சரிக்கையாகவும் இருந்தது.

**சாலோமோனின் ஆலயத்தை பழுதுப் பார்த்தல்**

யோசியா இராஜா தன்னுடைய ஆட்சியின் 18ம் வருடத்தில் (26 வயதில்) எருசலேமில் உள்ள சாலோமோனின் ஆலயத்தைப் பழுதுபார்க்கும்படி கட்டளையிட்டார். இன்னும் குறிப்பாக,"கர்த்தருடைய ஆலயத்துக்குக் கொண்டுவரப்பட்ட பணத்தை அவர்கள் எடுக்கிறபோது மோசேயைக் கொண்டு கட்டளையிடப்பட்ட கர்த்தருடைய நியாயப்பிரமாணப் புஸ்தகத்தை ஆசாரியனாகிய இல்க்கியா கண்டெடுத்தான். அப்பொழுது இல்க்கியா சம்பிரதியாகிய சாப்பானை நோக்கி: கர்த்தருடைய ஆலயத்திலே நியாயப்பிரமாணப் புஸ்தகத்தைக் கண்டெடுத்தேன் என்று சொல்லி, அந்தப் புஸ்தகத்தைச் சாப்பான் கையில் கொடுத்தான். சாப்பான் அந்தப் புஸ்தகத்தை ராஜாவினிடத்திற்குக் கொண்டுபோய், அவனை நோக்கி: உம்முடைய ஊழியக்காரருக்குக் கட்டளையிடப்பட்டவைகளை யெல்லாம் அவர்கள் செய்கிறார்கள்." (2நாளாகமம் 34:14-16)

ஆலய பிரகாரத்தில் உல்தாள் என்ற ஒரு தீர்க்கதரிசி வாழ்ந்துவந்தார். வஸ்திரசாலை விசாரிப்புக்காரன் மனைவியாக இருந்தாள். செப்பனியாவை போல, உல்தாளும், வரக்கூடிய பேரழிவை பற்றி முன்னறிவித்தாள். "இதோ, யூதாவின் ராஜாவுக்கு முன்பாக வாசிக்கப்பட்ட புஸ்தகத்தில் எழுதியிருக்கிற சகல சாபங்களுமாகிய பொல்லாப்பை நான் இந்த ஸ்தலத்தின் மேலும் இதின் குடிகளின் மேலும் வரப்பண்ணுவேன். அவர்கள் என்னைவிட்டு, தங்கள் கைகளின் கிரியைகள் எல்லாவற்றிலும் எனக்குக் கோபம் உண்டாக்க வேறே தேவர்களுக்குத் தூபங்காட்டினபடியினால், என் உக்கிரம் அவிந்துபோகாதபடி இந்த ஸ்தலத்தின்மேல் இறங்கும் என்று கர்த்தர் உரைக்கிறார்."(2நாளாகமம் 34:24,25) இந்த கட்டமைப்பிற்குள், நாம் செப்பனியாவின் துவக்க வரிகளை வாசிக்கிறோம், "தேசத்தில் உண்டானதை எல்லாம் முற்றிலும் வாரிக்கொள்ளுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். நான் யூதாவின் மேலும், எருசலேமிலுள்ள எல்லாக் குடிகளின் மேலும் என் கையை நீட்டி, பாகாலில் மீதியாயிருக்கிறதையும், ஆசாரியர்களோடேகூடக் கெம்மரீம் என்பவர்களின் பேரையும்," (செப்பனியா 1:2,4)

யோசியாவும் அவருடைய ஆதரவாளர்களும் தங்கள் சீர்திருத்தங்களில் நேர்மையாக இருந்தனர், ஆனால் சீர்திருத்தத்திற்கான எதிர்ப்பு இன்னும் வலுவானது. எனவே, "நான் யூதாவின் மேலும், எருசலேமிலுள்ள எல்லாக் குடிகளின் மேலும் என் கையை நீட்டி, பாகாலில் மீதியாயிருக்கிறதையும், ஆசாரியர்களோடே கூடக் கெம்மரீம் என்பவர்களின் பேரையும், வீடுகளின் மேல் வான சேனையைப் பணிகிறவர்களையும், கர்த்தர் பேரில் ஆணையிட்டு, மல்காமின் பேரிலும் ஆணையிட்டுப் பணிகிறவர்களையும்,கர்த்தரை விட்டுப் பின் வாங்குகிறவர்களையும், கர்த்தரைத் தேடாமலும், அவரைக்குறித்து விசாரியாமலுமிருக்கிறவர் களையும், இவ்விடத்தில் இராதபடிக்குச் சங்காரம் பண்ணுவேன்" என்று செப்பனியா 1:4-6 வசனங்களில் பதிவுகளை காணலாம்.

எப்போதும் விசுவாசமுள்ள மீதியானோர் இருப்பது போல, சில விசுவாசமான லேவியர்களும், ஜனங்களும் இருந்தார்கள். ஆனால் அவருடைய நாமத்தை பெயரளவில் சேவை செய்து, அதே நேரத்தில் பரம சேனைகளுக்கு ஆராதனை செய்பவர்களை தேவன் கடுமையாக கண்டனம் செய்கிறார். யேகொவா தேவன் எரிச்சலுள்ள தேவனாக இருக்கிறார். "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்." (யாத்திராகமம் 20:3) "இது உங்கள் வேலையாக இருப்பதினால், ஆலயத்தைவிட்டு புறப்படும் போது நீங்கள் வேறு விதமான ஆராதனைகளை செய்துக்கொள்ளலாம்" என்று தேவன் ஒருபோதும் சொல்லுவதில்லை. நம்முடைய இருதயம் முழுவதையும் அர்ப்பணிக்கவேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

**மிகப்பெரிய பஸ்கா**

தேசிய பேரழிவைப் பற்றி செப்பனியா மற்றும் உல்தாள் அறிவித்த இரண்டு தீர்க்கதரிசனங்களை யோசியா சந்தித்தார். யூதாவின் ஜனங்கள் எந்த அளவுக்கு உடன்படிக்கைக்குத் துரோகம் செய்தார்கள் என்பதை யோசியா புரிந்துக்கொண்டார். அவருக்குண்டான துக்கத்தில் யோசியா தன் வஸ்திரங்களை கிழித்துக்

கொண்டார். அவருடைய மனம் வருத்தத்தினாலே, "இதோ, நான் இந்த ஸ்தலத்தின் மேலும் இதின் குடிகளின் மேலும் வரப்பண்ணும் எல்லாப் பொல்லாப்பையும் உன் கண்கள் காணாதபடிக்கு, நீ சமாதானத்தோடே உன் கல்லறையில் சேர்த்துக் கொள்ளப்பட, நான் உன்னை உன் பிதாக்களண்டையிலே சேரப்பண்ணுவேன் என்கிறார் என்று சொன்னாள்; அவர்கள் ராஜாவுக்கு மறுசெய்தி கொண்டு போனார்கள்." (2நாளாகமம் 34:28) என்று தேவன் யோசியாவுக்கு வாக்களித்தார்.

யோசியாவின் சீர்திருத்த முயற்சிகளுக்கு முன்பாகவே தரிசனங்கள் எழுதப்பட்டிருப்பதைக் குறிப்பிடுகையில், செப்பனியாவில் இந்த கிருபையின் நீட்டிப்புக்கு எந்த சந்தேக குறிப்பும் இல்லை.

கர்த்தர் கிருபையுள்ளவர் என்பதை உணர்ந்து, யோசியா தேவனோடு உடன்படிக்கை செய்து கொண்டது மட்டும் அல்லாமல், ஜனங்கள் மிக பெரிய ஒரு பஸ்காவை கொண்டாடினார்கள். "அங்கே வந்திருந்த இஸ்ரவேல் புத்திரர் அக்காலத்தில் பஸ்காவையும், புளிப்பில்லாத அப்பப் பண்டிகையையும் ஏழுநாளளவும் ஆசரித்தார்கள். தீர்க்கதரிசியாகிய சாமுவேலின் நாள் தொடங்கி, இஸ்ரவேலிலே அப்படிக்கொத்த பஸ்கா ஆசரிக்கப்படவில்லை; யோசியாவும், ஆசாரியரும், லேவியரும், யூதாவனைத்தும், இஸ்ரவேலில் வந்திருந்தவர்களும், எருசலேமின் குடிகளும் ஆசரித்த பஸ்காவைப் போல இஸ்ரவேல் ராஜாக்களில் ஒருவரும் ஆசரித்ததில்லை." (2நாளாகமம் 35:17-18)"தேசத்திலுள்ள எல்லாச் சிறுமையானவர்களே, கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்களே, அவரைத் தேடுங்கள்; நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள்; அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின் நாளிலே மறைக்கப்படுவீர்கள்."(செப்பனியா 2:3) என்ற செப்பனியாவின் எச்சரிக்கை இந்நாளிலும் நமக்கு பொருந்துகிறது.

இந்த யுகத்தின் உபத்திரவ காலத்தில், முடிவான அனுபவங்களின் மிகப்பெரிய சித்திரத்தை செப்பனியாவின் தீர்க்கதரிசனம் தருகிறது. நீதியையும் சாந்தத்தையும் தேடுவதற்கு, செப்பனியாவின் வார்த்தைகளை செயல்முறைப்படுத்தவேண்டும் என்பதே, உலகிற்கு நம் செய்தியின் ஒரு பகுதியாக உள்ளது. பலியினால் சபை உடன்படிக்கை செய்துள்ளது. நாம் ஆண்டவரின் செட்டைகளினால் பாதுகாக்கப்பட்டு மறைக்கப்பட்டிருக்கிறோம். (சங்கீதம் 91:4) நாம் ஒரு சிறப்பான சிலாக்கியம் பெற்றிருக்கையில், செப்பனியாவின் வார்த்தைகள் பூமியில் உள்ள அனைவருக்கும் அறிவுறுத்தப்பட்டிருப்பதை, அர்ப்பணிக்கப்படாதவர்களுக்கு அடையாளம் காண்பிப்பதற்கு அவர்களை ஊக்குவிக்க நாம் விரும்புகிறோம். இராஜாக்கள் "குமாரனை முத்தமிட வேண்டும்" (சங்கீதம் 2:12)அதவாது, அவர்கள் நெருக்கமான ஐக்கியத்தை தேடி, இயேசுவிடமிருந்து போதனைகளைப் பெறவேண்டும். ஆயினும், இது தான் நடக்கும் என்று நாம் எதிர்பார்ப்பதில்லை.

## கிழக்கு மற்றும் மேற்கு – நியாயத்தீர்ப்பு

செப்பனியாவில் உறுதியளிக்கப்பட்ட தண்டனை யூதாவில் மட்டுமே பெற்றுக்கொள்ளவில்லை. மேற்கு நோக்கி, பெலிஸ்தியாவுக்கு எதிராகவும் செப்பனியா தீர்ப்பை அறிவித்தார். "காத்சா குடியற்று, அஸ்கலோன் பாழாகும்; அஸ்தோத்தைப் பட்டப் பகலிலே பறக்கடிப்பார்கள்; எக்ரோன் வேரோடே பிடுங்கப்படும். சமுத்திரக்கரை குடிகளாகிய கிரேத்தியருக்கு ஐயோ! பெலிஸ்தரின் தேசமாகிய கானானே, கர்த்தருடைய வார்த்தை உனக்கு விரோதமாயிக்கிறது; இனி உன்னில் குடியில்லாதபடிக்கு உன்னை அழிப்பேன். சமுத்திரக்கரை தேசம் மேய்ப்பர் தங்கும் குடில்களும் ஆட்டுத்தொட்டிகளுமாகும்."(செப்பனியா 2:4-6) கிழக்கு பக்கமாக திரும்பி, அம்மோன் மற்றும் மோவாபுக்கும் எதிராக தீர்ப்பை அறிவித்தார். "ஆகையால் மோவாப் சோதோமைப் போலும், அம்மோன் புத்திரரின் தேசம் கொமோராவைப் போலுமாகி, காஞ்சொறி படரும் இடமும், உப்புப்பள்ளமும் நித்திய பாழுமாயிருக்கும்; என் ஜனத்தில் மீந்தவர்கள் அவர்களைக் கொள்ளையிட்டு, என் ஜாதியில் மீதியானவர்கள் அவர்களைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் என்பதை என் ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார்." (செப்பனியா 2:9)

## தெற்கு – நியாயத்தீர்ப்பு

தெற்கிற்கு திரும்பிய, "எத்தியோப்பியராகிய நீங்களும் என் பட்டயத்தினால் கொலை செய்யப்படுவீர்கள்."(செப்பனியா 2:12) என்று செப்பனியா அறிவித்தார். ஆனால் "எகிப்தியர்களை" பற்றி பேசாமல் ஏன் "எத்தியோப்பியர்களை" பற்றி பேசவேண்டும்? "எகிப்தியர்களாகிய நீங்கள் என் பட்டயத்தினால் கொல்லப்படுவீர்கள்" என்று ஏன் செப்பனியா எழுதவில்லை?

எகிப்திற்கு நீண்ட வரலாறு உண்டென்று கிரேக்க வரலாற்று ஆசிரியர் ஹெரோடாட்டஸ் பதிவு செய்திருக்கிறார். "பதினெட்டு எத்தியோப்பிய அரசர்கள் இருந்தனர்" இந்த நுபியன் ("எத்தியோப்பியன்") எகிப்தின் 25வது இராஜ வம்சத்தை உள்ளடக்கியிருந்தது. மற்றும் கிமு 7 மற்றும் 6ஆம் நூற்றாண்டுகளில் முழு அதிகாரத்தையும் அது தக்க வைத்து கொண்டது.

எசேக்கியா மற்றும் ஏசாயாவின் நாட்களில் , அசீரியாவை சவாலிடுவதற்கு போதுமான இராணுவ சக்தியை ஏற்கனவே"எத்தியோப்பிய" பாரோனில் ஒருவர் திரட்டியிருந்தார். (2இராஜாக்கள் 19:8,9, ஏசாயா 37:8,9)அசீரிய இராஜா செனகரீப், எருசலேமை முற்றகையிட்டபோது, திரிகா (தஹாராக்), நூபியர்களின் ஒருவன் (எத்தியோப்பியன்), எகிப்தின் பார்வோன்கள் எசேக்கியாவுக்கு ஆதராவாக ஒரு படையை வழி நடத்தினார்கள். இந்த படையெடுப்பின் போது, தேவன் ஒரு பெரிய விடுதலையை கொடுத்தார். கர்த்தருடைய தூதன் அசீரியரின் படைகளை முறியடித்து, ஒரே இரவில் "நூற்று எண்பதாயிரம் பேர்களை" கொன்றுபோட்டார். நான்கு தலைமுறைக்கு பின், செப்பனியாவின் தீர்க்கதரிசனத்தின் போது, நைல் டெல்டா (மேல் எகிப்து) தெற்கே எகிப்தின் பகுதி தீபிஸைக் கொண்டிருந்த நூபியரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. தீர்க்கரிசன வார்த்தைகளையும் தெற்கின் தீர்ப்புகளையும் நிறைவேறும்படியாக,யோசியாவின் ஆட்சியின் முடிவில், எகிப்தின் நூபியரின் கட்டுபாட்டை முடிவுக்குக் கொண்டு வந்தது.

### வடக்கு – நியாயத்தீர்ப்பு

வடக்கே திரும்பி, செப்பனியா அசீரியாவுக்கு எதிரான தீர்ப்பு அறிவித்தார்.அந்த அருவருப்பான தேசம் விரைவில் வளர்ந்து வரும் உலக வல்லரசாகிய பாபிலோனிடம் வீழ்ச்சி அடையும். "அவர் தமது கையை வடதேசத்துக்கு விரோதமாய் நீட்டி, அசீரியாவை அழித்து, நினிவேயைப் பாழும் வனாந்தரத்துக்கொத்த வறட்சியுமான ஸ்தலமாக்குவார்." (செப்பனியா 2:13) ஈராக்கின் நவீன மோசூலின் விளிம்பில் அமைந்திருக்கும் நினிவேயின் அழிவுகள், தேவனுடைய வல்லமையின் செயல்பாட்டை நிரூபிக்கிறது.

### அசீரியாவின் பேரழிவு மற்றும் யோசியாவின் மரணம்:

அசீரியாவைக் குறித்த இந்த நியாயத்தீர்ப்பு, நவீன கால துருக்கி நாட்டில் கர்கேமிசில் தங்கள் படைகளை சேகரித்தபோது வந்தது. அசீரியாவுக்கு எதிராக கிழக்கில் இருந்து பாபிலோனியர்கள் மற்றும் மேதியர்கள் வந்தார்கள். யூதாவின் யூபிய எகிப்திய கூட்டணிகளுக்கு பதிலாக, ஒரு புதிய எகிப்திய வம்சாவளி வந்த இரண்டாம் நேகோ இடம் பெற்றார்.

"அவன் நாட்களில் எகிப்தின் ராஜாவாகிய பார்வோன்நேகோ அசீரியா ராஜாவுக்கு விரோதமாய் ஐபிராத்து நதிக்குப் போகிறபோது ராஜாவாகிய யோசியா அவனுக்கு எதிராகப் புறப்பட்டான்; பார்வோன்நேகோ அவனை மெகிதோவிலே கண்டபோது, அவனைக் கொன்றுபோட்டான்." (2இராஜாக்கள் 23:29) யோசியாவின் இந்த துயரமான நடவடிக்கைகள், இறுதியில் அவரது மரணத்தை கொண்டு வந்தது. அதோடு, யூதாவின் எல்லையிலிருந்து வெகு தூரத்திலிருக்கும் மெகிதோவில் இவர் ஏன் தலையிட வேண்டும் என்பதற்கான கேள்வி, ஒரு புதிராக நிரூபிக்கப்பட்டது. குழப்பத்தின் ஒரு பகுதி இரண்டு வெவ்வேறு ஹீப்ரு வார்த்தைகளை "எதிரிடையாக" மேற்கோள் காட்டியுள்ளது. சிலர் நேகோ அசீரியாவுக்கு எதிராக "போராடுவதற்கு" அணிவகுக்காமல், அவர்களுக்கு உதவுவதற்கு நின்றார்கள் என்று சிலர் கருத்து தெரிவிக்கிறார்கள். "எகிப்திய முன்னேற்றத்தை தாமதப்படுத்துவதன் முக்கியத்துவத்தை அவர் நன்கு அறிந்திருந்தார் என்று நாம் கருதினால், யோசியாவின் உள்நோக்கம் தெள்ள தெளிவாகும். அப்படியானால், மெக்டோட்டிற்கு ஆபத்திருந்ததை நன்கு அறிந்து முன் சென்றிருந்தால், நேகோ தனது படைகளை நிறுத்துவதன் மூலம், அசீரிய இராஜாவின் ஆளுமையை அவர் திறமையாக முத்திரையிட்டிருப்பார் அல்லது முடித்திருப்பார். இவ்வாறு, உண்மையான வீரனாக வாழ்க்கையில் தனது உயிரைக் கொடுத்த , யூத இராஜாக்களில் கடைசியானவர் என்று தெரிகிறது. மற்றும் அவரது நாடு செய்த கொடூரமான தவறுகளுக்காக, பழிவாங்கும் முயற்சி அசீரியாவின் கைகளில் வெற்றிகரமாக சிக்கியது. யோசியா இராஜா தம்முடைய வாழ்க்கையை வீர செயலினால் இழந்தது, ஒரு சரியான காரியமா ?

யோசியா இந்த இராணுவ நடவடிக்கையை எடுத்துக்கொள்வதில் தேவனுடைய சித்தத்தை விசாரித்ததைப் பற்றிய பதிவுகள் எதுவும் இல்லை. 2நாளாகமம் 35-20-27 ம் வசனங்களில், யோசியாவின் மரணத்தை பற்றியும், பாரோன் நேகோவுக்கு கொடுக்கப்பட்ட கடைசி வார்த்தையைப் பற்றியும் (வசனங்கள் 21-22) "அவன் (நேகோ) இவனிடத்துக்கு (யோசியா) ஸ்தானாதிபதிகளை அனுப்பி - யூதாவின் இராஜாவே, எனக்கும் உமக்கும் என்ன ? நான் இப்போது

உனக்கு விரோதமாய் அல்ல, என்னோடே, யுத்தம்பண்ணுகிற ஒருவனுக்கு விரோதமாய்ப் போகிறேன், நான் தீவிரிக்க வேண்டுமென்று தேவன் சொன்னார், தேவன் என்னோடிருக்கிறார். அவர் உம்மை அழிக்காதபடிக்கு அவருக்கு எதிராக செய்வதை விட்டுவிடும் என்று சொல்லச்சொன்னார்."இந்த வார்த்தைகளை கவனிக்காததற்காக யோசியாவை குறைகூறி காரியங்களைப் பற்றிய பதிவுகளை காணலாம். மெகிதோ பள்ளத்தாக்கில் யோசியா மாறுவேடத்தில், யுத்தத்திற்கு வந்தார். ஆனால், "வில்லாளர்கள் இராஜாவாகிய யோசியாவின் மேல் அம்பை எய்தார்கள்". இராஜா மரணத்திற்கேதுவாக காயம் அடைந்து, எருசலேமுக்கு எடுத்து சென்ற போது மரித்துபோனார்.

யோசியாவின் நியாயமான நோக்கங்கள், மனித வாதத்திற்கு நியாயமாக தோன்றலாம், ஆனால் தேவனிடம் விசாரிக்காமல், ஒளிவுமறைவின்றி யுத்தம் செய்யாததினால், இந்த நல்ல இராஜா தன்னுடைய முடிவை சந்தித்தார். பின்னர், யூதாவை வெல்வதற்கு பாபிலோனியர்கள், அசீரியர்களைவிட பலமானவர்களும், உறுதியானவர்கள் என்றும் நிரூபிக்க வேண்டியிருந்தது. யோசியாவைத் தொடர்ந்து, யோயாகீமும், சிதேக்கியாவும் பலவீனமான அடிமட்டமான இராஜாக்களாக இருந்தார்கள், ஒவ்வொருவரும் 11 ஆண்டுகள் வரையறுக்கப்படாத ஆட்சியை நடத்தினார்கள். தாவீதின் குடும்பத்தின் அரசாட்சி முடிவடைந்தவுடன், எருசலேம் சுட்டெரிக்கப்பட்டு, நொறுக்கப்பட்டு சாலோமோனின் ஆலயம் கொள்ளையடிக்கப்பட்டு அழிக்கப்பட்டது.

## பெலிஸ்தியர்களை கொள்ளையடித்தல்

முழு அதிகாரத்துடன் பாபிலோன், பயமிக்க ஸ்கைதியன் குதிரைப்படைகளோடு, (சிறந்த காலத்தில், எந்தவொரு கட்டுப்பாடின் கீழும் இல்லாத அசீரியர்களின் சேவையில் இருந்த துணை படைகள்) மின்னலைபோல ஒரு தாக்குதலை செய்து, முழு மத்தியதரைக் கடலோரப் பகுதியையும், பெனீனியாவிலிருந்து எகிப்து வரை கொள்ளையடித்தது. இது பார்வோன் நேகோவின் குமாரனின் காலத்தில் நடந்தது. யூதாவை பற்றி எந்த பகுதியும் காணப்படாததினால், இந்த அழிவு வேதாகமத்தில் பதிவு செய்யப்படவில்லை. இருப்பினும், அது ஹெரோடோடஸில் காணப்படுகிறது. அந்நேரத்தில், அஸ்கிலோனில், அஸ்த்தாரத்தை, "பரலோகத்தின் இராஜா" என்ற வழிபடும் மிக புகழ்பெற்ற பெலிஸ்திய கோவில் கொள்ளையடிக்கப்பட்டது. அம்மோனையும் மோவாபியரையும் பற்றிய செப்பனியாவின் நியாயத்தீர்ப்பு என்ன ? இந்த தீர்ப்பு நிறைவேற நூற்றுக்கும் அதிகமான ஆண்டுகள் எடுத்துக்கொண்டாலும், இந்த பெரிய வணிக மையங்கள் இன்று வரை கட்டப்படவில்லை.

## இராஜ்யத்தைப் பற்றிய ஒரு சித்திரம்

"ஆகையால் நான் கொள்ளையாட எழும்பும் நாள்மட்டும் எனக்குக் காத்திருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; என் சினமாகிய உக்கிர கோபத்தையெல்லாம் அவர்கள்மேல் சொரியும்படி ஜாதிகளைச் சேர்க்கவும், ராஜ்யங்களைக் கூட்டவும் நான் தீர்மானம்பண்ணினேன்; பூமியெல்லாம் என் எரிச்சலின் அக்கினியினால் அழியும்." (செப்பனியா 3:8) இந்த தீர்ப்பு, இந்த தேசங்களை வீழ்த்துவதற்காக மட்டும் அல்ல. இந்தக் கட்டத்தில் நாம் செப்பனியாவின் வார்த்தைகளை வாசிப்பதை நிறுத்திவிட்டால், நம் பரலோகத் தகப்பனின் அருமையான கிருபையை இழந்துவிடுவோம். தேவனுடைய ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாற பண்ணுவேன் என்று கர்த்தர் வாக்களிக்கிறார். (செப்பனியா 3:9)

ரோதர்ஹாம் மொழிபெயர்ப்பின் அடிக்குறிப்பில், "ஒரு தோள்பட்டை"- ஒரு குழு ஒரு வண்டியை நகர்த்துவதற்கு தள்ளக்கூடிய செயல், என்று விளக்கம் அளிக்கப்படுகிறது. இறுதி அதிகாரத்தின் சிறப்பு வாக்குறுதிகள், இஸ்ரயேலின் மறுசீரமைப்பில் கவனம் செலுத்துகையில், எத்தியோப்பியாவின் நதிகளுக்கு அப்பால் இருந்து, மனுதாரர் வரவிருப்பதாக செப்பனியா கூறுகிறார். (செப்பனியா 3:10), மனிதனுடைய இருதயத்தின் தேவைகளுக்கு உண்மையில் சத்தியம் மட்டுமே பதிலளிப்பதினால், இது இராஜ்யத்தின் ஆசீர்வாதங்கள் பரவலாக இருப்பதை சித்தரிக்கிறது. பெருமை, அகந்தை, தவறு, பொய்யானது இராஜ்யத்தில் வெளியேற்றப்படும்.(செப்பனியா 3:11-13) . சீயோனிலும், எருசலேமிலும் மகிழ்ச்சியூட்டும் பாடல் அன்றைய தினம் பாடப்படும். (செப்பனியா 3:14) யேகொவா தேவனின் குரலும் மகிழ்ச்சியான பாடல்கள் மூலமாக எழுப்பப்படும் என்ற உறுதியும் நாம் பெற்றிருக்கிறோம். "அவர் உன் பேரில் கம்பீரமாக களிக்கூருவார்" (செப்பனியா 3:17) சீயோன் மற்றும் எருசலேமின் நாமங்கள் பூமியெங்கும் பாராட்டப்பட வேண்டும் என்ற வாக்குறுதியுடன் செப்பனியாவின் தீர்க்கதரிசனம் முடிவடைகிறது. முழு மனுக்குலத்திற்கும், தேவனுடைய மகத்தான தெய்வீகத் திட்டத்தில் எவ்வளவு பரந்த ஞானம் காணப்படுகிறது !

ஆகாய்

# நான் இந்த வீட்டை மகிமையால் நிரப்புவேன்



"சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்: கொஞ்சக்காலத்துக்குள்ளே இன்னும் ஒருதரம் நான் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் வெட்டாந்தரையையும் அசையப்பண்ணுவேன். சகல ஜாதிகளையும் அசையப்பண்ணுவேன், சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார்; இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப்பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." (ஆகாய் 2 : 6,7)

**Ernie Kuenzli**

பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து இஸ்ரயேல் திரும்பி, பதினெட்டு வருடங்கள் சென்ற பின்னும், ஆலயம் மறுபடியும் கட்டப்படவில்லை. ( ஆசிரியர் குறிப்பு - கோரேஸ் தன்னுடைய அரசாட்சியின் முதலாம் வருஷத்தில், யூதர்களை விடுவித்தார். மொத்தத்தில் அவர் 9 வருடங்கள் ஆட்சி செய்தார். அவருடைய குமாரன் காம்பிஸ் 8 ஆண்டுகள் ஆட்சி செய்தார். மற்றும் ஆகாய் புத்தகம், தரியு ஹிஸ் டாஸ் பஸின் இரண்டாம் ஆண்டு துவங்குகிறது. (ஆகாய் 1:1) ஆகையால், ஆகாய் தீர்க்கத்தரிசனம் 18 வருடங்களானது இஸ்ரயேல் தேசம் திரும்பின பின் (9+8=18) பெர்சிய இராஜாவாகிய கோரேசு ஆலயத்தை மறுபடியும் கட்டுவதற்கான பிரகடனத்தை கொடுத்தாலும், அதன் அஸ்திவாரங்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு போடப்பட்டிருந்தாலும், இஸ்ரயேலின் எதிரிகளால் அந்த முயற்சிகள் முடக்கிவிடப்பட்டது. (எஸ்றா 1:1-11, 3:6, 8:11,4:4-24)

இராஜாவாகிய தரியு அரசாண்ட இரண்டாம் வருஷத்தில், கர்த்தருடைய வார்த்தை யூதாவின் ஆளுனராகிய செருபாபேலுக்கும், பிரதான ஆசாரியரான யோசுவாவுக்கும் ஆகாய் வழியாக வந்தது. "இந்த ஜனங்கள் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கு ஏற்றகாலம் இன்னும் வரவில்லை என்கிறார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். இந்த வீடு பாழாய்க் கிடக்கும் போது, நீங்கள் மச்சுப்பாவப்பட்ட உங்கள் வீடுகளில் குடியிருக்கும் படியான காலம் இதுவோ?" (ஆகாய் 1:2,4)

## இஸ்ரயேல் தேவனுடைய வீட்டை கட்ட மறுத்தது

தங்கள் எதிரிகளால் தடை செய்யப்பட்டவர்கள், இஸ்ரயேலுக்கு திரும்பி வந்து, தேவனுடைய ஆலயத்தை மறுபடியும் கட்டுவதை புறக்கணித்து, தங்கள் வீடுகளையும் தற்காலிகமான வாழ்கையையும் திரும்ப கட்டவும் அவர்களின் கவனம் திரும்பியது. "இப்போதும் சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்: உங்கள் வழிகளைச் சிந்தித்துப்பாருங்கள். நீங்கள் திரளாய் விதைத்தும் கொஞ்சமாய் அறுத்துக்கொண்டு வருகிறீர்கள்; நீங்கள் புசித்தும் திருப்தியாகவில்லை; குடித்தும் பரிபூரணமடையவில்லை; நீங்கள் வஸ்திரம் உடுத்தியும் ஒருவனுக்கும் குளிர் விடவில்லை; கூலியைச் சம்பாதிக்கிறவன் பொத்தலான பையிலே போடுகிறவனாய் அதைச் சம்பாதிக்கிறான். உங்கள் வழிகளைச் சிந்தித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். நீங்கள் மலையின் மேல் ஏறிப்போய், மரங்களை வெட்டிக் கொண்டு வந்து, ஆலயத்தைக் கட்டுங்கள்; அதின் பேரில் நான் பிரியமாயிருப்பேன், அதினால் என் மகிமை விளங்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (ஆகாய் 1:5-8) என்று தேவன் விவரித்தபோது, இந்த ஒரு புறக்கணிப்பு, அவர்களின் தற்காலிகமான வழிகளை காயப்படுத்தியது.

"கஷ்டத்தின் கணிசமான பகுதி, மதத்தின் மந்தமான நிலையில் உள்ளது. தேவனுடைய ஆலயமாகிய வீடு பாழாக கிடந்தபோது, ஜனங்கள் தங்களுக்கென்று வசதியான வீடுகளையும் தோட்டங்களையும் ஏற்படுத்திக்கொண்டதாக தோன்றுகிறது" என்று சகோதரர் சார்லஸ் ரசல் எழுதினார். ஆகவே யூதர்களை கடிந்துக்கொண்டு, ஊக்குவிப்பதற்கு, தேவன் ஆகாயை அனுப்பினார். (எஸ்றா 5:1,2, 6:4)

தேவனுக்காக இஸ்ரயேல் செய்த சேவைக்கும், அவர்களுடைய தற்காலிகமான செழிமைக்கும் இடையிலான தொடர்பு, நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கையின் கீழ் தேவனுடைய வாக்குத்தத்தத்தின் ஒரு பகுதியாக இருந்தது. இஸ்ரயேல் அவருடைய (தேவனுடைய)

கட்டளைகளையெல்லாம் செய்ய கவனமாயிருந்தால்" அவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். (உபாகமம் 28:1-14) மறுபுறம், இஸ்ரயேல் "தேவனாகிய கர்த்தருக்கு கீழ்ப்படியாமல், அவருடைய கற்பனைகளின் படியும் அவருடைய கட்டளைகளின்படியும் செய்யக் கவனமாக இராவிட்டால்", அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் (உபாகமம் 28:15-45) தேவனுடைய வீட்டை கட்டியமைப்பதை அவர்கள் புறக்கணித்ததால், ஆகாய் 1:5-8 ல் சொல்லப்பட்ட சாபங்கள் யூதர்களுக்கு நேர்ந்தது.

தற்காலிக செழிப்பு, தேவனோடு ஒரு நல்ல ஆன்மீக நிலையில் இருப்பதை பொருள்படுத்துகிறது என்று, இன்று பல கிறிஸ்தவர்கள் தவறாக நினைக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் பலியினால் செய்த ஒரு உடன்படிக்கையின் கீழ் இருப்பதை மறந்து விடுகிறார்கள். (சங்கீதம் 50:5) இன்று நீதியுள்ளவர்கள் அல்ல தீமையானவர்களும், துன்மார்க்கரும் செழித்தோங்கி வெகுமதியளிக்கப்படுகிறார்கள். "இப்போதும் அகங்காரிகளைப் பாக்கியவான்கள் என்கிறோம்; தீமை செய்கிறவர்கள் திடப்படுகிறார்கள்; அவர்கள் தேவனைப் பரிட்சை பார்த்தாலும் விடுவிக்கப் படுகிறார்களே என்று சொல்லுகிறீர்கள்." (மல்கியா 3:15)

மெய்யான கிறிஸ்தவர்கள் செலுத்தும் பலிகளுக்கும், ஆண்டவருக்காக அவர்களுடைய சேவைகளுக்கும், தற்காலிகமான, செழிப்புள்ள வாழ்க்கையை அல்ல, இருதயத்திலும், வாழ்க்கை பாதையிலும் தேவனுக்கும் அவருடைய நேச குமாரனுக்கும் நெருக்கமான இருதய நிலை தன்மையை ஆவிக்குரிய பரிசாக அளிக்கப்படுகிறது. தேவனுடைய அன்பான குமாரனின் சாயலுக்கு ஒப்பாக இணங்குவதன் மூலம், கிறிஸ்துவுக்குள் விசுவசத்தின் அஸ்திபாரத்தின் மேல் தங்கம், வெள்ளி மற்றும் விலையுயர்ந்த கற்களால் கட்டியெழுப்ப வேண்டும் என்ற அப்போஸ்தலனாகிய பவுல் கொடுத்த ஆலோசனையை அவர்கள் பின்பற்றியிருக்க வேண்டும். (ரோமர் 8:29, 1கொரிந்தியர் 3:11-15) ஒரு கிறிஸ்தவர் தன்னுடைய விசுவாசத்தோடு ஒழுக்கத்தையும், ஞானத்தையும் (தேவனைப் பற்றியும், சத்தியத்தைப் பற்றியும் அவருடைய குமாரனைப் பற்றியும்) இச்சையடக்கத்தையும், பொறுமையையும், (தேவனுக்கேற்ற கீழ்படிதல்) தேவ பக்தியையும், சகோதர சிநேகத்தையும் அன்பையும் கூட்டி வழங்கினால், "நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய இராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்." (2பேதுரு 1:5-11) உண்மையான கிறிஸ்தவர் தேடக்கூடிய செழுமை இதுவே.

## இஸ்ரயேல் ஆகாயின் செய்திக்கு செவிக் கொடுத்தார்கள்

"அப்பொழுது செயல்த்தியேலின் குமாரனாகிய செருபாபேலும், யோத்சதாக்கின் குமாரனாகிய யோசுவா என்னும் பிரதான ஆசாரியனும், ஜனத்தில் மீதியான அனைவரும் தங்கள் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்துக்கும், தங்கள் தேவனாகிய கர்த்தர் அனுப்பின ஆகாய் என்னும் தீர்க்கதரிசியினுடைய வார்த்தைகளுக்கும் செவி கொடுத்தார்கள், ஜனங்கள் கர்த்தருக்கு முன்பாகப் பயந்திருந்தார்கள்."(ஆகாய் 1:12) இஸ்ரயேலர் ஆகாய்னுடைய வார்த்தைகளுக்கு செவிக் கொடுத்தபடியினால், தேவன் மேல் உள்ள பக்தியை அவர்கள் வெளிப்படுத்தினார்கள். இது ஆகாயின் தண்டனைக்குரிய செய்தியை, ஊக்கமளிக்கக்கூடிய செய்தியாக மாற்றியது. "பின்பு கர்த்தர் செயல்த்தியேலின் குமாரனாகிய செருபாபேல் என்னும் யூதாவின் தலைவனுடைய ஆவியையும், யோத்சதாக்கின் குமாரனாகிய யோசுவா என்னும் பிரதான ஆசாரியனுடைய ஆவியையும், ஜனத்தில் மீதியான எல்லாருடைய ஆவியையும் எழுப்பினார்; அவர்கள் வந்து, தங்கள் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் ஆலயத்திலே வேலை செய்தார்கள்." (ஆகாய் 1:14)

அவர்கள் ஆலயத்தைத் திரும்ப கட்டினாலும் அது சாலோமோன் கட்டின மகிமையான ஆலயத்தைபோல இராவிட்டாலும், ஊக்குவிக்கும் ஆகாய் தீர்க்கத்தரிசியின் செய்தி 2 ம் அதிகாரத்திலும் தொடர்கிறது. "இந்த ஆலயத்தின் முந்தின மகிமையைக் கண்டவர்களில் உங்களுக்குள்ளே மீந்திருக்கிறவர்கள் யார்? இப்பொழுது இது உங்களுக்கு எப்படிக் காண்கிறது? அதற்கு இது உங்கள் பார்வையில் ஒன்றுமில்லாதது போல் காண்கிறதல்லவா?ஆனாலும் செருபாபேலே, நீ திடன் கொள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; யோத்சதாக்கின் குமாரனாகிய யோசுவா என்னும் பிரதான ஆசாரியனே, நீ திடன்கொள்; தேசத்தின் எல்லா ஜனங்களே, நீங்கள் திடன்கொள்ளுங்கள், வேலையை நடத்துங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் உங்களுடனே இருக்கிறேன்

என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." (ஆகாய் 2:3-4)

## மீண்டும் ஒருமுறை வானங்களும் பூமியும் அசைக்கப்படும்

சாலோமோனின் ஆலயம் மற்றும் செருபாபேலின் ஆலயத்தை அடையாளப்படுத்தும் ஒரு மிக பெரிய ஆலயம் கட்டி முடித்த பின் இந்த ஆகாயின் செய்தி ஒரு எதிர்கால தீர்க்கதரிசனமாக மாறியது. "சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்: கொஞ்சக்காலத்துக்குள்ளே இன்னும் ஒருதரம் நான் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் வெட்டாந்தரையையும் அசையப்பண்ணுவேன். சகல ஜாதிகளையும் அசையப்பண்ணுவேன், சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார்; இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப்பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். வெள்ளியும் என்னுடையது, பொன்னும் என்னுடையது என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். "(ஆகாய் 2:6,7,9)

ஒருவேளை, இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் அசைவு, சீனாய் மலையில், நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்ட போது நடந்த சம்பவங்களை நினைவுப்படுத்தியிருக்க வேண்டும். "மேசேயும்: நான் மிகவும் பயந்து நடுங்குகிறேன் என்று சொல்லத்தக்கதாக அந்தக் காட்சி அவ்வளவு பயங்கரமாயிருந்தது." (எபிரெயர் 12:21) ஆயினும், ஆகாயின் குறிப்புகள் வருங்காலத்திற்குரியதாக இருந்தது." கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மட மட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்."(2பேதுரு 3:10)

எபிரெயர் 12:26,27 ம் வசனங்களில் அப்போஸ்தலனாகிய பவுல், ஆகாயின் தீர்க்கதரிசனத்தை குறிப்பிடுகிறார், "அவருடைய சத்தம் அப்பொழுது பூமியை அசையப்பண்ணிற்று; இன்னும் ஒருதரம் நான் பூமியை மாத்திரமல்ல, வானத்தையும் அசையப்பண்ணுவேன் என்று இப்பொழுது வாக்குத்தத்தஞ் செய்திருக்கிறார். இன்னும் ஒருதரம் என்கிற சொல்லானது அசையாதவைகள் நிலைத்திருக்கத்தக்கதாக, அசைவுள்ளவைகள் உண்டாக்கப்பட்டவைகள் போல மாறிப்போம் என்பதைக் குறிக்கிறது."(26,27) தற்போதுள்ள தீய உலகங்களின் - மதம், பொருளாதாரம், சமுதாயம் மற்றும் அரசியல் நிறுவனங்கள் ஆகியவை நீக்கப்பட்டு, அவைகள் இருந்த இடத்தை - "நீதி வாசம் செய்யும், புதிய வானங்களும், ஒரு புதிய பூமியும் எடுத்துக்கொள்ளும். (2பேதுரு 3:13)

புதிய (ஆவிக்குரிய) வானங்கள் சாலோமொனின் ஆலயத்தாலும், செருபாபேல் மற்றும் இஸ்ரயேலர்களும் கட்டி ஆலயத்தினால் சித்தரிக்கப்பட்டது." ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்; அவர் மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது;"(எபேசியர் 2:19-21) என்று கூறி அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்துவையும், சபையையும் ஆலயமாக விவரிக்கிறார். "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?" (1கொரிந்தியர் 3:16) என்றும் அவர் கூறுகிறார்.

## ஆவிக்குரிய [நிஜமான] ஆலயத்தை கட்டுதல்

ஆகாயின் நாட்களில் தேவனுடைய ஆலயம் மீண்டும் கட்டியமைப்பது, சுவிசேஷயுகத்தில் தனிப்பட்ட நபர்கள் ஒவ்வொருவராக தேவனுடைய ஆவிக்குரிய ஆலயமாக எவ்வாறு கட்டப்படுகிறார்கள் என்பதற்கு ஒரு அருமையான சித்திரம். இந்த ஆலயத்திற்கு இயேசு கிறிஸ்து முக்கிய மூலைக்கல்லாக இருக்கிறார். அவருடைய விசுவாசமுள்ள சீஷர்கள் அனைவரும், வடிவமைக்கப்பட்டு, பொருத்தப்பட்டு, மெருகேற்றப்பட்டு, ஆவிக்குரிய ஆலயத்தில் ஒரு இடத்தைப்பெற அவருடைய சாயலாக (ஜீவனுள்ள கற்களாக) ஆயத்தம் செய்யப்படுகிறார்கள். இதை கட்டுபவரும், தயாரிப்பவரும் பிதாவாகிய தேவனே. (1பேதுரு 2:5,7, 11:10)

இந்த ஆவிக்குரிய ஆலயத்தில், ஒரு இடத்தைப் பெறுவதற்கு, தேவனுடைய கையின் கிரியைகளாக, நாம் ஆயத்தமாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம்(எபேசியர்2:10). "ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன், அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை;

என் தேவனுடைய நாமத்தையும் என் தேவனால் பரலோகத்திலிருந்திறங்கி வருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும், என் புதிய நாமத்தையும் அவன் மேல் எழுதுவேன்." (வெளி 3:12)

செருபாபேல் அல்லது சாலோமோனின் ஆலயத்தின் மகிமையைவிட இந்த ஆவிக்குரிய ஆலயத்தின் மகிமை அதிகமாக இருக்கும். இந்த ஆவிக்குரிய ஆலயத்தின் வழியாக, சகல ஜாதிகளுக்கும் தேவன் சமாதானத்தை கொண்டு வருவார். இந்த ஆலயத்தின் தலைக்கு மூலை கல்லாகிய இயேசுவே, சமாதான பிரபுவாக இருப்பார். கிறிஸ்துவாகிய தலை மற்றும் சரீரத்தின் வழியாக தேவன் இஸ்ரயேலருக்கும் எல்லா மனிதருக்கும் சமாதானத்தை ஒரு நதியைப் போல ஓடச்செய்வார். (ஏசாயா 9:6, 66:12, சகரியா 9:10)

## தேவன் இஸ்ரயேலின் முயற்சிகளை ஆசீர்வதிப்பார்

"அப்பொழுது ஆகாய்: அப்படியே இந்த ஜனங்களும் இந்த ஜாதியாரும் என் சமுகத்தில் இருக்கிறார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்களுடைய கைகளின் எல்லாக் கிரியைகளும் அப்படியே இருக்கிறது; அவர்கள் அங்கே கொண்டு வந்து படைக்கிறதும் தீட்டுப்பட்டிருக்கிறது. இப்போதும் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டும்படி ஒரு கல்லின் மேல் ஒரு கல் வைக்கப்பட்டது முதல் நடந்ததை உங்கள் மனதிலே சிந்தித்துப் பாருங்கள். களஞ்சியத்தில் இன்னும் விதைத்தானியம் உண்டோ? திராட்சச்செடியும் அத்திமரமும் மாதளஞ்செடியும் ஒலிவமரமும் கனி கொடுக்கவில்லையே; நான் இன்று முதல் உங்களை ஆசீர்வதிப்பேன் என்று சொல்லுகிறார் என்றான்." (ஆகாய் 2:14,15,19) என்று ஆகாய் தொடருகிறார். தேவன் இஸ்ரயேலின் இருதயத்தின் நோக்கத்தையும், அவருடைய ஆலயத்தை கட்டியெழுப்புவதற்கான அவர்களுடைய விருப்பத்தையும் கண்டு, அவர்கள் அந்த கட்டுமான பணியில், வெற்றி அடையும்படிக்கு, அவர்களை தேவன் ஆசீர்வதிக்க ஆயத்தமானார். அதேபோல, சபையின் முயற்சிகள் அற்பமாக தோன்றினாலும், அவைகள் கிறிஸ்துவின் ஈடுபலியின் புண்ணியங்களால் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதாக இருப்பினும் சுவிசேஷ யுகம் முழுவதும், தேவன் சபையை ஆசீர்வதிக்கிறார். "ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார் " அந்த ஆவிக்குரிய ஆலயம் முழுமை அடைந்த பின், அது தேவனுடைய மகிமையினால் நிரப்பப்படும். (பிலிப்பியர் 2:13, வெளி 15:8)

## ஆகாயின் கடைசி வார்த்தைகள்

ஆகாயின் இறுதி வார்த்தைகளில், எதிர்காலத்தின் பெரும் அசைவைப் பற்றி தேவன் வலியுறுத்துகிறார். ராஜ்யங்களின் சிங்காசனத்தைக் கவிழ்த்து, ஜாதிகளுடைய ராஜ்யங்களின் பெலத்தை அழித்து, இரதத்தையும் அதில் ஏறியிருக்கிற வர்களையும் கவிழ்த்துப் போடுவேன்; குதிரைகளோடே அவைகளின் மேல் ஏறியிருப்பவர்களும் அவரவர் தங்கள் தங்கள் சகோதரனின் பட்டயத்தினால் விழுவார்கள். (ஆகாய் 2:22) இந்த அசைவு, அதிகாரங்களையும் (சிம்மாசனங்களை), ஜாதிகளின் வல்லமைகளையும் மனித உபதேசங்களையும் (குதிரைகள்), தலைவர்கள் (ஓட்டுனர்களையும்) தூக்கி எறியும், மற்றும் மனுக்குலத்தின் உலக நிறுவனங்கள் ஒருவருடைய பட்டயத்தால் ஒருவரை வெட்டி வீழ்த்துவார்கள்.

ஆண்டவரின் மகா பெரிய சேனையின் வேலையைக் குறித்தும், அதன் விளைவாக அர்மெகதோன் யுத்தத்தில், ஒவ்வொரு மனுஷனுடைய கையும் அவருடைய அயலானுக்கு எதிராக திரும்புவதைக் குறித்து எப்படிப்பட்ட சுருக்கமான விளக்கம் கொடுக்கப்படுகிறது. (எசேக்கியேல் 38:21, சகரியா 14:13) இந்த உபத்திரவம் ஆவிக்குரிய ஆலயத்திற்கு வழியை ஆயத்தம் செய்யும், அனைவருக்கும் சமாதானத்தை கொண்டுவருதற்கு, அது முழுமை அடையும்.

## முடிவுரை:

இந்த சுவிசேஷ யுகத்தின் போது, ஆவிக்குரிய ஆலயம் (புதிய வானங்கள்) கட்டுமானத்தில் இருப்பதை ஆகாயின் செய்தி நமக்கு நினைப்பூட்டுகிறது. அதன் மகிமை நிறைவடையும் போது, இஸ்ரயேலின் பூமிக்குரிய ஆலயங்களைவிட அதன் மகிமை பெரிதாக இருக்கும், அது ஜனங்களுக்கு சமாதானத்தை அளிக்கும்.

தேவனுடைய ஆவிக்குரிய ஆலயத்தை கட்டியெழுப்புவதற்கு, ஆகாயின் வார்த்தைகள் நம்மை அதிகமாய் உற்சாகப்படுத்தட்டும். குறிப்பாக இந்த புதிய ஆலயத்தின் கற்களாக மாறுவதற்கு ஒருவருக்கொருவர் உதவிச் செய்வோமாக !

# சகரியாவின் எட்டு இரவு தரிசனங்கள்



Joe Megacz

"நான் என் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபோது," (சகரியா 1:18, 2:1, 5:1,6:1)

ஒரே இரவில், சகரியா கண்ட தரிசனங்களையும் , அவைகளுக்குள் யுகங்களைப் பற்றிய தெய்வீக திட்டத்தின் சிறு உருவங்களையும் நாம் இந்த கட்டுரையில் காணப்போகிறோம். இந்த தரிசனங்கள் மிகுதியான அடையாளங்களை கொண்டுள்ளது. இவைகளில் சில தரிசனங்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட விளக்கங்களை உடையது.

### தரிசனம் ஒன்று – மிருதுச்செடிகளின் மத்தியில் குதிரைகள் (சகரியா 1:7–17)

இந்த முதல் தரிசனத்தில் தேவன் சகரியாவுக்கு, அவருடைய தெய்வீகத் திட்டத்தின் இறுதி நோக்கத்தை - நீதியின் சமாதானமான இராஜ்யம் - அதன் முடிவை துவக்கத்திலிருந்து காண்பிக்கிறார். இந்த தரிசனத்தில், முக்கிய கதாபாத்திரமாக, சிவப்புக் குதிரையின் மேலுள்ள ஒரு மனிதர், நம்முடைய கர்த்தாராகிய இயேசுவை சித்தரிக்கிறார். இவருடைய இரட்சிப்பின் வேலைகள் மற்றும் மனுக்குலத்தின் மறுசீரமைப்பின் வழியாகவே, இந்த இராஜ்யம் நிறைவுக்கு வரும். வழக்கமாக குதிரைகள் உபதேசங்களை அடையாளப்படுத்து வதினால், இந்த குதிரையின் சிவப்பு நிறம், மீட்கும் பொருளின் உபதேசத்தை குறிக்கிறது. இயேசுவின் இரத்தத்தின் புண்ணியமானது, தேவனுடைய நீதியை திருப்திப்படுத்தி, ஆதாமின் மரணதண்டனையிலிருந்து மனிதனின் விடுதலையைப்பெற்று தந்தது. மிருதுச்செடிகள் மனுக்குலத்தின் பரிபூரணத்தை அடையாளப்படுத்துகிறது, அந்த மிருது செடிகளில் உள்ள வெள்ளை நிற பூக்கள், பரிசுத்தமான பெரும்பாதையில், தங்களுடைய பயணத்தை நிறைவு செய்தவர்களின் நீதியைக் குறிக்கிறது. எட்டாம் வசனத்தில் "பள்ளத்தாக்கு" என்ற வார்த்தை - அனைத்துப் பக்கங்களிலும் மலையினால் பாதுகாக்கப்படுகிற அமைதியான புல்வெளியைக் குறிப்பிடுகிறது - இது தேவனுடைய நித்தியமான இராஜ்யத்தின் மலையாகும்.

மற்ற குதிரைகளை பற்றி இரண்டு சாத்தியமான விளக்கங்கள் உள்ளது. பொதுவாக குதிரைகள் உபதேசங்களை அடையாளப்படுத்துவதினால், ஒருவேளை இந்த குதிரைகளின் மேம்பட்ட வண்ணங்கள், சிவப்பு, புள்ளியுள்ளவைகள் மற்றும் வெள்ளை ஆகியவை, உயிர்த்தெழுதலின் ஒப்புரவாக்குதல், பாவ நிவாரணன பலிகள் மற்றும் மறுசீரமைப்பின் உபதேசங்களை அடையாளப்படுத்தலாம். இவைகள் மனுஷனுடைய பாவமுள்ள சிவப்பு நிலையிலிருந்து ஒரு புள்ளியுள்ள நிலைமையில் முன்னேறி அதாவது பழைய ஆதாமின் சிந்தனைகள் மற்றும் பழக்கவழக்கங்களை அகற்றி பரிசுத்தமான பொரும்பாதையின் முன்னேறி ஒரு பரிப்பூரணமான நிலைக்கு மாறுவதை எடுத்துக்காட்டுகிறது. இந்த குதிரைகளைப் பற்றிய இரண்டாவது விளக்கம் அடுத்த மூன்று வசனங்களில் கொடுக்கப்படுகிறது. "அப்பொழுது நான்: என் ஆண்டவரே, இவர்கள் யாரென்று கேட்டேன்; என்னோடே பேசுகிற தூதனானவர்: இவர்கள் யாரென்று நான் உனக்குக் காண்பிப்பேன் என்று சொன்னார். அப்பொழுது மிருதுச் செடிகளுக்குள்ளே நின்ற அந்தப் புருஷன் பிரதியுத்தரமாக: இவர்கள் பூமியெங்கும் சுற்றிப்பார்க்கக் கர்த்தர் அனுப்பினவர்கள் என்றார். பின்பு அவர்கள் மிருதுச் செடிகளுக்குள்ளே நின்ற கர்த்தருடைய தூதனை நோக்கி: நாங்கள் பூமியெங்கும் சுற்றிப்பார்த்தோம்; இதோ, பூமி முழுவதும் அமைதலும் அமரிக்கையுமாய் இருக்கிறது என்றார்கள்." (சகரியா 1:9-11)

இந்த விளக்கத்தை பார்க்கையில், இந்த குதிரைகள் பூமியை கவனித்து, கண்காணித்து, சிவப்பு குதிரையின் மேல் ஏறியிருந்த மனிதனிடத்தில் தகவல் கொடுக்கக்கூடிய காவலர்களைப் போல தோன்றுகிறது. தேவனால் அனுப்பட்டவர்களும், இராஜ்யத்தில் அங்கும் இங்கும் நடமாடும், இந்த விசுவாசமுள்ள காவலாளிகள், முற்பிதாக்களை சித்தரிக்கலாம். இந்த விளக்கத்தை ஆதரிக்கும்படி, எட்டாவது மற்றும் கடைசியுமான தரிசனத்தில், தேவனுடைய திட்டத்தில், ஜனங்களின் பல

வகுப்பாரை அடையப்படுத்தும் பல்வேறு வண்ண குதிரைகள் பயன்படுத்தப்படுவதை காணலாம்.

அடுத்த தரிசனங்கள் ஜோடியாக வருகிறது. 2-3 தரிசனங்கள் மாம்ச இஸ்ரயேலரைப் பற்றியது, 4-5 தரிசனங்கள் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களைப் பற்றியது, 6-7 தரிசனங்கள் போலியான ஆவிக்குரிய இஸ்ரயேலர்களைப் பற்றியும், மற்றும் 8வது தரிசனத்தின் இரண்டு காட்சிகள் ஆவிக்குரிய இஸ்ரயேலின் வெற்றியைப் பற்றியும் அவர்கள் பரிசளிக்கப்படுவதையும் காண்பிக்கப்படுகிறது.

## தரிசனம் இரண்டு – நான்கு கொம்புகளும், நான்கு தொழிலாளிகளும் (சகரியா 1:18–21)

நான்கு கொம்புகள் மற்றும் நான்கு தொழிலாளிகள் பற்றிய சகரியாவின் இரண்டாம் தரிசனம், யுகங்களைப் பற்றிய தெய்வீக திட்டத்தில் - புறஜாதியாரின் காலம் என்ற ஒரு முக்கிய காலப்பகுதியைப் பற்றிய தரிசனமாகும். கொம்புகள் வல்லமையை அடையாளப்படுத்துகிறது, மற்றும் இந்த நான்கு கொம்புகள், தேவனுடைய தெரிந்துக்கொள்ளப்பட்ட ஜனங்களாகிய இஸ்ரயேலையும், யூதாவையும் சிதறடித்தவர்கள் என்று விவரிக்கப்படுகிறது. இவ்வாறு, நாம் அவைகளை, புறஜாதி அதிகாரங்களாகிய நான்கு உலகளாவிய பேரரசுகள் என்று எளிதாக அடையாளம் கண்டுக்கொள்ளலாம் - பாபிலோன், மேதோ -பெர்சியா, கிரேக்கம் மற்றும் ரோம். தேவன் இந்த நான்கு புறஜாதி வல்லமைகளுக்கும், இஸ்ரயேல் தேசத்தின் மேலும், அதை சுற்றியுள்ள இந்த பூமியின் மேலும் அதிகாரம் கொடுத்தார். ஆனால் யார் இந்த தொழிலாளிகள் ? (எபிரெயர் - இரும்பு தொழிலாளர்கள் அல்லது கற்பனை பொறியாளர்) ஒருவேளை, இவர்கள் தேவனுடைய நான்கு குணங்களாகிய ஞானம், நீதி, அன்பு மற்றும் வல்லமையை அடையாளப்படுத்தலாம். தேவன் அந்த கொம்புகளை "பிடுங்குகிறார்", என்பதற்கு அவர் அவைகளை தம்முடைய சித்தத்தின்படி பயன்படுத்தி, ஒரு தொழிலாளியைப் போல அளந்து, வெட்டி, வடிவமைத்து, மரத்தை செதுக்குகிறார். அதற்குபின், ஒவ்வொன்றாக அதனை தேவன் புறக்கணிக்கிறார். கடைசியாக, ஏழத்தனையாக அல்லது 2,520 வருடங்களான அதிகாரம் 1914ல் முடிவடைந்த போது நான்காவது புறஜாதி பேரரசை புறக்கணித்தார்.

## தரிசனம் மூன்று – எருசலேமை அளவிடுகிற ஒரு மனுஷன் (சகரியா 2:1–13)

எருசலேமை அளவிடுகிற ஒரு மனுஷனைப்பற்றிய சகரியாவின் மூன்றாவது தரிசனம், யுகங்களின் தெய்வீக திட்டத்தில், இஸ்ரயேலின் மறுசீரமைப்பின் ஒரு முக்கிய கூற்றைப் பற்றியதாகும். தேவன் இஸ்ரயேலை நியாயந்தீர்த்து (அளந்து) அவர்களின் பாவங்களுக்காகவும், தேவனுடைய நியாயப்பிரமாணத்தை அசட்டை பண்ணியதாலும் அவர்களை தண்டித்து, புறஜாதியாரின் காலங்களில், அவர்கள் தங்கள் தேசத்தை இழக்க செய்தார். இப்போது, புறஜாதிகளின் கைகளில் உண்டான அவர்களின் தண்டனை முழுமைப்பெற்றது. தேவனுடைய இரக்கம் மீண்டும் இஸ்ரயேலுக்கு திரும்பியது. புதிய கட்டமைப்புகள் மற்றும் நகரங்களை நிர்மாணிப்பதற்கும், கட்டியமைப்பதற்கும் ஒரு அளவீடு பயன்படுத்தப்பட்டது.

மூன்று முதல் ஏழு வசனங்கள் வரை, புறஜாதியாரின் காலத்தில் மாம்ச இஸ்ரயேலர்கள் சிதறடிக்கப்பட்டபின், தேவன் அவர்களை சமாதானத்திற்கும், செழுமைக்கும், கூட்டி சேர்த்து, அவர்களை மறுசீரமைப்பதைப் பற்றி இந்த தரிசனம் சித்தரிக்கிறது. மீண்டும் எந்த எதிரியும் அவர்களைச் சிதறடிக்காதபடிக்கு அவர் அவர்களைச் சுற்றிலும் அக்கினி மதிலாக பாதுகாப்பார். அவருடைய பிரசன்னம் அவர்களுக்குள்ளும், அவர்கள் மத்தியிலும் இருக்கும். கடந்த நூற்றாண்டில் இஸ்ரயேல் தேசத்துக்கு தேவன் தம்முடைய ஜனங்களை திரும்ப கூட்டிசேர்க்க துவங்கிய போது, இந்த தரிசனத்தின் நிறைவேற்றத்தின் ஆரம்பத்தை நாம் பார்த்திருக்கிறோம். மாம்ச இஸ்ரயேலின் மறுசீரமைப்பை பற்றிய தரிசனத்தின் மகிமையான நிறைவேற்றம் வெகு சீக்கிரத்தில் வரும்.

இந்த தரிசனங்கள் பல பயன்பாடுகளைக் கொண்டிருக்கலாம், மேலும் இந்த விஷயத்தில் ஏழாம் வசனத்தில், சுவிசேஷ யுகத்தின் சபையாகிய, ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கும் ஒரு பயன்பாடு உண்டு. "பின்பு, வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன். அது: என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்." (வெளி 18:4) சுவிசேஷயுகத்தின் போது, உண்மையான ஆவிக்குரிய இஸ்ரயேல் இயேசுவின் வருகை வரையில் பாபிலோனால் சிறைப்பிடிக்கப் பட்டிருந்தார்கள். அதற்கு பின், சீயோன் குமாரத்திகள்

பாபிலோனைவிட்டு வெளிவரும்படிக்கு அழைப்பு கொடுக்கப்பட்டது. ஆனால் நம்முடைய ஆண்டவர் அவருடைய மணவாட்டியை , அவருடைய கண்ணின் மணியை, அவரோடு கூட்டி சேர்க்க வந்துவிட்டார், இப்போது நாம் அவரோடு களிக்கூறுகிறோம்.

**தரிசனம் நான்கு – பிரதான ஆசாரினாகிய யோசுவா(சகரியா 3:1–10)**

சகரியாவின் நான்காம் தரிசனம், பிரதான ஆசாரியனாகிய யோசுவாவைப் பற்றியது. இது சுவிசேஷ யுகத்தில், பரலோக இரட்சிப்புக்காக சபையின் பரம அழைப்பிற்கான அடிப்படை சத்திய உபதேசத்தைப்பற்றிய தரிசனமாகும். எபிரெய பாஷையில்யோசுவா என்ற அதே பெயர், கிரேக்கத்தில் "இயேசு" ஆகும். இந்த தரிசனத்தில் பிரதான ஆசாரியனாகிய யோசுவா கிறிஸ்துவின் சரீர அங்கத்தினர்களை அடையாளப்படுத்துகிறார். மூன்று மற்றும் நான்காம் வசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் அழுக்கு வஸ்திரம், சரீர அங்கங்கள், நீதிமானாக்கப் படுவதற்கு முன்னிருந்த அநீதியான நிலையைக் காட்டுகிறது. துவக்கத்திலிருந்தே, சாத்தான் நம்முடைய வழியில் நின்று, நம்முடைய அர்ப்பணிப்பிலிருந்து விலகும்படியாக நம்மை சோதித்து, தேவனுடைய குமாரனுக்கு மணவாட்டி வகுப்பாரை அழைக்கக்கூடிய தேவனுடைய திட்டத்தை சோதனைகளை முறியடிக்க முயலுகிறான்.

நான்கு மற்றும் ஐந்தாம் வசனங்களில் காட்சிகள் மாறுகிறது. சபை வகுப்பாராகிய சரீர அங்கங்கள் கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தை தரித்திருக்கிறார்கள் இயேசுவின் பலியின் புண்ணியத்தின் விசுவாசத்தினால் நீதிமான்களாகப்படுகிறார்கள். ஏழாம் வசனத்தில் சபைக்குரிய பரம அழைப்பை இவ்வாறாக கூறப்படுகிறது, "சேனைகளின் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்: நீ என் வழிகளில் நடந்து என் காவலைக் காத்தால், நீ என் ஆலயத்தில் நியாயம் விசாரிப்பாய்; என் பிராகாரங்களையும் காவல்காப்பாய்; இங்கே நிற்கிறவர்களுக்குள்ளே உலாவுகிறதற்கு இடம் நான் உனக்குக் கட்டளையிடுவேன்." (7)

எட்டு மற்றும் ஒன்பதாம் வசனத்தில், வரக்கூடிய இராஜ்யத்தை நோக்கி தரிசனம் முன்னேறுகிறது. யுகங்களைப் பற்றிய வரைபடத்தில், தேவனுடைய இராஜ்யத்தின் காலத்தில் காண்பிக்கப்படுவதை போல, இராஜ்யத்தில் தலைக்கு மூலைக்கல்லாகிய இயேசுவும் அவருடைய சபையின் தெய்வீக ஞானத்தையும் சித்திரிக்கக்கூடிய ஏழு கண்களை கொண்ட ஒரு கல் சகரியாவுக்கு காட்டப்படுகிறது. பத்தாம் வசனத்தில், கிறிஸ்து மற்றும் சபை ஒவ்வொரு மனுஷரையும் அவருடைய அயலகத்தாரையும் தங்களுடைய சொந்த திராட்சை செடியின் கீழும், அத்திமரத்தின் கீழும் வரவழைப்பார்கள் என்ற இராஜ்யத்தைப் பற்றி நன்கு அறியப்பட்ட ஒரு தரிசனத்தை காணலாம்.

**தரிசனம் ஐந்து – ஒரு குத்துவிளக்கு மற்றும் இரண்டு ஒலிவ மரங்கள்(சகரியா 4:1–14)**

சகரியாவின் ஐந்தாவது தரிசனம், சபை வகுப்பாரின் மீது தேவன் கொண்டுள்ள அன்பான அக்கறையை அருமையாக சித்தரிக்கிறது. இந்த தரிசனத்தில் காணப்படும் குத்து விளக்கு, வனாந்தரத்தில் இஸ்ரயேலின் ஆசரிப்பு கூடாரத்திலுள்ள விளக்கை போன்று, கூடுதலாக இரண்டு குறிப்புகளோடு காணப்படுகிறது. (1)அதன் மேலுள்ள அகல், ஏழு விளக்குகளுக்கு எடுத்து செல்லும், குழாய்களின் வழியாக வரும் எண்ணையினால் நிறப்பப்படுகிறது. மற்றும் (2) இரண்டு ஒலிவ மரங்கள். ஆசரிப்பு கூடாரத்தின் சித்திரத்தில், அந்த பொன்னான குத்துவிளக்கு, நித்தமும் எண்ணையால் புதுப்பிக்கப்படுதல், நமக்கு எப்போதும் பரிசுத்த ஆவி உள்ளதா என்று இயேசு நம்மை கண்காணிப்பதை சித்தரிக்கிறது. சோதனைகள் மற்றும் அனுபவங்களின் வழியாக நம்முடைய பழைய சுபாவங்களை சித்திரித்து, சுத்திகரிப்பதை, விளக்கு திரி கத்திரித்து விடும் வேலை சித்தரிக்கிறது.

சகரியாவின் தரிசனத்தில், மேலும் இந்த விரிவான குத்துவிளக்கு, சபை அமைப்பின் முழுமையான பராமரிப்பு மற்றும் வளர்ச்சியை அடையாளப்படுத்துகிறது. ஆசரிப்புக் கூடாரத்தில் இருப்பதைபோல, இந்த ஏழு கிளைகளை கொண்ட குத்துவிளக்கு, சபையை முழுவதுமாக (சுவிசேஷ யுகத்தில் ஏழு நிலைகளில் வளர்ச்சி அடைந்த) அடையாளப்படுத்துகிறது. நம்முடைய ஆண்டவராம் இயேசுவாகிய ஒரே தலையின் கீழ் அதாவது மேலிருக்கும் ஒரே அகலிலிருந்து பரிசுத்த ஆவி கொடுக்கப்படுவதை அடையாளப்படுத்துகிறது.

இந்த இரண்டு ஒலிவ மரங்கள் என்ன என்று சகரியா 4:11ல் தீர்க்கதரிசி கேட்டார். 14ம் வசனத்தில் பதில் கொடுக்கப்படுகிறது. அப்பொழுது அவர் இவைகள் இரண்டும் சர்வலோகத்துக்கும் ஆண்டவராயிருக்கிறவரின் சமுகத்தில் நிற்கிற அபிஷேகம் பெற்றவர்கள் என்றார்" (14) தேவனுடைய இரண்டு சாட்சிகளை விவரிக்கும் இதேபோல வார்த்தைகளை வெளி 11:3,4ல் காணலாம் - இந்த பூமியின் மேல் தேவனுக்காக நிற்கும் , இரண்டு

ஒலிவ மரங்களை போலிருக்கும் பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு. இவ்வாறு, இந்த சகரியாவின் தரிசனத்தில் உள்ள இந்த இரண்டு ஒலிவ மரங்களும், பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டிலிருந்து, அதாவது தேவனிடமிருந்து அவருடைய வார்த்தைகளின் வழியாக, சத்தியத்தின் ஆவியை, பரிசுத்த ஆவியை நாம் எவ்வாறு பெறுகிறோம் என்று சித்தரிக்கப்படுகிறது.

## தரிசனம் ஆறு–பறக்கும் சுருள் (சகரியா 5:1–11)

சகரியாவின் ஆறாவது தரிசனத்தில், ஒரு பறக்கும் சுருள் தேவனுடைய பிரமாணம், நிரூபமும் அவருடைய ஆவியைப் பற்றிய தரிசனமாக இருக்கிறது. இந்த தரிசனத்தில், சகரியா ஒரு புத்தகச் சுருள் காற்றில் பறப்பதைப் பார்க்கிறார். அது இருபது முழம் நீளமும், பத்து முழும் அகலமும் அல்லது முப்பது முழம் நீளமும் பதினைந்து முழம் அகலமும் கொண்ட சுருட்டப்பட்ட மிக பெரிய சுருளாக இருந்தது. இந்த சுருள் இரண்டு வகுப்பாருக்கு சாபமாக இருந்தது. திருடுபவர்களுக்கு இது சாபமாக இருந்தது. இவர்களின் நியாயத்தீர்ப்பு சுருளின் ஒரு பக்கத்தில் எழுதப்பட்டிருந்தது. மற்றும் தேவனுடைய நாமத்தை பொய்யாக ஆணையிடு கிறவர்களும் அல்லது உடன்படிக்கையை முறிப்பவர்களுக்கு இது சாபமாக இருந்தது. இவர்களின் நியாயத்தீர்ப்பு மற்றொரு பக்கமாக எழுதப்பட்டிருந்தது. திருடர்களின் வீடு மற்றும் உடன்படிக்கையை முறித்தவர்களின் வீடுகளுக்குள் நுழைந்து அந்த சுருளினால், இந்த இரண்டு வகுப்பாரின் மேல் வந்த சாபம் பாதிக்கப்பட்டது.

இந்த தரிசனத்திற்கான விளக்கத்தின், ஒரு குறிப்பு , சுருளின் இருப்பக்கங்களில் உள்ள எழுத்துக்களில் கொடுக்கப்பட்டுள்ளது, பிரமாணத்தை முறிக்கக்கூடிய ஒவ்வொரு வகுப்பாருக்கும் ஒவ்வொரு பக்கம். இரண்டு பக்கங்களிலும் மற்றொரு நன்கு அறியப்பட்ட எழுத்துக்கள் உள்ளது. சீனாய் மலை மீது மோசே பெற்றுக்கொண்ட பத்து கட்டளைகளைக் கொண்டு இரண்டு கற்பலகைகளில் காணப்படுகிறது. (யாத்திராகமம் 32:15) பத்து கட்டளைகள் இரண்டு வகுப்புகளாக பிரிக்கப்படுகிறது - முதல் நான்கு கட்டளைகள் தேவனிடத்தில் மனுஷன் கொண்டுள்ள பொறுப்புகளும் கடைசி ஆறு கட்டளைகள் சக மனிதர்களிடத்தில் மனுஷர் கொண்டிருக்கும் பொறுப்புகளாகும்.

தேவனுக்கு தொடர்பான முதல் நான்கு கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாதவர்களைப் பொய்யாக ஆணையிட்டு, உடன்படிக்கையை முறிப்பவர்களாக இருக்கலாம். அதேபோல, கடைசி ஆறு கட்டளைகளுக்கு கீழ்படியாதவர்கள் சக மனிதர்களிடமிருந்து அவர்களுடைய நலன்கள், குடும்ப ஒற்றுமை, மரியாதை இன்னும் அவர்களுடைய ஜீவனையும் கூட திருடக்கூடிய திருடர்களை அடையாளப்படுத்தலாம். இந்த தரிசனம், தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படிய வேண்டும் என்றும் இல்லாவிட்டால் அவர்களுடைய வீடு அழிக்கப்படும் என்று மாம்ச இஸ்ரயேலர்களுக்கு எச்சரிக்கை கொடுக்கப்படுகிறது. யூதர்கள் தேவனுடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவில்லை, அவர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். நம்முடைய ஆண்டவர் சிலுவையில் அறையப்படுவதற்கு முன் கூறியபடி, அவர்களுடைய தேசம் பாழாக்கப்பட்டது.

இந்த தரிசனம் பாபிலோனின் பாவங்களை விவரிக்கையில், ஒருவேளை இந்த தரிசனத்தில் சுவிசேஷ யுக சபை வகுப்பாராகிய நமக்கும் பாடம் இருக்கலாம். தேவனிடத்தில் பலியினால் உடன்படிக்கை செய்த நாம் உடன்படிக்கையை முறிக்காதவர்களும், விசுவாசத்தை மறுக்காதவர்களும், தேவனுக்கு வாக்குறுதி அளித்த நம்முடைய விசுவாசத்தின் உண்மைத்தன்மையையும், பக்தியையும் திருட முயற்சிக்கக்கூடிய திருடர்களாக இராதவர்களாக இருக்கவேண்டும். கீழ்ப்படியாதவர்கள் மத்தியில் அல்ல, ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புத்தகத்திலே பெயர் எழுதப்படுகிறதற்கு நாம் விருப்பம் உடையவர்களாக இருக்க வேண்டும். அந்த வீடு நம்முடைய இருதயத்தையும், நாம் உருவாக்கக்கூடிய குணலட்சனங்களையும் குறிக்கும். தேவனுடைய பிரமாணத்தின் ஆவி நம்முடைய இருதயங்களில் தங்கியிருந்து, நம்முடைய, சிந்தைகளையும், வார்த்தைகளையும், கிரியைகளையும் கட்டுப்படுத்தினால், கிறிஸ்துவின் சாயலை பெறுவதற்கு நாம் பொன்னினாலும், வெள்ளியினாலும், விலையேறப் பெற்ற கற்களினாலும் நாம் கட்டினால், நம்முடைய வேலை நிலைபெறும். நாம் புல், மரம், வைக்கோலினால் கட்டினால், சகரியா கண்டது போல, நம்முடைய வேலை நொறுக்கப்பட்டு அக்கினியினால் சுட்டெரிக்கப்படும்.

## தரிசனம் ஏழு–மரக்காலில் ஒரு ஸ்திரீ (சகரியா 5:5–11)

சகரியாவின் ஏழாவது தரிசனம், யுகங்களைப் பற்றிய தெய்வீக திட்டத்தில் ஒரு முக்கியமான வளர்ச்சியை

சித்தரிக்கிறது - பாபிலோன், தாயும், குமாரத்திகளுமாகிய பெயர் சபை அமைப்புகளின் எழுச்சி. மரக்கால் உலர்ந்த பொருட்களை அளக்கக்கூடிய ஒரு அளவாகும். ரோம கத்தோலிக்க சபையை சித்தரிக்கும், மரக்காலில் உட்கார்ந்திருந்த அந்த ஸ்திரீயை அக்கிரமக்காரி என்று அந்த தூதன் அறிவித்த, அந்த மரக்காலுக்குள் அவளை தள்ளி, ஒரு ஈய மூடியினால் அதன் வாயை அடைத்தார். ஈயம், பொன்னை போல அதிகமான எடை உள்ளதும், ஆனால் உண்மையான பொன்னை போல அழகும், அழியா தன்மைக் கொண்டதல்ல. வேதாகமத்தில், பொன் தெய்வீக காரியங்களை அடையாளப்படுத்துகிறது. இவ்வாறு, ஈய்ய மூடி பாபிலோனின் கள்ளத்தனமான உபதேசங்களையும் ஊழலான பழக்கவழக்கங்களையும் சித்தரிக்கிறது.

புறப்பட்டு வந்த இரண்டு ஸ்திரீகள் (தாய் மற்றும் குமாரத்தி) அதாவது கத்தோலிக்க மற்றும் புராட்டஸ்டன்ட் சபை அமைப்புகளை சித்தரிக்கலாம். அவைகள் செட்டைகள் உடையவைகளாக இருந்தன. இவர்கள் சிநேயார் தேசத்திற்கு ஒரு வீட்டை கட்டும்படிக்கு அந்த மரக்காலை தூக்கி சென்றார்கள். சிநேயார் தேசத்தில், பாபேல் கோபுரம் கட்டப்பட்டதாக ஆதியாகமம் 11:2ல் வாசிக்கிறோம். இது டைகிரிஸ் மற்றும் ஐப்பிராத் நதிகளுக்கு இடையில் ஒரு சமவெளியாக இருந்தது. மேலும், இந்த தரிசனம் அடையாளமான பாபிலோனின் வளர்ச்சியை அடையாளப்படுத்துகிறது. அந்த ஸ்திரீகளின் செட்டைகள் ஆகாயத்து பிரபுவாகிய அதிபதியான சாத்தானின் வல்லமையை அடையாளப்படுத்துகிறது. பெயர் சபை அமைப்பும், சாத்தானின் கைவேலையுமான பாபிலோனின் கட்டப்பட்ட அதன் வீடு, சொந்த அடித்தளத்தில் கட்டப்படுகிறது. அதாவது, தேவனுடைய சத்தியத்திலும், பழக்கவழக்கங்களிலும் இல்லாமல், தன்னுடைய சொந்தமான தவறுகளின் அடிப்படையில் கட்டப்படுகிறது.

## தரிசனம் எட்டு–குதிரைகள், இரதங்கள், வெண்கல பர்வதங்கள், வெள்ளியும் பொன்னுமான கிரீடங்கள் (சகரியா 6:1–15)

சகரியாவின் எட்டாவதும் கடைசியுமான தரிசனம் இரண்டு வெவ்வேறான காட்சிகளாக பிரிக்கப்படுகிறது. முதலாவதாக, முதல் மூன்று வசனங்களில், யுகங்களைப் பற்றிய தெய்வீக ஏற்பாட்டின் ஒரு முழு கண்ணோட்டமாக உள்ளது. வேதத்தில், வெண்கலம் அல்லது தாமிரம் பரிபூரண மனித சுபாவத்தையும் மலைகள் இராஜ்யத்தையும் அடையாளப்படுத்துகிறது. முதல் காட்சியில், இரண்டு வெண்கல பர்வதங்கள், இரண்டு பரிபூரண இராஜ்யங்களை அடையாளப்படுத்துகிறது. - முதலாவது ஏதேனில், ஆதாம் தொலைத்ததும், இரண்டாவது இந்த பூமியில் இனி வரக்கூடிய இராஜ்யத்தில், தொலைந்த அனைத்தும் மறுசீரமைக்கப்படும் போதும் ஸ்தாபிக்கப்படும்.

நான்கு இரதங்கள் இரண்டு பர்வதங்களுக்கு நடுவிலிருந்து வந்தது. இந்த இரண்டு வெண்கல பர்வதங்களுக்கு இடையில் என்ன உள்ளது? யுகங்களைப் பற்றிய வரைபடத்தில் காண்பிக்கப்பட்டபடி, பரதீஸ் தொலைந்தது முதல் பரதீஸ் திரும்ப கொடுக்கப்படும் வரையில் தேவனுடைய முழு திட்டமும் காண்பிக்கப்படுகிறது.

இங்கு நான்கு இரதங்கள் ஐந்து நிற குதிரைகளுடன் இருப்பதை கவனியுங்கள் - சிவப்பு, கருப்பு, வெண்மை மற்றும் நான்காவது இரதத்தில் புள்ளியான சிவப்பு குதிரைகள் இருந்தன. குதிரைகளும், இரதங்களும் பர்வதங்களுக்கு நடுவிலிருந்து புறப்பட்டது. ஆனால் இரதங்கள் அல்ல, குதிரைகள் மட்டுமே வெவ்வேறு திசைகளில் புறப்பட்டு போனது. பர்வதங்களுக்கு நடுவிலிருந்து வந்த குதிரைகள் ஐந்து நிறங்கள் உடையவைகளாக இருந்தபோதிலும், அதன் இலக்கை நோக்கி அவைகள் செல்கையில் நான்கு நிறங்கள் மட்டுமே குறிப்பிடப்படுகிறது.

இந்த தரிசனம் அதிகமான அடையாளங்களை கொண்டது. நான்கு இரதங்களும் தேவனுடைய பண்புகள் மற்றும் மனுக்குலத்திற்கான அவருடைய திட்டத்தை கொண்டுவரும் அவருடைய முகவர்கள். (agen-cies) அந்த ஐந்து நிறங்களும், தேவனுடைய திட்டத்தில் உருவாக்கப்படுகிற ஐந்து வகுப்பாரை அடையாளப்படுத்துகிறார்கள். வட திசையில் செல்லும் கருப்பு குதிரைகள், தேவனுடைய அமைதியான ஆவியாகிய சபை வகுப்பார். கருப்பு நிறம் பொதுவாக சிறு மந்தையோடு தொடர்புள்ளதாக இருப்பதில்லை. ஆனால் உன்னதப்பாட்டு 1:5ல் இதற்கான ஒரு உதாரணம் உண்டு, அதில் "நான் கருப்பாயிருந்தாலும் அழகாக இருக்கிறேன்" என்று மணவாட்டி கூறுகிறாள்.

வடதிசையில், கருப்பு நிற குதிரைகளை பின் செல்லும் வெள்ளை நிற குதிரைகள் திரள் கூட்டத்தார். இவர்கள் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில் தங்களுடைய வஸ்திரங்களை தொய்த்து வெளுத்தவர்கள். நேரத்திலும், கனத்திலும் இவர்கள் சபைக்கு பின் செல்லக்கூடியவர்கள். புள்ளி புள்ளியான

குதிரைகள் இராஜ்யத்தில் உள்ள மனுக்குலம். பூமி பரலோகத்திற்கு எதிராக உள்ளதை போல அந்த குதிரைகள் வட திசைக்கு எதிரான தென் திசையை நோக்கி சென்றது.

இந்த வல்லமையுள்ள குதிரைகள் நாம் முதல் தரிசனத்தில், ஏழாம் வசனத்தில் பார்த்தது போல, பூமியெங்கும் சுற்றி திரியும் முற்பிதாக்களாம். பர்வதங்கள் நடுவிலிருந்து வந்த சிவப்பு குதிரைகள் போகும் திசை சொல்லப்படவில்லை. இந்த சிவப்பு குதிரைகளுக்கு எந்த இலக்கும் இல்லை. ஆகையால் இவைகள் இரண்டாம் மரணத்தை அடையாளப்படுத்தலாம்.

இரண்டாம் காட்சியில், வெள்ளி மற்றும் பொன்னினால் கிரீடங்களை செய்து யோசுவாவின் தலையின் மேலும் மற்றவர்களின் தலையின் மேலும் வைக்கும் படி ஆண்டவர் சகரியாவிடம் கூறுகிறார். இவைகள் ஆயிரவருடத்தில் மகிமை அடைந்த கிறிஸ்துவின் தலை சரீரம், இராஜாக்கள் மற்றும் ஆசாரியர்களை குறிக்கிறது. முதலில் கல்லரையிலிருந்து எழுந்த போது இந்த உலகத்தின் மனுக்குலம் உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் பரிபூரண நிலைக்கு வெகுதூரத்தில் இருப்பதினால் "தூரத்திலுள்ளவைகள்" என்று பதினைந்தாம் வசனம் குறிப்பிடுகிறது. ஆனால் இறுதியில் அவர்கள் பரிசுத்தமான பெரும்பாதையில் நடபயிற்சியின் மூலம், அவர்களின் நீதியான பண்புகளை உருவாக்கிக்கொண்டு, பூமியின் மேல் நித்தியமாக வாழ்வதற்கு பொருத்தமுள்ளவர்களாக, மகிமை அடைந்த சபையின் உதவியோடு, தேவனுடைய ஆலயத்தில் கட்டியெழுப்பப்படுவார்கள்.

**முடிவுரை:**

முடிவாக, சகரியாவின் எட்டு தரிசனங்களும், அவருடைய முதல் தரிசனத்திற்கு மீண்டும் , ஒரு முழு வட்டமாக அவருடைய முதல் தரிசனத்திற்கு திரும்பி வருகிறது - யுகங்களைப் பற்றிய தெய்வீக திட்டத்தின் இறுதி இலக்கு - பூமியில் தேவனுடைய நீதியும் சமாதானமுமான நித்திய இராஜ்யம். சகரியாவின் இறுதி வார்த்தைகளில் "தூரத்திலுள்ளவர்கள் வந்து கர்த்தருடைய ஆலயத்தைக் கூட இருந்து கட்டுவார்கள்; அப்பொழுது சேனைகளின் கர்த்தர் என்னை உங்களிடத்திற்கு அனுப்பினாரென்று அறிந்து கொள்வீர்கள்; நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கேட்டு நடந்தீர்களானால் இது நிறைவேறும் என்று சொல் என்றார்" (சகரியா 6:15) என்று அவர் கூறுகிறார்.

(1) நம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட பொருத்தனைகளுக்கு கீழ்ப்படிய வேண்டும். (2) வரவிருக்கும் இராஜ்யத்தின் மேல் நம்முடைய விசுவாசத்தை உறுதியாக வைக்க வேண்டும். (3) நம் வாழ்வில் நமக்குள் இருக்கும் தேவனுடைய பாதுகாப்பை நம்ப வேண்டும். (4) திருடனாகவோ அல்லது உடன்படிக்கையை முறிப்பவராகவோ இருக்கவேண்டாம். (5) பிசாசை எதிர்த்து நின்று, நம்முடைய வஸ்திரத்தை வெண்மையாகவும் கறையற்றதுமாக காத்துக் கொள்ள வேண்டும். (6)நம்முடைய அழைப்பையும், தெரிந்துக் கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மற்றும் (9) இராஜ்யத்தில் நம்முடைய எதிரிகளையும் ஆசீர்வதிக்கும் படியாக இப்போது, நம்முடைய எதிராளிகளையும் நேசிக்கக்கூடிய அன்பை கற்றுக்கொள்ள வேண்டும். இந்த எட்டு தரிசனங்கள் ஒவ்வொன்றும் நம்மை இப்படிப்பட்ட காரியங்களுக்கு உற்சாகமூட்டட்டும்.

நம்முடைய உடன்படிக்கைக்கு கீழ்படிந்து, விசுவாசத்தை காத்துக்கொண்டு தேவனிடத்தில் நம்பிக்கையாக இருப்போம்.

மல்கியா

# நான் உன்னை நேசித்தேன்! நீங்கள் மறந்துவிட்டீர்களா?



"அவர்களுடைய எல்லா நெருக்கத்திலும் அவர் நெருக்கப்பட்டார்; அவருடைய சமுகத்தின் தூதனானவர் அவர்களை இரட்சித்தார்; அவர் தமது அன்பினிமித்தமும், தமது பரிதாபத்தினிமித்தமும் அவர்களை மீட்டு, பூர்வநாட்களிலெல்லாம் அவர்களைத் தூக்கிச் சுமந்து வந்தார்." (ஏசாயா 63:9)

Bob Gray

**1986** ஆம் ஆண்டு கோடையில், எங்கள் சுற்றுப்பயணம் குழு ஒலிவ மேட்டின் மேற்குப் பகுதிக்குச் சென்றது. அங்கு பேருந்து சாலையிலிருந்து சற்று கீழ் இறங்கியது. நாங்கள் இறங்கி கொஞ்சம் தூரம் நடந்துபோனோம். எங்கள் வழிகாட்டி எங்களை நிறுத்தி, எங்களில் ஒருவரை சங்கீதம் 122ஐ வாசிக்கும்படி கேட்டுக்கொண்டார்." 1. கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம்வாருங்கள்என்று எனக்கு அவர்கள்சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன்,"2.எருசலேமே உன் வாசல்களில் எங்கள் கால்கள் நிற்கலாயிற்று. 3.எருசலேம் இசைவிணைப்பான நகரமாய்க் கட்டப்பட்டிருக்கிறது. 4.அங்கே இஸ்ரவேலுக்குச் சாட்சியாகக் கர்த்தருடைய ஜனங்களாகிய கோத்திரங்கள் கர்த்தரின் நாமத்தை ஸ்தோத்திரிப்பதற்குப் போகும். 5.அங்கே தாவீதின் வம்சத்தாருடைய சிங்காசனங்களாகிய நியாயாசனங்கள் வைக்கப்பட்டிருக்கிறது, 6.எருசலேமின் சமாதானத்துக்காக வேண்டிக்கொள்ளுங்கள்" உன்னை நேசிக்கிறவர்கள் சுகித்திருப்பார்களாக. 7.உன் அலங்கத்திற்குள்ளே சமாதானமும், உன் அரமணைகளுக்குள்ளே சுகமும் இருப்பதாக. 8. என் சகோதரர் நிமித்தமும் என் சிநேகிதர் நிமித்தமும், உன்னில் சமாதானம் இருப்பதாக என்பேன். 9. எங்கள் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்தினிமித்தம் உனக்கு நன்மையுண்டாகத் தேடுவேன். நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கையில், கிதரோன் பள்ளத்தாக்கை கடந்து அங்கு எருசலேம் இருந்தது, பெரும்பாலான நாங்கள் பரிசுத்தமான நகரமாகிய எருசலேமை காண்பது இதுவே முதல் முறையாக இருந்தது. ஏற்கனவே நாங்கள் இஸ்ரயேல் நாட்டை ஆய்வு செய்தோம், இப்போது, அதன் பொக்கிஷமாகிய எருசலேமுக்கு வந்துள்ளோம்.

இருபத்தைந்து நூற்றாண்டுகளுக்கு முன் இந்த நகரத்தை கண்டு வியக்க ஒரு குழு வந்தது. இவர்கள் நாடுகடத்தப்பட்டவர்களும், அவர்களின் குழந்தைகள் பாபிலோனிலிருந்து தங்களுடைய வீட்டிற்கு வந்தவர்கள். அவர்களில் அநேகர் முதல் முறையாக எருசலேமை கண்டார்கள். ஆனால் அவர்களின் அனுபவம் எங்களுடையதை விட வித்தியாசமானதாக இருந்தது. பாழான எருசலேம் மீண்டும் கட்டப்பட்ட எருசலேமுக்கு நாங்கள் வந்தோம். (எரேமியா 30:18) அவர்கள் பாழான எருசலேமுக்கு வந்தார்கள்.

அவர்கள் வேறு நோக்கத்துடன் வந்தார்கள் - யேகோவா தேவனுடைய ஆலயத்திலும், அவருடைய நகரத்திலும், அவருடைய தேசத்திலும் மீண்டும் வழிபாட்டை புதுப்பிக்கும்படி வந்தார்கள். அநேகர் அந்நிய தேசங்களில் பிறந்து வளர்ந்தார்கள். அங்கு அந்த குடும்பங்கள் சங்கீதம் 137:1-4 வசனங்களை உணர்வோடு வெளிப்படுத்தியிருப்பார்கள். "பாபிலோன் ஆறுகள் அருகே நாங்கள் உட்கார்ந்து, அங்கே சீயோனை நினைத்து அழுதோம். அதின் நடுவிலிருக்கும் அலரிச்செடிகளின்மேல் எங்கள் கின்னரங்களைத் தூக்கி வைத்தோம். எங்களைச் சிறைபிடித்தவர்கள் அங்கே எங்கள் பாடல்களையும், எங்களைப் பாழாக்கினவர்கள் மங்கள கீதத்தையும் விரும்பி: சீயோனின் பாட்டுகளில் சிலதை எங்களுக்குப் பாடுங்கள் என்று சொன்னார்கள். கர்த்தரின் பாட்டை அந்நிய தேசத்தில் நாங்கள் பாடுவதெப்படி?"நான்கு வசனங்களையும்எழுதவேண்டும்

எருசலேமில் அடுத்த வருடம் "பண்டைய பஸ்கா" என்ற சொற்றொடரைப் பெற்றெடுப்பதை ஒருவர் கற்பனை மட்டுமே செய்து பார்க்கமுடியும். அவர்களின் விடுவிப்பு விரைவில் இருக்காது என்று எரேமியாவின் கடிதம் போதித்தாலும், எருசலேமுக்கு போவதற்கான விருப்பத்தால் அவர்களின் இருதயம் வலித்தது. "பாபிலோனிலே எழுபது வருஷம் நிறைவேறின பின்பு நான் உங்களைச் சந்தித்து, உங்களை இவ்விடத்துக்குத் திரும்பி வரப்பண்ணும்படிக்கு உங்கள் மேல் என் நல்வார்த்தையை நிறைவேறப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று

கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே."(எரேமியா 29:10,11)

மல்கியா தீர்க்கதரிசனம் உரைத்தபோது, கோரேஸ் தனது கட்டளையை வெளியிட்டு எண்பது அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் கடந்துவிட்டது. "அவருடைய ஜனங்கள் எல்லாரிலும் எவன் உங்களுக்குள் இருக்கிறானோ அவன் போகட்டும், அவனுடைய தேவனாகிய கர்த்தர் அவனோடிருப்பாராக என்று பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் அறிவிக்கிறார் என்று, தன் ராஜ்யம் எங்கும் எழுதியனுப்பி விளம்பரம் பண்ணினான்." (2 நாளாகமம் 36:23) பக்தியுள்ள யூதர்கள் கானானில் அல்ல யூதேயாவிற்கு ஒரு புதிய வித்தியாசமான விதத்தில் வெளியேறினார்கள். உண்மையில் ஆலயம் மறுபடியும் கட்டப்பட்டது. ஆனால் எந்த வித போராட்டமின்றி கட்டப்பட்டது. ஆனால் அவர்கள் எதிர்ப்பார்த்த பரதீஸைப் போல் இராமல், எருசலேமும் ஆலயமும் இன்னும் மோசமான பாழாக்கப்பட்ட நிலையில் இருந்தது. சமாரியர்களோடும் மற்றும் அயலகத்தாரோடும் உள்ள பிரச்சனைகள் அவர்களின் கஷ்டங்களை அதிகரித்தது.

தங்களுடைய ஆற்றல் மிக்க தொடக்கத்தைத், அவர்களின் தனிப்பட்ட காரியங்களுக்கும், தேவைகளுக்கும் ஜனங்கள் தங்கள் கவனத்தை திருப்பினார்கள். வாழ்வதற்கான இடம், மேஜையின் மேல் உணவு, பாதுகாப்பு இவைகளே, அவர்களுடைய முக்கிய கவலையாக இருந்தது. கர்த்தருடைய வீட்டின் மேல் உள்ள அக்கறை குறைவு மேம்பட்டது. இதை ஆகாயும் மற்ற தீர்க்கதரிசகளும் முன்குறித்தனர். "இந்த வீடு பாழாய்க் கிடக்கும்போது, நீங்கள் மச்சுப்பாவப்பட்ட உங்கள் வீடுகளில் குடியிருக்கும்படியான காலம் இதுவோ?" (ஆகாய் 1:4) முதல் எண்பது ஆண்டுகள், இஸ்ரயேல் தேசத்தில் எந்த காரியமும் மேம்படவில்லை.

மல்கியாவின் தீர்க்கதரிசன காலத்தின் போது, பெர்சிய இராஜா அர்த்தசாஷ்டிரா, ஆசாரியனாகிய எஸ்றாவுக்கு நிதி உதவி அளித்து, தேவையான ஆதாரங்களை பெறக்கூடிய அதிகாரத்தையும் கொடுத்தார். அதிசயமாக, அவர் முன்பு ஆலயத்திலிருந்து நேபுகாத்நேச்சாரால் கொள்ளையடிக்கப்பட்ட அலங்காரங்களை எஸ்றாவிடம் திருப்பி கொடுத்தார்! "அப்பொழுது நாங்கள் எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களைத் தாழ்த்துகிறதற்கும், எங்களுக்காகவும் எங்கள் பிள்ளைகளுக்காகவும் எங்கள் சகல பொருள்களுக்காகவும் செவ்வையான வழியைத் தேடுகிறதற்கும், நான் அங்கே அந்த அகாவா நதியண்டையிலே உபவாசத்தைக் கூறினேன். வழியிலே சத்துருவை விலக்கி, எங்களுக்குத் துணை செய்யும்படிக்கு, நான் ராஜாவினிடத்தில் சேவகரையும் குதிரை வீரரையும் கேட்க வெட்கப்பட்டிருந்தேன்; எங்கள் தேவனுடைய கரம் தம்மைத் தேடுகிறவர்கள் எல்லார் மேலும் அவர்களுக்கு நன்மையாக இருக்கிறதென்றும், அவருடைய வல்லமையும் அவருடைய கோபமும் அவரை விட்டு விலகுகிறவர்கள் எல்லார் மேலும் இருக்கிறதென்றும், நாங்கள் ராஜாவுக்குச் சொல்லியிருந்தோம். அப்படியே நாங்கள் உபவாசம் பண்ணி, எங்கள் தேவனிடத்திலே அதைத் தேடினோம்; எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளினார்." (எஸ்றா 8:21-23) பிற்பாடு, எருசலேமின் இடிந்த சுவர்களும், வாயில்களும் நகரத்தை துரோகிகளுக்கு விட்டு சென்று, ஜனங்கள் ஆபத்துக்குள்ளாக்கியதை நெகேமியா அறிந்துக்கொண்டார். அவர் அர்த்தசாஷ்ட்ராவிடம் வேண்டுகோள் விடுத்தார், இராஜா அவரை பெரிய ஆளுநராக மிகுந்த அதிகாரத்துடன், அவருக்கு விடுமுறை அளித்து எருசலேமுக்கு அனுப்பினார்.

ஆனாலும், எஸ்றா மற்றும் நெகேமியா ஒவ்வொருவராக வந்தபோதுஆசாரியர் மற்றும் ஜனங்களின் மத்தியில் நியாயப்பிரமாணத்தை கடைப்பிடிக்க ஊக்குவிக்கவும், "கர்த்தருக்கு பயப்படும் பயத்தையும்" பக்தியையும் உண்மையாக அவர்களுக்குள் உண்டாக்கும் படியாக, ஜனங்களுடைய விசுவாசத்தை சீரமைத்து, கட்டியெழுப்பி, பலப்படுத்த தேவை என்று அவர்கள் கண்டார்கள். இந்த உண்மையான இருதயப்பூர்வமான சீர்திருத்தங்கள் இல்லாமல், இஸ்ரயேல் இன்னும் பின்தங்கி மிக அதிகமான பெரிய அழிவை சந்தித்தது. இந்த தவறுகளை மல்கியா உரையாற்றினார்.

## மல்கியா–தூதர், தீர்க்கதரிசி மற்றும் தேவனோடு கலந்துரையாடுபவர்

மற்ற தீர்க்கதரிசன புத்தகங்களை போல, மல்கியா புத்தகமும் எழுத்தாளரை பற்றி எந்த விவரத்தையும் கொடுக்கவில்லை. மல்கியா ஒரு சரியான பெயரா அல்லது "தூதர்" என்று வெறுமனே பொருள்படும் ஒரு தலைப்பா என்று விமர்சகர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். (மல்கியா 3:1) மற்றவர்கள், உண்மையில், அந்த தூதர் எஸ்றா என்று முன்மொழிகிறார்கள். ஏனெனில் இருவருடைய கவலைகளும் ஒத்ததாக இருந்தது. மல்கியா ஒரு தனித்துவமான தீர்க்கதரிசி என்று

நம்புவதினால், எஸ்றா மற்றும் நெகேமியாவின் முயற்சிகளுக்கு பின் அவர் இந்த புத்தகத்தை எழுதினார் என்றும் நாங்கள் நம்புகிறோம். அந்நேரத்தில், பின்வாங்கக்கூடிய ஜனங்களுக்கு கடுமையான குற்றசாட்டும் இறுதி நேர தீர்ப்பைப்பற்றி எச்சரிப்பும் தேவைப்பட்டது. ஆயினும், இந்த புத்தகம் விசுவாசமுள்ள சிலருக்கும் நம்பிக்கையுள்ள வார்த்தைகளை கொடுக்கிறது.

மாறுபாடான இஸ்ரயேலின் மேல் யெகோவா தேவன் கொண்ட அக்கறையானது, மல்கியாவின் செய்தியின் முக்கிய மையமாக இருந்தது. இந்த செய்தி யெகோவா தேவனுக்கும், அவருடைய ஜனங்களுக்கும் மற்றும் அவருடைய ஆசாரியர்களுக்கும் இடையே உருவகப்படுத்தப்பட்ட உரையாடலாக காட்டப்படுகிறது. இது தேவனுடைய ஏமாற்றத்தையும், தேவனிடம் ஜனங்கள் கொண்டிருந்த மனப்பான்மையையும் வெளிப்படுத்துகிறது. "நான் உங்களைச் சிநேகித்தேன், ஓ இஸ்ரயேலே நீங்கள் என்னை மறந்தீர்கள். லேவியின் புத்திரர்களே, ஆசாரிர்களே, உங்களுடைய உடன்படிக்கையின் பொறுப்புகளை நிறைவேற்ற தவறிவிட்டீர்கள் - நன்மை இன்னது என்று போதிக்கவும், ஜனங்களுக்கு முன், ஒரு நல்ல மாதிரியாக இருக்கவும் தவறிவிட்டீர்கள்." என்று கர்த்தர் அறிவிக்கிறார். . (முதல் அதிகாரத்தின் விளக்கம்)

### தேவன் குற்றஞ்சாட்டுகிறார், இஸ்ரயேல் செவிக்கொடுக்கிறது–தேவன் பதிவுகளை சரியாக அமைக்கிறார்:

குறுகிய பார்வை, மற்றும் தேவனுடைய வார்த்தையில் நிலை நிற்பதில் குறைவு, இவையணைத்தும், இஸ்ரயேல் தேவனுடைய பராமரிப்பை, புரிந்துக்கொள்வதில் உள்ள குறையை விவரிக்கும். "அவர்களுடைய எல்லா நெருக்கத்திலும் அவர் நெருக்கப்பட்டார்; அவருடைய சமுகத்தின் தூதனானவர் அவர்களை இரட்சித்தார்; அவர் தமது அன்பினிமித்தமும், தமது பரிதாபத்தினிமித்தமும் அவர்களை மீட்டு, பூர்வ நாட்களிலெல்லாம் அவர்களைத் தூக்கிச் சுமந்து வந்தார்." (ஏசாயா63:9) தேவன் இஸ்ரயேலை நேசித்தார் என்ற அவருடைய கோரிக்கைக்கு, இஸ்ரயேல் சவாலிட்ட போது, தேவன் ஏசாவுக்கு (ஏதோம்) எதிரிடையாக (யாக்கோபை (இஸ்ரயேல்) நேசித்ததை அவர்களுக்கு நினைப்பூட்டினார். ஏதோம் (ஏசாவின் சந்ததி) "துன்மார்க்கத்தின் எல்லை" என்பதை அவர் விவரிக்கிறார். (1:4) ஒபதியாவில் காணப்படுவதை போல ("ஒபதியா" Herald of Christ's Kingdom, May -June 2017) எருசலேம் மற்றும் யூதா தாக்கப்பட்டபோது, ஏதோமியரின் துரோக செயலுக்கு நம்முடைய கவனத்தை இது திருப்புகிறது.

### ஆசாரியர்களே, நீங்கள் தேவனுடைய நாமத்தை அசட்டைச் செய்தீர்கள்

ஆசாரியர்கள் - நாங்கள் எப்போது உம்மை அசட்டைச் செய்தோம்? கர்த்தர் - என் பீடத்தின்மேல் அசுத்தமான அப்பத்தைப் படைத்து, கண் ஊனமானதையும், நசல் பிடித்ததையும் பலியிட்டு, கர்த்தருடைய மேஜை வெறுக்கத்தக்கது என்று நீங்கள் சொல்லும் போது அல்லவா. இப்படிப்பட்டவைகளை உங்கள் கைகளிலிருந்த நான் அங்கிகரிப்பேனா? நீங்கள் என் பலி பீடத்தின் மேல் வீணாக அக்கினியை எரியவிடாதபடிக்கு, யாராவது ஆலயத்தின் கதவுகளை பூட்டினால் நலமாக இருக்கும். நீங்கள் எனக்கு காட்டும் மரியாதையை விட, மற்ற ஜாதியாரிடமிருந்து அதிகமாக நான் பெற்றுக் கொள்கிறேன். கர்த்தர் ஆசாரியரிடம் கோபங்கொண்டார் என்பது தெளிவாகிறது. ஆனால் இன்னும் இருக்கிறது !

ஆசாரியர்களே, இந்த கட்டளையை கேளுங்கள்! 2ம் அதிகாரம் தொடங்குகையில், "நீங்கள் கேளாமலும், இந்த கட்டளைகளை உங்கள் இருதயத்தில் ஏற்றுக் கொள்ளாமலும், இவைகளுக்கு நீங்கள் கீழ்படியாமலும் இருந்தால், உங்கள் ஆசீர்வாதங்களையும் சாபமாக்குவேன். நீ என் முன் கொண்டு வருகிற மிருகங்கள் உன் மேல் அதன் சாணத்தை சிதறப்பண்ணும். நீங்கள் ஆலயத்தில் சேவைச் செய்யாதபடிக்கு அசுத்தமாவீர்கள்.

மேலும், இஸ்ரயேலுக்கு உபதேசிக்க வேண்டிய நீ, ஜனங்களை இடறப்பண்ணுகிறாய். ஒரு ஆசாரியன் தேவனுடைய தூதனாக இருக்க வேண்டும், மாறாக உன் இளவயதின் மனைவிக்கு துரோகம் செய்து, அவளைத் தள்ளி, அந்நிய தெய்வங்களின் குமாரத்திகளை மணந்துக்கொள்கிறாய். நினைப்பது போல சுயாதீனமாக இருப்பதற்கு நம்ப முடியாதளவுக்கு, நீங்கள் தேவன் மேல் பழிப்போடுகிறீர்கள். அவர் அநீதியை ஊக்குவிப்பதாகவும், துன்மார்க்கனுக்கு தீய காரியங்களை செய்வதற்கு அனுமதி வழங்குவதாகவும் குற்றம் சாட்டுகிறீர்கள். உங்களுடைய இந்த வார்த்தையினாலும், நடத்தையினாலும் என்னை சோர்வடையச் செய்கிறீர்கள். ஆகவே, ஜனங்களின் கண்களில் நான் உங்களை இகழ்ச்சியாக்கினேன். (மல்கியா 2ன் விளக்கம்)

## உடன்படிக்கையின் தூதன் மற்றும் புதிய ஏற்பாடு

நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்டு பமிடுகிறவரையும் சுத்திகரிப்பாளராகிய உடன்படிக்கையின் தூதனானவராகிய மேசியாவின் பக்கமாக மல்கியா அவருடைய கவனத்தை திருப்புகிறார். (3ம் அதிகாரத்தில்) ஆனால் முதலாவது ஒரு தூதன் வழியை ஆயத்தம் செய்ய வேண்டும். "அதற்கு அவன்: கர்த்தருக்கு வழியைச் செவ்வை பண்ணுங்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்னபடியே, நான் வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தமாயிருக்கிறேன் என்றான்."(யோவான் 1:23) யோவான் இஸ்ரயேலரை சீர்திருத்தும்படி அழைத்து, இயேசுவுக்கு வழியை ஆயத்தப்படுத்தினார்.

கர்த்தராகிய ஆண்டவர் வரும்போது, அவர் "சகல ஜாதிகளின் விருப்பங்களை" (ஆகாய்2:7) நிறைவேற்றுவார், "சகல ஜாதிகளையும் குணமாக்குவார்" (வெளி22:2) மற்றும் அனைவருக்கும் சமத்துவத்தையும் நீதியையும் கொண்டு வருவார். தூதரும், சுத்திகரிப்பாளருமானவர், ஏற்கனவே தனது முதல் தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளார், அவர் தான் இயேசு என்று கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள். இந்த சுத்திகரிப்பு சுவிசேஷ யுக அழைப்பு முழுவதும் தொடர்கிறது. இந்த அழைப்பில் உலகத்தைவிட்டு பிரிக்கப்படுவதை குறித்து அப்போஸ்தலர்களும், விசுவாசிகளும் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார்கள். (2கொரிந்தியர்6:17-18,7:1). நாம் சுத்திகரிக்கப்பட வேண்டும் என்பதே தேவனுடைய விருப்பம். “அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப்பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக் கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்.” மல்கியா அதை வேறு விதமாக கூறியிருக்க மாட்டார்.

இஸ்ரயேலில் தேவனுடைய நியாயத்தீர்ப்பு, எல்லா பாவிகளுக்கு விரோதமாக இருக்கும் என்று மல்கியா குறிப்பிடுகிறார். ஊதியம் பெறுவோரையும், விதவைகளையும், திக்கற்ற பிள்ளைகளையும் (யாக்கோபு 1:27) ஒடுக்குகிறவர்களை குறித்து மல்கியாவின் குற்றச்சாட்டுகளை யாக்கோபு எதிரொலிக்கிறார். (யாக்கோபு 5:4) ஒரு உயர்ந்த நிலையில், இன்றைய பொல்லாத உலகத்துடன் தொடர்பு வைத்துக்கொள்ளும் "கிறிஸ்தவர்களை" விபசாரக்காரர் மற்றும் விபசாரிகள் என்று மல்கியா கண்டனம் தெரிவிப்பதை நாம் காண்கிறோம். (யாக்கோபு 4:4,வெளி 2:20) இந்த தொடர்புகளோடு, "பாபிலோனிய" கிறிஸ்துவ அமைப்புகள் கிறிஸ்துவின் தெய்வீகத்தை புறக்கணித்தது. (வெளி 17,18) அதே நேரத்தில் பெயரளவில் கிறிஸ்துவ அமைப்புகள் தீர்க்கதரிசனத்தின்படி இன்னும் பூமியின் அரசாங்கங்களில் பங்குவகித்துக்கொண்டிருக்கிறார்கள். அவைகளை தவிர்க்க வேண்டிய எச்சரிப்பு இன்னும் உள்ளது.

இருந்தாலும், தேவனை தேடும் படிக்கு, மல்கியா இஸ்ரயேலை அழைத்தார். எப்படி என்று இஸ்ரயேல் கேட்டது ? மனிதன் தேவனை திருடலாமா? நீ என்னை திருடினாய் என்று யெகோவா பதிலளித்தார்." எப்போது, எப்படி நாங்கள் உங்களை திருடினோம்?" என்று இஸ்ரயேல் கேட்டது. தசமபாகத்திலும், காணிக்கையிலும், என்று தேவன் பதில் அளித்தார். முழு தசமபாகத்தையும் களஞ்சியத்தில் கொண்டு என்னை சோதித்து அறியுங்கள், அப்போது நான் வானத்தின் பல கணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷித்து, பாதுகாப்பேன். ஆனால் நீங்களோ எனக்கு விரோதமாய்ப் பேசி, தேவனுக்கு சேவை செய்வதினால் என்ன பிரயோஜனம் என்று கேட்கிறீர்கள். (மல்கியா 3:7-10, 13-15) தீமை ஏன் செழித்தோங்குகிறது என்பதை புரிந்து கொள்வதற்கு யோபு போராடியது போல, நாங்கள் செழிக்காவிட்டாலும் "பொறுமையுள்ளவர்கள் மகிழ்ச்சியுள்ளவர் என்று அழைக்கிறோம்" மற்றும் "அக்கிரமம் செய்பவர்கள் திடப்படுகிறார்கள்" என்ற முடிவுக்கு இஸ்ரயேல் வந்தது. (3:15) எப்படியோ தேவன் தீமையை செழிக்க அனுமதிக்கிறார் என்பதால் யோபு நம்பிக்கை கொண்டார். (யோபு 21:7-9)

(7) துன்மார்க்கன் ஏன் இன்னும் ஜீவிக்கிறார்கள், தொடர்ந்து அவர்கள் மிகுந்த வல்லமை அடைகிறார்கள் (8)அவர்களுடைய கண்களுக்கு முன்பாக அவர்களுடைய சந்ததியும், அவர்களுடைய பார்வைக்கு முன்பாக அவர்களுடைய வம்சங்களும் ஸ்தாபிக்கப்படுகிறது. (9) தேவனுடைய கோல் அவர்கள் மேல் இல்லை ஆனாலும், அவர்களுடைய வீடுகளெல்லாம் பயத்திலிருந்து பாதுகாக்கப்படுகிறது."

இஸ்ரயேலுக்கு வாக்குறுதியளித்ததன் அடிப்படையில், போதுமான விசுவாசம் இருந்தால், தற்காலிக உடைமைகளிலும் ஆரோக்கியத்திலும் செழிப்படையலாம் என்று கிறிஸ்தவர்களில் பலர் முடிவு செய்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட வாக்குறுதிகள் கிறிஸ்துவின் சீஷர்களுக்கு கொடுக்கப்படவில்லை.

மாறாக, தங்ளுடைய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை போல இந்த உலகத்தில் உண்டான போராட்டம், கிறிஸ்தவர்களாகிய நமக்கு உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. செல்வமோ, ஆரோக்கியமோ அல்லது தற்காலிக வல்லமையோ இங்கு வாக்களிக்கப்படவில்லை. இந்த பாடுகளை ரோமர் 8:17,18ல் பவுல் உறுதிப்படுத்துகிறார். ஆன்மீக நலனை தவிர, இந்த வாழ்க்கையில் எந்தவிதமான சிறப்பு தற்காலிகமான உதவிகளுக்கும் எந்த உத்திரவாதமும் இல்லை.

### தேவாராதனையை முன்னுரிமைப்படுத்துதல்

கர்த்தரின் பெயரால், இஸ்ரயேலை கூட்டி சேர்ப்பதற்கு மல்கியா ஊக்குவிக்கிறார். (மல்கியா 3:16-18) "கர்த்தருக்கு பயந்தவர்கள் ஒருரோடொருவர் பேசிக் கொள்வார்கள் கர்த்தர் கவனித்துக் கேட்பார் கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும் அவருடைய நாமத்தைத் தியானிக்கிறவர்களுக்காகவும் ஞாபகப் புஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது. " விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் இந்த வார்த்தைகளை இருதயத்திற்குள் எடுத்துக் கொள்கிறார்கள். யெகோவா தேவன்தமது "பொக்கிஷங்களை" (17) ஆயத்தப்படுத்துகிறார். "நம்முடைய சிந்தைகள் புதிப்பிக்கப்படுவதினால் அதிகதிகமாக மறுரூபமாக்கப்பட்டு, நம்முடைய ஆண்டவருடைய மகிமையான சாயலுக்கு நெருக்கமாக அணுகுவதற்கு தற்போதைய வாழ்க்கையில், அங்குலம் அங்குலமாக, படிப்படியாக, கொஞ்சம் கொஞ்சமாக மகிமையின் மேல் மகிமை அடைய" நாம் நாடுகிறோம். (மார்ச் 5, மன்னா )

### கர்த்தருடைய நாள்– ஆனால் எலியா வருவதற்கு முன் வராது

"இதோ, சூளையைப்போல எரிகிற நாள் வரும்; அப்பொழுது அகங்காரிகள் யாவரும் அக்கிரமஞ் செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள்; வரப்போகிற அந்த நாள் அவர்களைச் சுட்டெரிக்கும்; அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமற்போகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." (மல்கியா 4:1). "கர்த்தருடைய நாள்" மற்றும் அதோடு தொடர்புடைய வெளிப்படுத்தலை, தண்டனை, மரணம் மற்றும் இந்த உலகத்தின் தீவிரமான அழிவாக ஒரு படம் வரையப்பட்டது. "சகலத்தையும் மறுசீரமைப்பு" மற்றும் "தேசங்களை குணப்படுத்துதல்" போன்ற கர்த்தருடைய நாள் மற்றும் கிறிஸ்துவின் திரும்புதல் ஆகியவற்றின் நோக்கம் முழுவதையும் காணாமல், அநேக கிறிஸ்தவர்கள் இந்த பயத்தை மாற்றியமைக்க வழிவகுத்திருக்கிறார்கள்.

அதிர்ஷ்டவசமாக, மல்கியா சேமிக்கப்பட்ட ஒரு கிருபையை இடையில் கூறுகிறார். யெகோவா தேவன் எலியா என்ற தீர்க்கதரிசியை அனுப்பி, "அவன் பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்கும், பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான்." (மல்கியா 4:6) இந்த அறிக்கை ஒவ்வொரு பஸ்காவின் போதும் வாசிக்கப்படுகிறது, மற்றும் எலியாவுக்கு ஒரு இடம் முன்பதிவு செய்யப்படுகிறது, ஒரு பாத்திரத்தில் அவருக்காக ஊற்றப்படுகிறது, அவர் உள்ளே வருவதற்கு காத்திருக்கிறாரா என்று பார்ப்பதற்கு பஸ்காவின் நடுவில், கதவு திறந்து வைக்கப்படுகிறது. இந்த வாக்குறுதியை, பாரம்பரியம் உயிரோடு வைத்திருக்கிறது. எனினும், உலகின் ஒவ்வொரு கால் பகுதியிலும் பிரிவுகளை வைத்து தீர்ப்பு கொடுப்பதினால், சாத்தானால் குருடாக்கப்பட்ட இந்த உலகத்தில் உள்ள உண்மையான இருதயங்களையும் கிறிஸ்தவர்களால் மாற்ற முடிவதில்லை. இவ்வாறாக நாம் "முடிவு காலத்திற்கு" வந்திருக்கிறோம். உபத்திரவங்கள் துவங்கினாலும், இன்னும் அநேக காரியங்கள் உள்ளது. ஆனால் நித்தியமான அழிவும் சோகமும் இராது !

மாறாக, உபத்திரவ காலத்திற்கு பின் "அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப் பண்ணுவேன்." (செப்பனியா 3:9) என்று யெகோவா தேவன் கூறுகிறார். சர்வவல்லவருக்கு நித்தியமாக தொண்டு செய்வதற்கு , மனுக்குலம் ஒருவரோடு ஒருவர் தோள் கொடுத்து, இணைவதால் , முடிவு காலத்தில் அராஜகம் தலைகீழாக மாறும்.

மல்கியாவின் வார்த்தைகளை நம்முடைய இருதயத்திற்குள் எடுத்துக்கொள்ளலாம். சகல சிருஷ்டிப்புக்கான தேவனுடைய அன்பு வெகு சீக்கிரத்தில் "ஜாதிகளுக்கு ஆரோக்கியம்" அளிக்கும். நீதிக்கும் பரிபூரணத்திற்கு வழிநடத்தும்" பூமியில் உள்ள பிரபுக்களில்" (சங்கீதம் 45:16)" மல்கியாவும் "ஒருவராக இருப்பார் என்பதற்கு சந்தேகமே இல்லை. "ஆனாலும் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும்; அதின் செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும்; நீங்கள் வெளியே புறப்பட்டுப்போய், கொழுத்த கன்றுகளைப்போல வளருவீர்கள்." (மல்கியா 4:2)

## இன்றைய தீர்க்கதரிசனம்

# மனித கடத்தல்



"கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும்," (லூக்கா 4:18)

அமெரிக்க அரசியலமைப்பின் 13வது திருத்தம், 150 ஆண்டுகளுக்கு முன், உடல் ரீதியாக அடிமைப்பட்டிருந்த மூன்று மில்லியன் மக்களை விடுவித்தது. ஆயினும் இன்று, உலகில் சுமார் 25 மில்லியன் மக்கள் நவீன அடிமைத்தனத்தில் வாழ்கிறார்கள். இவர்களின் அவமதிப்புக்குரிய வாழ்க்கையே, இந்த உலகளாவிய செயல்களின் முடிவு மிக அவசியம் என்பதற்கு உறுதியான சான்றாகும். அத்தகைய அடிமைகளாக இருக்கும் மக்களின் எண்ணிக்கையை அடையாளம் காண வாக்களிப்பு அறக்கட்டளை பணியாற்றி வருகிறது. காலப் குழு (Gallup Group) மற்றும் புலம் பெயர்ந்த சர்வதேச அமைப்பு, இவர்கள் விதியை கண்டுபிடித்து தீர்மானிக்க வகைதேடுகிறார்கள். அவர்களின் சில கண்டுபிடிப்புகள் கீழே வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

❋ அடிமைப்படுத்தப்பட்ட அனைத்து மக்களில் 64 சதவீதம் கட்டாய உழைப்புக்கு உட்பட்டவர்கள், 19 சதவீதம் பாலியல் ரீதியாக நாசப்படுத்தப்படுகின்றனர் மற்றும் 16 சதவீதம் அரசு நிதியுதவி பெற்ற அடிமைதனத்தில் இருக்கிறார்கள்.

❋ வீட்டு வேலைகள், கட்டுமான பணிகள், உற்பத்தி, விவசாயம் ஆகியவை, மிகவும் கட்டாயப்படுத்தக்கூடிய பொதுவான வேலைகளாக உள்ளது.

❋ 50 சதவீதத்திற்கு அதிகமான ஆண்கள் மற்றும் பெண்கள், கடன் பத்திரங்களை பயன்படுத்தி கட்டாய உழைப்பின் நாசமாக்கப்படுகிறார்கள். இது, மேலே பட்டியலிடப்புள்ள தொழிற்சாலைகளில் 70 சதவீதம் அதிகரித்து வருகிறது.

❋ இலாபத்தை கவனம் செலுத்துகின்ற 2014 அறிக்கையில், தொழிலாளர்களினால் வரும் லாபம் வருடத்திற்கு மொத்தம் 42 பில்லியன் டாலர்களாகவும், பாலியலினால் வரும் லாபம் 99 பில்லியன் டாலர்களாகவும் மதிப்படப்பட்டுள்ளது.

❋ ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியங்களில், நவீன அடிமைத்தனம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. மொத்தத்தில் 5% மட்டுமே அமெரிக்காவில் காணப்படுகிறது.

### வேதாகமத்தில் அடிமைத்தனம்

"அடிமை" என்ற வார்த்தைக்கான எபிரெய மற்றும் கிரேக்க வார்த்தைகள், "ஊழியக்காரர்" மற்றும் "பிணைப்புச் சேவையாளர்" என்றும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. (ebed, abad, shiphchah, amah, doulos, sundoulos, paidiske) வேதாகமத்தில் இரண்டு வகையான அடிமைத்தனம் விவரிக்கப்பட்டுள்ளது. ஊதியம் வழங்கப்படும் பணியாளர் மற்றும் ஊதியம் இல்லாமல் வேலை புரியும் அடிமைகள். இதில் தனி நபர்களை சொத்துக்களாக வாங்கவோ, விற்கவோ, இந்த அடிமைதனத்தோடு சம்மந்தப் படவில்லை.

எபேசியர் 6:5ம் வசனத்தில் "வேலைக்காரர்கள்" என்ற வார்த்தை, "அடிமைகள்" என்று மொழி பெயர்க்கப்பட்டால் இன்னும் பொருத்தமாக இருந்திருக்கும். இவர்களுக்கு ஏதோ சம்பளம் கொடுக்கப்பட்டது. "எஜமான்களே, உங்களுக்கும் பரலோகத்தில் எஜமான் இருக்கிறார் என்று அறிந்து, வேலைக்காரருக்கு நீதியும் செவ்வையுமானதைச் செய்யுங்கள்."(கொலோசெயர் 4:1)என்று வாசிக்கிறோம். கிறிஸ்தவ எஜமான்கள் அத்தகைய ஜனங்களை சமமானவர்களாகவும், மரியாதையாகவும் நடத்த வேண்டும் என்று பவுல் தெளிவான கட்டளைகள் கொடுக்கிறார். அவர்களுடைய வேலையின் நிலை, கிறிஸ்துவில் தங்களுடைய நிலைப்பாட்டை பாதிப்பதில்லை. மோசமான பாவிகளுக்கு மத்தியில், உள்ள அடிமையான வியாபாரிகளை பவுல் 1 தீமோத்தேயு 1:10 ல் பவுல் பட்டியலிட்டார். (வேசிக்கள்ளர், மனுஷரைத்

திருடுகிறவர்கள்) மோசேயின் நியாயப்பிரமாணம் கட்டாயமான அடிமைதனத்திற்கு கடுமையான எதிர்ப்பை தெரிவிக்கிறது." (யாத்திராகமம் 21:16)

**கைதிகளுக்கு சுதந்திரம்**

இயேசு தம்முடைய ஊழியத்தை துவங்கும போது, ஏசாயா எழுதின பகுதிகளிலிருந்து மேற்கோள் காட்டினார். மேலும் அவருடைய ஊழியம்" சிறைப்பட்டவர்களுக்கு விடுதலை" அளிக்கும் என்று கூறினார். ஆதாமின் மீட்கும் பொருளாக அவரது மரணம், அடிமைத்தனத்தில் வைக்கப்பட்டிருப்போருக்கும், மரணம் என்னும் பயங்கரமாக எஜமானரிடம் சிறைப்பட்டவர்களுக்கும் விடுதலையை உறுதிச் செய்கிறது. விடுதலைப் பெற்றவரோ, அடிமையோ, ஒருவரும் இதற்கு தப்பிபோவதில்லை." ஆதாமுக்குள் மரித்த யாவரும் கிறிஸ்துவுக்குள் உயிர்ப்பிக்கப் படுவார்கள்" (1கொரிந்தியர் 15:22) அடிமையிலிருந்து மரணம் வரைக்கும் உள்ள எல்லா சிருஷ்டிகளும் விடுவிக்கப்படுவார்கள் என்று பவுல் கூறுகிறார். "மேலும் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது" (ரோமர் 8:19-23) வாக்களிக்கப்பட்ட ஜீவனுக்குரிய ஆசீர்வதங்கள் ஜனங்களுக்கு தொடர்ந்து பெருகும்படிக்கு, ஆபிரகாமின் "வித்து", கிறிஸ்துவின் மணவாட்டி, நிறைவடைந்து, மகிமையில் வெளிப்பட காத்துக்கொண்டிருக்கிறது.

உயிர்த்தெழுதலில் இயேசுவும், அடிமைத் தனத்திலிருக்கும் அனைவரையும் விடுவிப்பார். யெகோவா தேவன் "சகல ஜனங்களுக்கும்", "கொழுமையான பதார்த்தங்களோடு, ஒரு விருந்தை ஏற்பாடுச் செய்வார்"சகல ஜனங்கள் மேலுமுள்ள முக்காட்டையும், (அறியாமை மற்றும் அவிசுவாசம்)..... இந்த மலையிலே அகற்றிப்போடுவார்.(ஏசாயா 25:6-9) கர்த்தரை அறிகிற அறிவு இந்த பூமியை நிரப்பும். அவர் "மரணத்தை ஜெயமாக விழுங்குவார்".

அதற்கு பின்,"பூமியின் எல்லைகளெல்லாம் நினைவுகூர்ந்து கர்த்தரிடத்தில் திரும்பும், ஜாதிகளுடைய வம்சங்களெல்லாம் உமது சமுகத்தில் தொழுது கொள்ளும். இராஜ்யம் கர்த்தருடையது, அவர் ஜாதிகளை ஆளுகிறார்." (சங்கீதம் 22:27,28)